حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோ[ம்] [...]

ஆசிரியர்:—மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1349 ஸபர் மீ 1930 ௵ ஜுலை மீ	இதழ் 6

OFFICE OF THE REGISTRAR OF ...
21 JUL 1930

தப்பத்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நான் இதனை ஓதுகின்றேன்).

1. அபூ லஹபின் இரு கரங்களும் நாசமடைந்தன. அவனும் நாசமானான்.

2. அவன் செல்வமும், அவனால் தேடப்பெற்றவைகளும் அவனுக்கு உதவாமற் போயின.

3. (கொழுந்து விட்டெரியும்படியான) ஜ்வாலையுடைய நெருப்பில் அவன் கடிதில் புகுவான்.

4. இன்னும் அவனுடைய மனைவியும் (அந்நெருப்பிற் புகுவாள். அவனுடையமனைவி என்பதால்) விறகு சுமப்பவளை (க்குறிக்கின்றேன்).

5. ஈச்ச நாரினாலான கயிறு அவளுடைய கழுத்திலிருக்கும்.

[*அஃதாவது:—அபூலஹபின் இருகரங்களும் அழிந்தன; அவனும் அழிந்தான். அவன் தேடிய செல்வம் புகழ் இவைகளாலும் அவனுக்கு உதவியேற்படவில்லை. அவன் கொழுஞ் சுடர்த் தீயில் சமீபத்தில் சேருவான். விறகுத் தலைச்சியாம் அவன் மனையாளும் அவன் கதி அடைவாள். அவள் கழுத்தை ஈச்சங்கயிறு இறுக்கிக்கொல்லும்*].

இவ்வத்தியாயம் நபிகள் நாயம் (ஸல்) அவர்கட்கு நபிப் பட்டம் கிடைத்ததும் அதன் துவக்கத்தே மக்காவில் தோற்றியதாகும். இதில் அல்லாஹ்வின் வெறுப்புக்கு ஆளான ஒருவனின் வாழ்க்கை என்னும் என்பதைப் பற்றி முன்னறிக்கையாக அறிவுறுத்தப்படுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிப்பதவியைப் பெற்ற பின்னர் முதன் மூன்று ஆண்டுக் காலமாக இஸ்லாம் மதத்தை அந்தரங்கமாகவேபரப்பி வந்தார்கள். அதுபோழ்து இறைவன் 'உமது நெருங்கிய உறவினர்க்கு அச்சுறுத்துவீராக' என்று வஹியின் வாயிலாய் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்குக் கட்டளையிறுத்தான். இக்கட்டளையை ஏற்றவர்களாய், நாயகமவர்கள் நான்காம் ஆண்டில், குறைஷியர்களை மக்கா

விற்கு அடுத்துள்ள ஸபா என்னும் குன்றிற்கு அழைத்துச் சென்று, அவர்களை நோக்கி, 'இக் குன்றின் பின்புறத்தே உங்களைக் கொல்லுமாறு ஒரு சேனை வந்துகொண்டிருக்கின்றது என்று நான்கூறுவேனாயின், நீங்கள் என் சொல்லை நம்புவீர்களோ?'' என்றார்கள். '...ம்; தாங்கள் எஞ்ஞான்றும் உண்மையே விளம்பும் பெற்றியாளர்களாதலால் ...ளை யாம் நம்புவோம்' என்று விடைத்தனர் அக்குறைஷியர். நாயகம் அவர் அவர்களைப் பார்த்து 'நீங்கள் ஈமான் ...வில்லையாயின் உங்கள்மீது கடுமை ... வந்திறங்கும்' என்றார்கள்.

ஆனால் அக் கூட்டத்திலிருந்த ஆபூ லஹப் என்பான் மட்டும் சீறிச் சினந்து 'இதற்கோ எம்மை நீவிர் இங்கழைத்து வந்தீர்' என்று வசை கூறுவானாயினன்.

ஏனையோர் வெருண்டு வீடு திரும்பினர். அதுகாலை அபூலஹப் நாயகம்அவர்களைக் கல்லாலடித்ததாகவும் சில சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். இதற்கு மறுமொழியாகவே இறைவன் இத்திரு அத்தியாயத்தை நபிகள் நாயகமவர்கட்கு வஹி மூலம் அறிவித்தான். அபூலஹப் என்பான் நாயகமவர்களின் சிறிய தந்தையர்களில் ஒருவன். அஃதாவது, நாயகமவர்களின் தந்தையரான ஹஜ்ரத் அப்துல்லாஹ்வின் மாற்றாந்தாயின் மகன். அப்துல் முத்தலிபின் புதல்வர்களில் ஒருவன். இவனுக்கு அப்துல் உஸ்ஸா என்பதுவே இயற்பெயராகும். இவன் அதிக அழகும் முகவசீகரமும் உடையவனாயிருந்தமைபற்றி அபூலஹப் என்னும் சிறப்புப் பெயர்பெற்றான். (லஹப் = தீச்சுவாலை; அபூலஹப் = சுவாலையின் தந்தை). தீச்சுவாலை என்னும் இவனுடைய சிறப்புப் பெயற்கேற்பவே இவன் அல்லாஹ்வுக்கும் நபிகள் நாயகமவர்கட்கும் சத்தியமதத்திற்கும் அடாத செய்கைகளைச் செய்து நரகம் புகுந்தான். இவன்பெயர் இவன் குணத்தையும் நடத்தையினையும் எடுத்துக் காட்டியது போலவே, இவன் இறுதியாகச் சென்றடையும் கதியினையும் எடுத்துக்காட்டியமை, மிகவும் வியக்கத்தக்கதாகவே உளது. தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த இஸ்லாம் மதத்தை இகழ்ந்ததைப்பற்றி இத்திருவத்தியாயம் எழுந்துளது என்பதை அறிந்த அபூலஹப் முன்னையினும் பன்மடங்கு சீற்றங் கொண்டான். நாயகமவர்களை அடித்துக் கொலை செய்யப் பன்முறை முயன்றான். ஆனால் இறைவன் தன் திருத்தூதரைக் கைவிடவில்லை யென்று கூறவும் வேண்டுமோ? வெளியூர்களிலிருந்து கஃபாவைக் கண்டு செல்ல வரும் யாத்ரீகர்களிடம் நாயகமவர்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரைக்கும் போழ்தெல்லாம், இவ் அபூ லஹப், அபூஜஹலும் நாயகமவர்களுடன் சென்று அம்மக்களிடம் "இவன் பெரும் பொய்யன்; இவன் மொழிக்குச் செவிகொடாதீர்கள்'' என்று எதிர்ப் பிரசாரம்புரிவது வழக்கமாயிருந்து வந்தது. ஈதன்றி நாயகமவர்கட்குத் தம்மாலியன்ற அளவில் பற்பல இடுக்கண்களையும் விளைத்துவந்தனர். கற்களாலும் மண்ணாங்கட்டிகளாலும் அபூ லஹப் நாயகமவர்களின் கால்கள் மீது எறிந்து துன்புறுத்தி வந்தான்.

நிற்க; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருமைப் புத்திரிகளாய ஹஜ்றத் உம்மு குல்தூம், ஹஜ்றத் ருக்கையா இவ்விருவரையும் அபூலஹபின் புத்திரர்களாய உதைபா, உத்பா இவ்விருவர்க்கும் விவாகம் செய்து கொடுக்கப் பட்டிருந்தது. எனவே, அபூ லஹப் தன் குமாரர்களைப் பார்த்து நீங்கள் எனக்குமகிழ்ச்சியை அளிப்பவர்களாயின் உங்கள் மனைவிகளை நீக்கி இச்சம்பந்தத்தை விட்டுவிட வேண்டும்' என்றான். உத்பா மட்டும் வாளாவிருந்தான். உதைபா தன் தந்தை மொழிக் கிணங்கி நாயகமவர்களை அணுகி 'உமது மகளை விலக்கிவிட்டேன்' என்று கூறியதோடு, நாயகமவர்களையும் ஏசினான். நாயகமவர்கள் இதுகண்டு துன்புற்றவர்களாய் 'நாயனே! உன்னுடைய நாய்களில் ஒன்றை இவனுக்காக நியமி!' என்றிறைவனை இறைஞ்சினார்கள். இவ்வாறாக இரு புத்ரிகளும் விவாக விலக்குப் பெற்று விட்டனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களது பகைவர் பலவாறாகத் துன்புறுத்தினர் எனினும் நாயகமவர்கள் வாயினின்றுண்டாகும் வாக்கு பொய்க்காது என்பதை மட்டும் நன்கறிந்திருந்தனர். ஆதலான், நாயகமவர்கள் இறைவனை இறைஞ்சியவாங்கு உதைபாவுக்கு புலியால் மரணம் நேரும் (அரபியர்கள் புலியையும் நாய் என்னும் பதத்தாலேயே வழங்குவர்—கல்ப் = புலி, நாய்) என்றஞ்சி

உதைபாவின் உறவினர் உதைபாவைச் சூழ்ந்து காத்தவண்ணம் இருந்தனர். என்றாலும், இவன் ஷாம் நாடு நோக்கி வாணிப நிமித்தம் சென்றக்கால், இடைவழியில் புலியாலேயே அடித்துக் கொண்டு போகப் பெற்றான். இதன் விவரம் சரித்திர நூல்களில் தெளிவாய்க் காண்க. பின்னர் இவ்விரு பெண் மணிகளும் ஹஜ்ரத் உதுமான் (றலி) அவர்கட்கு ஒருவர் மரணத்திற்குப் பின் மற்றொருவராக விவாகம் செய்து கொடுக்கப் பட்டனர் என்பதை நேயர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

அபூலஹப் பத்ருப் போர் வரையில் உயிரோடிருந்தன னெனினும், போர் முனைக்கு அவன் செல்லவில்லை. இறுதியில் குறைஷியர்கள் முஸ்லிம்களால் தோற்கடிக்கப் பெற்று அபூ ஜஹ்லு உட்படப் பல குறைஷித் தலைவர்கள் மாண்டனர் என்பதை அபூலஹப் கேள்வியுற்று மனம் பொறாது அம்மை நோயால் பீடிக்கப் பெற்றுத் துன்பத்தோடு மக்காவில் மரணமானான். இவன் பிணம் பிறரை அருகில் அணுக வொட்டாத அத்துணை நாற்றம் வீசியதால், ஒருவராலுமேயே அணுகப் பெறாமல், ஹபஷிகளால் கல்லாலெறியப் பெற்றே மூடுண்டது.

இத் தீயனையும் அவன் மனைவியினையும் இணைத்தே இவ்வத்தியாயம் குறிக்கின்றது. எனவே, மனைவியைப் பற்றியும் சிறிது கூறல் நம் கடமையாம். இவளது பெயர் உம்மு ஜமீலா என்பர்; அபூ சுப்யானின் உடன்பிறந்தாள். தன் கணவனைப் போலவே, நபிகள் பெருமானிடம் பகைமையும் பொறாமையும் கொண்டவள். நாயகமவர்கட்குப் பல இன்னல்கள் இழைத்தும் வர இவள் முயற்சித்திருந்தனள்.

நாயகமவர்களைப் பற்றிப் புறங்கூறுவதும், அவர்கள் பாதையில் முட்களிடுவதும் இவளது முக்கிய செயல்களாம் குறைஷி குலத்துதித்த ஓர் செல்வப் பெண்ணாயிருந்தும் இவளுக்குப் பேராசை என்னும் பேய் பிடித்திருந்தமையால், காடு சென்று விறகு வெட்டித் தலைமீது சுமந்து வந்து விற்றுப் பணம் பெருக்குவது இவளது தொழிலாய் இருந்தது. இவள் தான் கட்டி எடுத்துக்கொண்டு வரும் சுமையை ஈச்சங் கயிற்றால் பகுதிகட்டி எஞ்சிய கயிற்றைக் கழுத்தில் சுற்றிக்கொள்ளுவது வழக்கம். ஓர் நாள் தலையிலிருந்த விறகுக் கட்டு நழுகவும், விறகு கீழே விழ, கயிறு அவளது குரல் வளையை கீழே வீழ்ந்த விறகின் பாரத்தால் இறுக்கிவிட்டது. அதனால் அவள் அவ்விடத்திலேயே துர்மரணமடைந்தாள். இங்ஙனமாக கொழுநனும் மனைவியும் இறைவன் கட்டளைக்கு எதிர்ப்புச் செய்ததோடு திருத்தூதரையும் எதிர்த்துத் துன்பங்கள் விளைத்தமையால், இவர்கள் தம் வாணாட்களிலேயே தீய மரணத்தை அடைந்தனர்; மறுமைக்கும் வெறுமையாளராயினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குலத்திலுதித்தும் நபிகள் உயர்வடையவும் இவர்கள் தாழ்வடையவும் நேர்ந்தமை ஆண்டவன் கட்டளையின் அசைபடாத உண்மையினை எத்துணை விளக்கமாய் எடுத்துக் காண்பிக்கின்றது பாருங்கள்.

மனிதனின் ஆற்றல்கள் இருவகைத்து: அறிதல் நம்புதல் போன்றவை ஒரு வகை. சில செயல்களை ஈடேற்ற வலிமையை உபயோகித்தல் மற்றோர் வகை. எனவே திரு குர் ஆனில் உள்ள இவ்வத்தியாயத்தின் தலைப்பில் 'அபூ லஹபின் இரு கரங்கள்' என்ற பதங்களை இவ்விரு வகை ஆற்றல்களைச் செய்யவல்ல அவன் உறுப்புக்கள் என்றும் பொருள் கொள்ளலாம். சிலர் அவன் மறைவான செயல்கள் வெளிப்படையான செயல்கள் ஆகிய இருவகைச் செயல்களையும் குறிப்பதாகவும் பொருள் கொள்வர். அவனது நற்செயல்கள் துர்ச்செயல்கள் என்றும் சிலர் கருதுவர். எனின் நற்செயல்களும் நாசமடைபவோ என்பது கடா. இதற்கு அவன் தீச்செயல்களும் ஆண்டவனுக்கு வழிப்படாததும் தன் நற்செயல்களையும் அழித்தன என்று சங்கையறுப்பர் இத்திறத்தார். ஈதன்றிப் பொதுவாக ஒருவன் மேம்படினும் தாழ்வுபடினும், ஆக்கம்பெறினும் அழிவுபடினும், அறபிகள் கரங்களையே எடுத்து அடைசாற்றுதல் அவர்களின்மொழி வழக்காகும். இவ் வழக்கின்படியே அபூலஹபின் இரு கரங்கள் நாசமாயின என்பதற்கு அபூலஹபே நாசமாய் விட்டான் என்றும் பொருள் கொள்ளல் கூடும். எனவே அபூலஹபின் இரு கரங்கள் நாசமாயின என்பதை அவன் அழிந்துபடக் கடவன் என்னும் சாபமாகவும், அவன் நாசமாய் விட்டான் என்பதை சாபத்திற்கேற்ப அவன் திண்ண

மாகவே நாசமாயினன் எனவும் பொருள் காண்டல் கூடும். இப்பொருளையே இப்னு அப்பாஸ் அவர்களின் "கிராஅத்தும்" வலியுறுத்துகின்றது. எங்ஙனமெனின், அவர்கள் "வகத்தப்ப" (இன்னும் அவன் திண்ணமாகவே அழிந்துவிட்டான்) என்று கூறுகின்ருர்களாதலான்.

பொருட் செல்வத்தையும், மக்கட் செல்வத்தையும் மனிதர்கள் தங்கட்கு இடையூறு நேராது காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவும், ஆபத்துக் காலத்தில் உதவிக் கோடற்குமாம். அபூலஹப் தன் பணச் செல்வத்தையும் மக்கட் செல்வத்தையும் கண்டு தன்னைக் காப்பாற்றற்கு இவைகளையே பக்கத்துணை என்று இறுமாந்திருந்தான். ஆனல் இறைவனின் தண்டனை இவனை அணுகிய காலத்தே இவன் றன் பணம் போன வழி எங்கே? இவனது செல்வப் புதல்வர்கள் போன வழி எங்கே? யாதொன்றும் இவனைக் காப்பாற்ற முடியவில்லை. இவ்விரண்டாவது உரையில் அவன் 'தேடியது' என்பதற்கு அவனல் ஈட்டிய பொருளை என்று பொருள் கொள்ளலாம். ஆனல் அறபிகள் மொழி வழக்கில் மக்களையும் 'தேடியவை'களோடு இணைத்துப் பேசுவர். இவ் வழக்கின்படிக்கும் அவன் 'தேடியது' என்பதற்கு அவனது மக்கள் என்றும் பொருள் செய்தற்கு இடமிருத்தல் காண்க.

இவன் செய்த தீச்செயல்கட்காகவும், இவனது தீய எண்ணங்கட்காகவும், இவனது தீய கொள்கைகட்காகவும் இவன் மரணத்திற்குப் பின் நரகம் புகுவான் என்பது இவ்வத்தியாயத்தின் மூன்ரும் உரையினின்றும் புலனுகின்றது.

நான்காம் உரையின்கண், அவனது மனைவியும் நரகம் புகுவாள் என்பதைக் கூறி இருப்பதோடு, இவட்கு இத்தகைய தண்டனை தன் கொழுநன் செய்த பாவங்கட்காகவன்றி அவளாலேயே செய்யப்பெற்ற பாவங்கட்காகவே என்பதை அறிவுறுத்த 'விறகு சுமப்பவள்' என்று அவளைக் குறிப்பிட்டுள்ளது. விறகுத் தலைச்சியை அறபியில் 'ஹம்மாலத்தல் ஹதப்' என்பர். ஹதப் என்னும் பதம் விறகைக் குறிப்பதோடு, கோள் கூறல், ஒற்றறிதல், ஆகிய செயல்களையும் குறிக்கும். எனவே இவ்விறகுத் தலைச்சிக்கு இத்தகைய செயல்கள் இருந்ததையும் இத்திருவுரை எத்துணை அழகாக எடுத்துக் கூறுகின்றது பாருங்கள்.

'ஜீத்' என்னும் அறபிப் பதம் மாலைகளை அணிந்த கழுத்துக்கும் சொல்லப்படும். அவள் பணக்காரியாக இருந்தமையால் கழுத்தில் அணிகலன்கள் பூண்டிருந்தமையினையும் இப்பதம் குறிக்கின்றது. பணப் பேய்ப் பிடித்த இவள் தன் விலையின் மிக்க மாலைகளைக்கூட நாயகமவர்களுக்கு ஊறு செய்வதில் ஈடுபடுத்தத் துணிந்திருந்தனளாம். 'ஹப்லு' என்னும் பதம் நரகலோகத்துச் சங்கிலி என்று பொருள் படுவதாகச் சிலர் கூறுகின்றனர். இதன்படி அவள் மறுமையில் துய்க்கும் துன்பத்தை முன்னரேயே அறிவுறுத்தியதாகவும் கொள்ளல் கூடும்.

எவ்வாருயினும் இவ் வத்தியாயத்தால் இறைவன் வழிப்படிச் செல்லாக் கொடியர்களை இறைவன் தண்டிப்பான் என்பதையும், அவ்வாறு அவன் தண்டனை நேர்ந்த காலத்தே மக்கள், மனை, வீடு, உறவினர், நண்பர், பணம், பட்டம், புகழ், குலம் இவைகளால் அத்தண்டனையை நீக்கிக்கொள்ள முடியாது என்பதையும், உண்மை நிகழ்ச்சியை எடுத்துக் காட்டாகக் கூறி நன்கு நிரூபிக்கப்பெறுகின்றமை காண்க. வஸ்ஸலாம்.

இஸ்லாம்

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை யென்றும் முஹம்மது (சல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி சொல்வதும் தொழுகையைவிடாது நடத்தி வருவதும் ஜக்காத் கொடுப்பதும், ரம்லான் மாதத்தில் நோன்பு வைப்பதும், சென்று வருவதற்குச் சக்தியிருந்தால் ஹஜ்ஜு செய்து வருவதும் இஸ்லாமாயிருக்கும்.

நாயக வாக்கியம்

மனிதர்கள் மீது கருணை காட்டாதவனுக்கு அல்லாஹ்வும் கருணை காண்பிக்கமாட்டான்.

மேலே எடுத்துக் காண்பிக்கப் பெற்ற ஹதீது ஷரீபு எத்துணைத் தெள்ளத் தெளியதாய் உள்ளது பாருங்கள். காருண்யம் என்பதை வலியுறுத்தி, மனிதனுக்கு மனிதன் கருணையோடு நடந்து கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு கருணையோடு ஒழுகாத ஒரு மனிதன் தன்னைப் படைத்த இறைவனின் கருணையை இழந்து படுகின்றான் என்றும் இனிது எடுத்துக் கூறப்படுகின்றது. உலகத்தில் நம்மைப் படைத்துக் காத்து இரட்சித்து வரும் இறைவனின் திருக்கருணையின் பெருமையைப் பற்றிக் கூறவும் இயலுமோ? அளவில் பெருமையைத் தாங்கிய அவனது கருணையை ஒருவன் இழப்பான் எனின், இதனினும் அம்மனிதனுக்குப் பிறிதொரு துக்கத்திற்கு இலக்கான நிலைமையுமுளதோ? அவன் கருணையை இழந்து ஒரு மனிதன் எங்ஙனம் உயிர் வாழ்ந்திருப்பது? ஆனால் அவனது திருக்கருணை யாருக்கு மறுக்கப்படுகின்றது என்பதை எண்ணுங்கால், அதுதான் தம்போன்ற பிறமனிதர்களிடத்து அன்பு காட்டாத கொடியவர்கட்கே அவ்வாறு நேர்கின்றது என்பது புலனாகின்றது. பிறர்க்கு அன்பு செய்; உனக்கும் இறைவன் அன்பு செய்வான்; இல்லையேல் அவன் அன்பை இழப்பாய் என்பதில் அன்பின் தத்துவத்திற்கு இறைவன் அளித்திருக்கும் ஒரு பேராற்றல் விளங்குகின்றது. அவன் கருணையின்றி உலகமே இல்லையாதலால், அவன் கருணையை இழந்தவன் இறந்தவனினும் இழிந்தவனாகின்றான். எனவே அல்லாஹ்வுக்கு இனியனாக நாமும் அன்புடையோராய் வாழ்தல் வேண்டும். ஏனெனில் அவன் திருநாமங்களுள் ரஹ்மான் என்பதும் ஒன்றாயுள்ளது. ரஹ்மான் என்பதற்குப் பொருள் கருணாகரன் என்பதேயாம். கருணாகரனைக் கருணையிலாதார் அடைதல் எங்ஙனம்? இது பற்றியன்றோ கருணைக்கு அத்துணை உயர்வு.

நீங்கள் ரஹ்மானின் தன்மைகளை அடையுங்கள். என்னும் மற்றொரு ஹதீது. அல்லாஹ்வுக்குரிய குணங்கள் யாவை என்பதை அறிந்து, அவைகளை நம்மில் வளர்ப்பது இவ்ஹதீதின்படி இன்றியமையாத தாகின்றது. எனவே, முதலிற் கூறியவாங்கு கருணை நிறைந்த அல்லாஹ்வுக்கு நாம் அன்பராதற்கு அவனது தன்மைகளில் ஒன்றாய கருணையையும் நாம் நம்மில் வளர்த்தல் வேண்டும் என்பது ஒருதலை. பிறருக்கு அன்பு செய்வது என்பதில், துவக்கத்தில் பிறர்க்குத் துன்பு செய்யாதிருத்தலேயாம். துவக்கத்தில் பிறரைத் துன்புறுத்தும் பழக்கத்தையும், அப்பழக்கத்திற்கு அடிப்படையான எண்ணத்தையும் நாம் அகற்றிக் கொண்டே செல்ல வேண்டும். இறுதியில் பிறரைத் துன்புறுத்தும் செயல் நம்மில் அறவே ஒழிந்து அன்பு செய்யவும் தலைப்படுவோம். இதுவே கருணை பாராட்டுவதற்குரிய சாதனையாகும்.

தனக்கு விருப்பமானதை, தன்னுடைய முஸ்லிம் சகோதரர்க்காகவும் விரும்பா ஒருவரும் உங்களில் முழு மூமினாகமாட்டார்.

அதாவது 'நீ விரும்பவதை உன் சகோதரர்கட்கும் விரும்பு' என்றளவில், நீ வெறுப்பனவற்றை உன் சகோதரர்க்கு நிகழவும் நிகழ்த்தவும் வெறுக்கக் கடவாய் என்னும் பொருளும் பொதிந்து காணப்படுகின்றது. ஈதன்றி முஸ்லிம்கள் சுயநலமின்றி அன்போடும் ஆதரவோடும் ஒருவர்க்கொருவர் வாழ்க்கைமுறை நடாத்தி வருதல் வேண்டும் என்பதும் இவ்ஹதீதின் வெளிப்படையான பொருளுமாகும். அறிவுடைய ஒருவன் தனக்குத் தீங்கைத் தேடிக்கொள்ள மாட்டான். நன்மையினையே நாடிச் செல்வான். எனவே நன்மையே விரும்பப்படுவதாதலின் பிறர்க்கும் நன்மை நேரவும், செய்யவும் விழைவதே ஒவ்வொரு மூமினுடைய கடமையாகின்றது. இல்லையேல் பிறர் இன்னல்

உழக்கத் தான் இன்பம் நுகர்ந்திருக்க விழைபவனை கருணையை உடையவனென்றுக் கூறுதல் எங்ஙனம்? ஆதலாற்றான் அவன் ஒரு முழு மூமினாகமாட்டான் என்றமை. இவ்ஹதீது மேற்கூறிய ஹதீதுகளுடன் இணைந்து அவைகளை மென்மேலும் வலியுறுத்துவதோடு, அவன் ஏன் அவ்வாறு ஒழுக வேண்டும் என்பதையும் அழகிய அரிய முறையில் விளக்கிக் காண்பிக்கின்றமை காண்க.

ஆனால் ஹதீதுப் பிரமாணம் இவ்வாறாக, இதுகாலை நம் முஸ்லிம் சகோதரர்களிற்பலர் தம் மதத்தைத் தம் உயிரினும் ஆயிர மடங்கு உயர்வாக ஓம்புவதாகக் கூறியும்கூட, மேற்கூறிய ஒழுக்கங்களைக் கைக்கொள்கின்றாரிலர். முஸ்லிம்கட்கிடையே, வேற்றுமையும் பிணக்கும் போரும் வேண்டாம் வேண்டாம் என்றுகவலும் வெற்றுரையாளர் பலர், சுயநலம் பொருட்டு இவ்ஹதீதுக்கு முற்றிலும் மாறுதலாக நடந்து கொள்ளுவதை நாம் நேரில் பார்க்கின்றோம். எட்டுக்காய் கறிக்குதவாது என்பதுபோல, சகோதரத்துவம் என்பதைச் சிலர் வெள்ளேடுகளில் அச்சுப் பொறித்து வெளியிடுகின்றனரே யன்றி, இதன் தத்துவமாகிய பலனை நுகர்கின்றனரா? கையாள்கின்றனரா? என்று கேட்கின்றோம். இனியேனும் இத்தகையோர் தம் வஞ்சக வாழ்க்கையை நெஞ்சறியத் திருத்திக்கொண்டு இப்பிரபஞ்சத்தில் இனிது செய்வார்களாக. அதனால் அவர்கள் இறைவனின் அன்பிற் குரியராய் மேலேற்ற மடைவார்கள் என்பதை நாம் எடுத்தியம்பவும் வேண்டுமோ?

நபி பெருமானவர்களின் திருமொழிகள்

ஈமான்

1. அல்லாஹ்வின் மீதும், அவனுடைய மலக்குகள் (தேவதூதர்) மீதும், அவனது வேதங்கள்மீதும், அவனதுநபிமார்கள் (தீர்க்கதரிசிகள்) மீதும், கியாமத்து நாளின் (மறுமையி லெழுப்பும் நாள்) மீதும், நன்மையும் தீமையும் அல்லாஹ்வைக்கொண்டே யுண்டாகின்றன வென்றும் விஸ்வாசம் கொள்வதே ஈமானாகும்.

2. "ஈமான் என்பது யாது" என்று நபி பெருமானவர்களிடம் ஒருவர் கேட்டபோது, அவர்கள் "உன்னுடைய நற்செய்கை உனக்குச் சந்தோஷத்தையும் உன்னுடைய தீச்செயல் உனக்கு வருத்தத்தையும் உண்டு பண்ணுமானால் நீ மூமினாக (ஈமானுடையவனாக) இருப்பாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

3. அமானத் (நம்பிக்கையைக் காப்பாற்றல்) இல்லாதவனிடத்தில் ஈமானில்லை வாக்குறுதியை நிறைவேற்றாதவனிடத்தில் தீன் (மதம்) இல்லை.

4. ஈமான் எழுபது சில்வானம் பிரிவுகளைக் கொண்டது ஹயா (நாணம்)வும் அபிப்பிரிவுகளில் ஒன்று.

5. எவனுடைய இருதயத்தில் அணுப்பிரமாணமாவது ஈமானிருக்குமோ அவன் நரகத்தைவிட்டும் வெளிப்படுத்தப்படுவான்.

6. தனக்கு விரும்புவதைத்தன் சகோதரனுக்கும் (முஸ்லிம்) விரும்பும்வரை உங்களில் எவனும் ஈமான்கொண்டவனாக மாட்டான்.

7. எவன் ஒருவன் அல்லாஹ்வுக்காகவே நேசித்தும், அல்லாஹ்வுக்காகவே பகைத்தும் அல்லாஹ்வுக்காகவே கொடுத்தும் அல்லாஹ்வுக்காகவே கொடுப்பதை மறுத்தும் இருப்பானோ அவன் தன்னுடைய ஈமானை நிரப்பமாக்கிக்கொண்டான்.

8. தன்னுடைய தகப்பனையும் மகனையும் மற்றும் எல்லா ஜனங்களையும்விட. என்னை (நபி பெருமானவர்களை) அதிகமாக நேசிக்கும் வரை உங்களில் எவனும் ஈமான்கொண்டவனாகமாட்டான்.

9. உலகமானது மூமினுக்குச் சிறைச்சாலையாகவும் காபிருக்கு (ஆண்டவனுக்குமாறு செய்பவனுக்கு) ச்சொர்க்கமாயு மிருக்கிறது.

10. உங்களுடைய தோற்றங்களையும் உங்களுடைய உடைகளையும் ஆண்டவன் கவனிக்கமாட்டான் ஆனால், உங்களுடைய இருதயங்களையும் உங்களுடைய செய்கைகளையுமே அவன் கவனிக்கிறான்.

حفاظة الإسلام مدرس

முஸ்லிம்களும் கல்வியும்

"எவன் கல்வி புகட்டப் பெற்றானோ அவன் அநேக நன்மைகளை நிச்சயமாகக் கோடுக்கப் பெற்றவனாவான்."

இஃது திரு குர்ஆனின் திவ்வியத் திருவசனங்களில் ஒன்றாகும். இதனால் கல்வியைப் பெற்றவர் பலநலன்களையும் அடைந்து இன்பந் துய்ப்பர் என்று தெளியக் கிடக்கின்றது. ஈதன்றித் திரு குர்ஆனில் கல்வியைப் பற்றியும் கல்வி பயின்றாரைப் பற்றியும் பற்பல இடங்களில் பரக்கக் காணலாம். கல்வி கற்கவேண்டும் என்பது கட்டளையுமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கல்வியின் இன்றியமையாத் தன்மையைப் பற்றியும் அதன் உயர்வைப் பற்றியும் பலவிதமாகத் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதுடன் முஸ்லிம்களுக்குள் கல்விச் செல்வத்தை வளம்படச் செய்வதற்காக அரும்பெரும் பாடுபட்டு முன்னின்று உழைத்து மிருக்கின்றார்கள். பத்ருப் போரின்கண் முஸ்லிம்கள் வசம் கைதியாய முஷ்ரிக்குகளில் பலர் முஸ்லிம் சிறார்கட்குக் கல்வி போதித்து இதன் பலனாக விடுதலை பெற்றமையை நம் முஸ்லிம் சமூகத்தில் யாரே அறியாதார்? மேலும் ஸஹாபிகளிற் பலர் பிறமொழிகளைக் கூடக் கற்றுணர்ந்து கல்வியை முன்னேற்றுவிக்க முதனின் றுழைத்து வந்திருக்கின்றனர். நபிகள் நாயமவர்கள் காலத்திற்குப் பின்னரும் கூட குலபாயராஷிதீன்களாகிய ஹஜ்றத் அபூபக்கர் சித்தீக், உமர் பாறூக், உதுமான், அலீமுர்த்தலா (ரிள்வானுல்லாஹிஅலைஹிம்) ஆகியவர்கள் தங்கடங்கள் அதிகாரத்தில் கல்வியைச் செவ்வனே பரப்ப முயன்றதோடு, கல்வி பயின்ற விற்பனரை வேற்றாழியம் செய்யவொட்டாமல் அக்கல்வியைத்தானே மென்மேலும் வளர்த்துப் பயிற்றிவருமாறு செய்ததுடன், அவர்கள் குடும்பங்களை அரசாங்கப் பொருளுதவிகொண்டு காத்து வந்தார்கள் என்பதையும் நம் சகோதரர்கள் நன்கறிவார்கள். அவர்கள் காலத்தே கற்றார்க்கு உண்மையிலேயே சிறப்பும் பெருமையும் புகழும் உண்டாயிற்று. அவர்கள் தங்கள் காலத்தில் மட்டுமன்றி பிற்காலத்தும் கூட, முஸ்லிம்களின் கல்வி குன்றிப்போகாதவாறு அதற்குரிய பல அரிய முயற்சிகளையும் திட்டங்களையும் செய்துவைத்துச் சென்றிருக்கின்றார்கள். இவ்வாறு இப்பெரியார்கள் கல்விக்கோர் ஆக்கம் அளித்துச் சென்றமையின் பலனாய், இவர்கட்குப் பிற்காலத்துதித்த பனூ உமய்யா வம்சத்தினரின் ஆட்சிக்காலத்தில் அடிக்கடி அரசியல் விவகாரங்கள், புரட்சிகள், சண்டைகள் இவைமலிந்திருந்தும் கல்வி வளர்ச்சி மட்டும் யாதொரு இடையூறுமின்றி ஓங்கித் தழைத்து வந்தது. இங்ஙனம் கல்வியைக் கைவிடாமல் அக்காலத்தில் நம் பெரியார்கள் கையாண்டு வந்தமையினாலன்றோ நாம் இக்காலத்தில் பல சிறந்த ஞானாசிரியர், இமாம்கள், மேதைகள் ஆகியவர்களின் நூல்களைப் பயின்று பலனடைகின்றோம். அங்ஙனம் அதுகால் எண்ணிறந்த கல்வியறிஞர் இருந்தனர் என்பதை நாம் சரித்திர வாயிலாகவும், அவர்கடம் நூல்கள் வாயிலாகவும் நன் கறிகின்றோம்.

நமது இஸ்லாம் மார்க்கத்தில் தோன்றிய முஜ்தஹிது முத்லக்கு (மார்க்க நிபுணர்) களில் பெரும்பான்மையோர் பனூ உமய்யா வம்சத்தினின் ஆட்சிக் காலத்திலேயேவாழ்ந் தவர்களாவர். இவர்கட்குப் பின் ஏற்பட்ட அப்பாஸிய்யா வம்சத்தினர் தம் ஆட்சிக் காலத்தே அரசாங்க வருவாயில் பெரும் பகுதியைக் கல்வி வளர்ச்சிக்கே ஈடுபடுத்தியதுடனின்றி, பிறமொழிகளில் உள்ள அரிய நூல்களையும் அறபியில் மொழிபெயர்க்கச்செய்து அவைகளை அழியவிடாமற் காப்பாற்றியதோடு கல்வி அறிவே யற்று இருளில் மூழ்கிக் கடந்த வெள்ளையர்கட்கும் பரப்பி வந்தனர். மேனாட்டார் துவக்கத்தில் வானசாஸ்திரம், கணித சாத்திரம் முதல் எண்ணிறந்த பல சாத்திரங்களையும் அறபிகள் மூலமாகவே கற்றுக் கொண்டனர் என்பதை அவர்கள் மறுப்பதில்லை. எனவே, மேனாட்டினர்க்கும் கல்வி புகட்டிவந்த நம் சமூகமானது இன்றைக்கு அக்கல்வி அறிவில் பின்னணியில் இருந்து வருவதைக் கண்டு நாம் கண்ணீர் உகுக்க வேண்டி யிருக்கின்றது. இவ்வுலகத்திலேயே இந்தியா நாடு கல்வியறிவில் மிகமிகத் தாழ்ந்தோர் நாடாகும். இத்தகைய நிலைமையில் உள்ள நாட்டின்கண், ஏனைச் சமுகங்களைப் பார்க்கினும் நம் சமூகம் கல்வியறிவில் மிக மிகத் தாழ்ந்திருப்பதை எண்ணுந் தோறும் நம் மனம் புழுங்குகின்றது. இந்த நிலைமை இந்திய முஸ்லிம்கட்கு ஏற்பட்டமை என்னை? இந்திய முஸ்லிம்கள் ஆண்டுவந்த சமூகத்தினராயிருந்து இது கால் ஆளப்படும் சமுகத்தினராக இருக்கின்றனர். தம் பதவிகளைப் பற்றிக்கொண்ட ஆங்கிலேயர்களுடன் ஆட்சி முறையிலும் மற்றும் பல துறைகளிலும் முஸ்லிம்கள் கலந்து அவர்கட்கு ஊழியம் செய்வதற்கு இணங்காதவர்களாய் இருந்தனர். ஆங்கிலேயர் கலைகளைக் கற்றுணரவும் இவர்கள் மனம் இடந்தராமலிருந்தது. இத்துடன் தமக்கு வழக்கமாய் இருந்துவந்த ஆடம்பரப் பழக்க வழக்கங்களையும் சட்டென நிறுத்திக் காலத்திற்கேற்ப நடந்து கொள்ளாமலு மிருந்து விட்டனர்; இதனால் கல்வியில் பின்னணியில் இருக்க நேர்ந்தமையுடன் செல்வமும் தக்க வருவாயின்றிக் குறைந்து போயிற்று. மேலும் முஸ்லிம்களிடம் இருந்த பாரசீக அறபிக் கலைகளை அந்நிய அரசாங்கத்தினராய ஆங்கிலேயர்களால் ஆதரிக்கப்படவில்லை. ஆங்கிலேயர் தங்கள் ஆட்சிமுறையை வலிமைப் படுத்துவதிலேயே கண்ணோக்கமாய் இருந்ததனால் அவர்கள் தங்கள் ஆட்சி முறைக்குறிய ஆங்கிலப் படிப்பும் அதற்கொத்த அறிவையுமே புகட்டிவரத் தலைப்பட்டார்களே யன்றி, முஸ்லிம்களின் கல்வி கேள்விகளின் வளர்ச்சிக்கு அவர்கள் எட்டுணையும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, முஸ்லிம்கள் தாமாகவே, அரசாங்க ஆதரவின்றித் தம்மாலியன்றவரையில் பாரசீக அறபிக் கலைகளை நம் நாட்டில் வளர்க்க முயன்றனர். எவ்வாறெனினும் கல்வி பெரும் பொருட் செலவின்றி அடையக்கூடாததோர் செல்வமாதவின் சிக்கனம் என்பதைப்பற்றிச் சிறிதும் அறிந்து கொள்ளாமலிருந்த முஸ்லிம்கள் இம் முயற்சியிலும் வெற்றிபெற்றிலர். இந்நிலையில் இதர நம் ஹிந்து நண்பர்கள் கிடைத்த தருவாயைக் கைவிடாது ஆங்கிலேயர்களின் கல்வியைக் கற்கலாயினர். இதன் பலனாய் அவர்கட்கு ஆங்கிலத் துரைத்தனத்திற் பல உயரிய பதவிகளும் கிட்டின. இதன் பின்னர்தான் நம்மவரிற் சிலர் ஆங்கிலக்கல்வியைப் புகட்டத் தலைப்பட்டாரெனினும் இம்முயற்சியிலும் முழுப் பலன் பெறாமல் தளர்ந்தனர். ஆங்கிலங் கற்க முயன்ற காலத்தில் நம்மவர்கட்குப் பல இடையூறுகள் இருந்தன வென்பதை மறுக்க முடியாது. நஞ் சிரார்கள் பிறமதத்தினரின் பாட புத்தகங்களைக் கற்க நேர்ந்ததுடனின்றி, இத்

தயை ஆங்கிலக் கல்லூரிகளை நிறுவிய கிறிஸ்துவப் பாதிரிகள் நம்மவர்கட்குப் போதிய மார்க்க அறிவும் புகட்டுவதற்கு அவர்கள்பின் வாங்கினுர்கள் என்றே கூறலாம் பிறமதத்தினரின், மேலும், பிறமதப் பிரசாரகர்கள் நிறுவிய கல்லூரிகளில் நம் சிறுவர்களின் மார்க்க ஞானம் எவ்வாறு வளர்க்கப்படும்? அப்பிரசாரக வேலையைக் கொண்ட பாதிரிகள் தங்கள் கல்லூரிகளைப் பிரசாரகவேலைக்கே முதன்மையாக ஈடுபடுத்தினுர்களன்றி, நம் மதத்தின் ஆக்கத்திற்கு எட்டுணையும் உரனளித்தார்களல்லர். முஸ்லிம் சிறுவர்கள் கிறிஸ்துவருடைய மதக் கோட்பாடுகள் நிறைந்த பாட புத்தகங்களையே கற்கும்படி நேர்ந்தது. மேலும் இஸ்லாம் மார்க்க அறிவு கொண்ட பாடநூல்கள் நம்மவர்களால் அதுகாலை இயற்றப்பெறவில்லை. எனவே, இவ்வாங்கிலக் கல்லூரிகளால் முஸ்லிம் சிறுவர்கள் பெரும் பான்மையாகக் கல்வி பயின்றுகொள்ள முடியாமற் போனதுடனின்றி, அவ்வாறு கல்வி கற்கச் சென்ற சிலரும் தம் சொந்த மார்க்கத்தில் பக்தி குன்றியவர்களானுர்கள் என்பது மிகைபடக் கூறியதாகாது. அன்றியும் பெற்ருேர்களே ஆங்கில மொழிப் பயிற்சியற்றவர்களாய் இருந்தமையால் அவர்களும் தங்கள் சிறுவர்கட்கு எத்தகையப் படிப்புக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது என்பதை அறியாமல் வாளாவிருந்தனர். தம் நாகரீகத்திற்கும் மார்க்கத்திற்கும் உரிய நூல்களாலும் மொழிகளாலும் கல்வி பயிற்றப்பெறுமாயின், அவ்வறிவில் பயின்றபெற்ருேர்களும் தம் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்கத்துடன் கவனித்துத் தக்க இடங்களிலும் சீர்திருத்திவருவர். ஆதலால் பிறமொழியில் பயிற்றப்படும் நூல்களைப் பயினும் தம் சிறுவர்களின் கல்வியில் இருந்த குறைப்பாட்டை நம்மவர்களால் நிவர்த்திக்க முடியாமற் போனது. எனவே, நாளாவட்டத்தில் ஆங்கிலம் பயிலத் தலைப்பட்ட நம் சிருர்கள் இஸ்லாமிய மத ஒழுக்க வழக்கங்களில் பிற்போக்கடைந்தனர் என்பதில் வியப்பொன்றுமில்லை. இதன் பயனுய் ஆங்கிலம் கற்பதே நம் மத ஆசாரங்கட்கு முரண்பாடாகும் என்று கூற இடமுண்டாயிற்று. இதுபற்றியே கல்வியைக் கண்ணுய்ப் போற்றிய இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றிய நம்மவர்கள் இற்றைஞான்று பெரும்பாலும் அத்தகைய கல்வி நலனின்றி அல்லலுறுகின்றனர். இப்போழ்து நம்மவர்களிற் பலர் நம் சமூக நிலைமையை உயர்த்துவான் நம்மவர்கள் ஆங்கிலத்தையும் நம் மதக் கல்வியையும் ஒப்பப் பயிலவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர். இப்பொழுது கலாசாலைகளிருக்கும் நிலைமையில் சிறுவர்கள் ஆங்கிலத்தையும் அதனேடொப்ப மத ஞானத்தையும் சரிவரக் கற்றுக்கொள்வது எளிதான செயலாயில்லை. இவ்விரண்டு விதமொழி, இயல்களை ஏககாலத்தில் கற்பதற்கும் தக்க, போதிய, கல்லூரிகள் இல்லை. ஏனெனில் ஆங்கிலச் கல்லூரிகளில் மதப் படிப்பு ஊட்டப்படுவதில்லை. நமது மதக்கல்லூரிகளில் ஆங்கில அரசியற் கல்வி போதிக்கப்படுவதில்லை.

எனவே இக்காலத்துக்கு இன்றியமையாத ஆங்கிலக் கல்வியையும் நம் மார்க்கத்திற்கு மிகவும் அவசியமான அறபி, பாரசீகக் கலாஞானத்தையும் ஏககாலத்தில் நம்மவர்கள் பெறுதற்குப் போதிய பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், இவைகள் அவசியம் ஏற்படவேண்டும். இஃது எளிதான செயலன்று. மிகுந்த பொருள் இதற்கு வேண்டியதாயிருக்கும். இவைகளை நிறுவதற்கும் பற்பல இடையூறுகள் தோன்றவும் கூடும். எனினும் ஏனைய சமூகங்களைப் போலவே, நாமும் கல்வியறிவில் தலைப்பெய்துதல் நமது கடமையாதலாலும், நாம் இனி அரசியலிலும், மற்று எத்துறையிலும் பின்னணியில் இல்லாது முன்

னணியில் செல்லவேண்டியிருத்தலானும், நம் பொது சமூகமும், சிறப்பாய் நம் செல்வர்களும் உயர்தர உத்தியோகங்களில் இருப்பவர்களும் மிகுந்த ஊக்கத்துடன் இத்தகைய கல்விக்குரிய வசதிகளைத் தேடிக் கொடுக்க முனைந்து நிற்றல் வேண்டும். அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் மதவியலைப் பயிற்றவும், மதப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வியைப் புகட்டவும் பாடுபட வேண்டும். சின்னஞ்சிறு பருவத்திற்றானே, நம்மத முறைகளை நம் சிறுவர்கட்கு நன்கு புகட்டப்படுமாயின், அவர்கள் பிற்காலத்தே வேறு எக்கல்வியைப் பயின்ற போதினும், தம் சொந்த மத ஒழுக்கங்களை மறந்து பிறழ்ந்துபோகார் என்பது திண்ணம் இளமையிலேயே உரம்பட மார்க்க ஞானம் பயிலாமலன்றோ, நம்மவர்களிற் சிலர் தாம் நன்மை செய்கின்றோம் என்றெண்ணி தவறான முறைகளிலும் நம் மார்க்கத்தைப்பற்றி அறியவும், அவ்வாறு அறிந்தமைக் கேற்பப் பிரசாரம் புரியவும் கூடத் தலைப்படுகின்றார்கள். எனவே நம் சிறுவர்கள் வைதீகத்தையும் லௌகிகத்தையும் ஒருங்கே போதிக்கப் படுவதற்கும் முன்னையது பிறழ்ந்து கற்பிக்கப்படாதவாறு போதனை முறையிலும் அவசியமான சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் நம்மவர்கள் முன்வர வேண்டும் என்றும், இதற்குரிய வசதிகளை அரசாங்கத்தாரும் முன்னின்றளித்தல் வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றோம்,

---

ஆராய்ச்சி மேடை

ஜவாஹிருல் புர்க்கானிலும் இப்னுதைமிய்யா.

மௌலவி அப்துல்கரீம் சாஹிப் (பாக்கவி) எழுதுகிறார்:—

“மேலும், நாம் நமது அடியாருக்கு இறக்கியதில் நீங்கள் சந்தேகப்பட்டு (அதில்) நீங்கள் உண்மையாளர்களாகவு மிருந்தால் அல்லாஹ்வைத் தவிர உங்களை ஆமோதிப்பவர்களையும் (உங்களுக்கு உதவியாக) நீங்கள் அழைத்துக்கொண்டு இதைப்போன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள். ஆனால், அவ்விதம் செய்ய உங்களால். ஒரு போதும் முடியாது. நீங்கள் அவ்விதம் செய்யாவிட்டால் மனிதர்களும் கற்களும் விறகாகின்ற (நரக) நெருப்புக்குப் பயந்து கொள்ளுங்கள். அது (இவ் வேதத்தை) நிராகரிப்பவர்களுக் கெனச் சித்தப்படுத்தப்பட் டிருக்கின்றது.”

இத் திருவசனங்கள் திரு குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விபரம் யாதெனின் நபிகள் நாயக மவர்கள் காலத்திலிருந்த இஸ்லாத்தின் விரோதிகள் திரு குர்ஆனை நபிகள்நாயக மவர்கள் தாங்களாகவே கற்பனை செய்து இட்டுக் கட்டிக் கூறுபவைகளென்றும் அல்லாஹு தஆலாவால் அருளப்படவில்லை என்றும், ஆகவே நாயகமவர்கள் நபியல்ல வென்றுங் கூறிக்கொண்டிருந்தார்கள். தவிரவும் அக்காலத்திலுள்ள அறபிகள் கவியாப்பிதிலும் பேச்சு வன்மையிலும் அதிகத்திறமையுள்ளவர்களாக இருந்தனர். ஆதலால், இறைவன் அவர்களை நோக்கி நீங்கள் எமது அடியார் நபி என்பதில் ஐயுற்று அவர் கூறிய திரு குர்ஆன் வசனங்கள் அவராலேயே கற்பிக்கப்பெற்றனவென்று கூறுவதில், உண்மையாளர்களாக யிருந்தால் அவ்வேதத்திலுள்ள அத்தியாயங்களில் ஏதேனும் ஒன்றுக்குச் சமமாக நீங்களும் ஒரு அத்தியாயத்தை

இயற்றிக்கொண்டு வாருங்கள்' என அறை கூறி அழைத்ததுடன், 'அவ்வாறு நீங்கள் இயற்ற முடியாவிட்டால் மனிதர்களும் கற்களும் விறகாகின்ற நரகநெருப்பில் வேதனை செய்யப்படுவீர்கள். ஆதலின் அதற்கு நீங்கள் அஞ்சுங்கள். இந்த நரகம் காபிர்களுக்கெனச் சித்தப்படுத்தப்பட்டிருக்கிறது' எனக் கூறி இருக்கிறான்.

நமது பா. தாவூத் சாகிப் தம்முடைய ஜவாஹிருல் புர்கான் என்ற புத்தகத்தில் இவ்வசனங்களுக்கு விரிவுரை கூறுங்கால் தமது காதியானிக் கொள்கைகளை வலிந்து உட்புகுத்தி இருக்கின்றார். அவர் கற்கள் என்ற பதத்தைப்பற்றி விரிவுரைஎழுதிவிட்டு இறுதியில்

"இத்தகைய நரகமானது குப்ரினால் தோன்றுமென்று ஈண்டு தெரிந்து கொள்கிறோம். ஆதலின், அவரவர்கட்கு அவரவர்களின் குப்ரின் அளவுக்குத் தக்கவாறே நரகவேதனையுண்டாகும் இதனால் தான் ஸஹாபாக்களும் தாபியீன்களும் நரகத்துக்கு ஒருகாலத்தில் அவசியமாக முடிவுண்டென்று ஒத்துக்கொண்டிருக்கின்றனர்கள். அல்லாமா இப்னுதைமிய்யா அவர்கள் அநேக ஆதாரங்களைக்கொண்டு இவ்விஷயத்தை எடுத்தெழுதி இருக்கிறார்கள். (அல்லாமா இப்னு தைமிய்யாவைப்பற்றி மே மாத சஞ்சிகையில் விரிக்கப்பட்டிருக்கின்றமை கவனிப்பீர்களாக). அதாவது ரிவாயத்துகளிலிருந்து நகரத்தில் ஒருவருமில்லாமற்போகக் கூடிய ஒருகாலம் வருமென்னும் விஷயம் விளக்கமாகக் காணப்படுகிறது. ஆதலின் அங்கே ஒருவருமில்லாமல் அதன் கொள்ளியும் எரிந்து போன பின் அங்குள்ள தீயும் அணைக்கப்பட்டுப் போம். இதன் முழுவிபரம் பின் 11 வது ஸூறுவில் விளக்கப்பட்டிருக்கிறது'' என வரைந்திருக்கிறார்.

இத் திருவசனத்தில் காபிர்களுக்காக நரகம் சித்தமாக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நரகம் இப்பொழுதும் தயாராகவே இருப்பதாகவும் காபிர்கள் அதில் வேதனை செய்யப்படுவார்கள் என்றும் தான் அறியக் கிடக்கின்றதே அன்றி, நரகமானது குப்ரினால் தோற்றுகிறது என்றுகண்டுகொள்வதற்கும், அவரவர்கட்கும் அவரவர்கள் குப்ரின் அளவுக்குத் தக்கவாறே நரகவேதனையுண்டாகும் என்று தெரிந்துகொள்வதற்கும் இத்திருவசனத்தில் எவ்வித ஆதாரமும் கிடையாது. நண்பர் தாவூத்சாவுக்கு நரகம் சொர்க்கம் இருப்பதாகவோ அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்த நல்லடியார்கள் சொர்க்கத்தை அடைவதாகவோ கடுகளவும் நம்பிக்கை கிடையாது. இவருடைய இந்த நம்பிக்கையை வற்புறுத்துவதற்காகவே அவர் திரு குர்ஆனில் நரகம், சொர்க்கம் பாப மன்னிப்பு ஆகியவைகளைப்பற்றிச் சிறிது பிரஸ்தாபம் வந்தாலும் தமது கொள்கைக்கிணங்க இரண்டொரு வாக்கியங்களை எழுதாமலில்லை. இவர் எழுதிய மேற்படி வாக்கியங்களை மறுக்கப்புகுமுன் அவருக்கு சொர்க்க நரகம் உண்டு என்பதில் நம்பிக்கை கிடையாது என்பதைப் பற்றி நேயர்களுக்கு ஆதாரங் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது வருமாறு:—

1926-ம் வருஷம் ஜூன் ஜூலை மாதங்களில் வெளியான தாருல்இஸ்லாம் வெளியீடுகளில் தாவூத் சாகிப் முஸ்லிம்களின் சொர்க்கம் என ஒரு கட்டுரையைத் தலையங்கமாக வரைந்திருக்கிறார். அதில் அவர் கூறி இருக்கும் அநேக தவறுகளுள் ஈதொன்றாகும்:...

இஸ்லாத்தின் உண்மையை ஊன்றி நோக்குங்கால், இம்மார்க்கத்தின் சுவர்க்கமும் நரகமும் மரணத்திற்குப் பின் நிகழக்கூடிய ஆத்மாபிவிருத்தியின் வெவ்வேறு விதமான இரு நிலைமைகளைச் சுட்டிக் காட்டுகின்றனவென்று மிக நன்றாக அறிந்துகோள்கிறோம்.''

எனவே சுவர்க்கமும் நரகமும் இரண்டு இடங்களின் பெயரல்ல வென்றும், ஆனால் இரண்டு நிலைமைகளின் பெயரே என்றும், அல்லாஹுதஆலாவின் திருவசனத்தால் தெரிந்து கொள்கிறோம்.............................
(இவை குர்ஆனின் எத் திருவசனத்தினின்றும் தெரிந்துகொண்டாரோ தெரியவில்லை)

இகலோகத்தில் நாம் உயிருடன் இருந்து வருங் காலம் வரை நம்முடைய பௌதிக பூத சரீரமானது நம்மை ஒருவித எல்லைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. ஆனால் இந்த ஸ்தூலதேக விலங்கை விட்டு ஸூக்ஷ்ம ஆன்மாவானது விடுக்கப்படுங்கால் அது நூர் (தேஜஸ் என்று சோல்லக்கூடிய ஒருவகைச் சாதனத்தால் சூழப்பட்டு, மேன்மேலும் விருத்தி யடையக்கூடிய துல்லிய நீர்மையையும் கைவரம் பெறநிற்கும். அதன்பின் அந்த

நூரே அந்த ஆன்மாவைப் பரலோக யாத்திரையில் நெடுந்தூரம் அழைத்துச் செல்லும். இது தான் முஸ்லிம் சுவர்க்கமாகக் கருதப்படுகிறது. ஆனல் முஸ்லிம் நரகமென்பது மேற்கூறிய நிலைமையின்நேர்மாறான தன்மையைக் குறிக்கும் ……………எல்லாச் சக்திகளையும் வளரவொட்டாமல் தடுத்து ஸ்தம்பிக்கும்படிச் செய்துவிடும் நிலைமையே நரக வேதனையாய் வந்து முடிகின்றது………………………………………

மேற் கூறப்பட்டிருக்கிற வாக்கியங்களிலிருந்து தாவூத்சாவின் கொள்கை இன்னது என்பதை அறிய புத்தி கூர்மை வேண்டுவதில்லை. ஆகவே இக்கொள்கைக்கு இசைய அவர் தமது விரிவுரை நூலின்கண் மேற்கண்ட அத்தியாயத்தில் கூறப்பட்ட கற்கள் என்ற பதத்திற்கு பொருள் வரைந்து இருப்பதில் நரகமில்லை எனத் திடுமெனக் கூறிவிட்டால், அவருக்குப் பகிரங்க எதிர்ப்பும் திடுமென வருமென்றஞ்சியவராய், "நரகத்தீயின் இரையானது மனிதர்களாகவும் கற்களாகவும் இருக்குமென்று இவ்வாயத்து கூறுகிறது" என முதலில் ஒத்துக் கூறிவிட்டு, அறபி அகராதியைப் புரட்ட ஆரம்பித்து விட்டார். ஹஜர என்ற பதம் தடுத்தான், மறித்தான், ஊறு செய்தான் எனப்பல பொருளைக் குறிக்கும் என்று எழுதிப் பின்னர், இப்பொருள்கள் சரிதான் என்பதற்குப் பல எடுத்துக் காட்டுகளையும் ஆண்டிருக்கின்றார். இறுதியாக நெருப்பு என்பது யுத்தத்திற்கு அறிகுறியாகும் என்று குறிப்பிட்டு, இவ்வுலகத்திலேயே நபிகள் நாயகமவர்களுடன் தாங்கள் செய்யப்போகும் யுத்தங்களில் மடிந்துவிடுவாரென்று முன்னறிக்கையாகத் தெரிந்து கொள்வோம் என்று முடித்திருக்கிறார். ஆகவே நமது தாவூத்சாகிப் ஆயத்தில் பகிரங்கமாகக் கூறப்பட்ட விஷயத்தை மழுப்பி நெருப்பு என்பதற்கு யுத்தம் என்றும், கல் என்பதற்கு கல்லைப்போல் கடினமான இருதயத்தையுடைய மனிதர்கள் என்றும், வலிந்து பொருள் கொண்டமைக்குக் காரணம் யாதென நினைக்கின்றீர்கள்? மேற்கண்ட அவரின் காதியானிக் கொள்கையே இதற்குக் காரணம் என்பதில் எட்டுணையும் இழுக்குளதோ? திரு குர்ஆன் வசனத்தில் எது கூறப்பட்டிருக்கின்றதோ, அவ்விஷயத்தை விளக்கிக் காட்டுவது நேர்மையா? அல்லது தமது மதக்கொள்கையைச் சரியெனக் காண்பிக்கத் திரு குர்ஆன் வசனத்திற்கு வலிந்து பொருள் கொள்வது நேர்மையா? என்பதை வாசகர்களே முடிவுசெய்து கொள்வார்களாக. பின்னை இவ்வுலகின் கண்ணே நன்மை தீமை செய்பவர்கள் மாண்டதும் மண்ணோடு மண்ணாக ஆகிவிடுகிறார்களா? அவர்கள் சொர்க்க நரகம் அடைவதில்லையா? என்னும் கேள்விகள் பிறக்கக்கூடுமாதலின், அதற்கு உத்தரமாகக் காட்டிக்கொள்ளும் பொருட்டு, குப்ரினல் நரகம் உண்டாகும் எனத் தெரிந்து கொள்வதாகவும், அவரவரின் குப்ருக்குத் தக்க அளவே நரகவேதனை யுண்டாகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே, இவருடைய இவ்வாக்கியத்திலிருந்து நரகம் இனிமேல் எப்பொழுதோ உண்டாகப் போவதாகவும், அதுவும் குப்ரினல் உண்டாவதாகவும், யார் யார் எந்தெந்தப் பாவத்தைச் செய்தாலும் அதற்குத் தகுந்தவாறு தண்டனை யடைந்து விடுவிக்கப் பெறுவர் என்றும் நம்பும்படி வியாக்யானம் செய்திருக்கிறார். திரு குர்ஆனே இறைவன் எல்லையற்ற அருளாளன், கருணாகரன், அடியார்கள்பால் கிருபையுள்ளவன், அடியார்கள் செய்த பாபத்தை மன்னிக்கும் தன்மையில் நிகரற்றவன் எனக்கூறிவிட்டு "அவனுக்கு இணை வைத்துவிட்டுப் பாப மன்னிப்பும் தேடாமல் இறந்து படுபவர்களின் பாபத்தை அவன் மன்னிக்கமாட்டான் என்றும், பாப மன்னிப்பும் மரணத்திற்கு முன்பே கேட்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுகின்றது. தான்செய்த பெரும் பாபத்திற்கு மன்னிப்புக் கேட்காதவருங்கூட மன்னிக்கப்பெற்று மீட்சி பெறுவர் என்று (பா. தாவின் கொள்கைப்படி) கூறப்படின், உலகத்தில் ஆண்டவனை அஞ்சி நடப்பவர்களைக் காண்பது அரிதாய்விடும் என நிச்சயமாகக் கூறலாம். இருள் சூழ்ந்த, அஞ்ஞானம் சூழ்ந்த, அக்கிரமம் நிறைந்த, பாபம் செய்வதற்கான சகல வசதிகளும் தயாராக இருக்கிற இந்நில உலகில் இச்சையுடனும், காமத்துடனும், ஆசையுடனும் படைக்கப்பட்ட மனிதன் கடவுட்குப் பயந்து இவைகளை எல்லாம் ஒடுக்கிக்கொண் டிருப்பதற்குக் காரணமேயில்லை. எவ்விதத்திலேனும் ஒருகாலத்தில் விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கை இருப்பின், இவவுலகத்தில் தன் ஆசையை அடக்கி சிறைப்பட்டாரைப் போன்று மக்கள் இருப்ப

தற்கு அவசியமே ஏற்படாமற்போம். ஆனல் நாயகமவர்களே மூமினீன்களுக்கு, அதாவது அல்லாஹ்வை வழிபடுவோருக்கு இவ்வுலகம் சிறைக் கூடமாக இருக்கிறதென்றும், காபிர்களுக்கு அதாவது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிபடாமல் தான்ருேன்றியாய் திரிவோருக்கு சொர்க்கமாக இருக்கிறதென்றும் கூறி இருக்கிருர்கள். இக்கொள்கைகளை கூர்ந்து நோக்குமிடத்து நல்லவர்கள் இவ்வுலகத்தில் கஷ்டப்பட்டு சிறைப்பட்டார்போன்று இருந்து மறுமையில் மாத்திரம் சொர்க்கானந்தத்தை அனுபவிப்பதாகவும், பொல்லாதவர்கள் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் இரண்டு முறை சொர்க்கானந்தத்தை அனுபவிப்பதாகவும், (பா. தா. கூற்றுப்படி) ஏற்படுகிறது. நாயனை அஞ்சி வணங்கி அனவரதமும் தொண்டாற்றிய நல்லார்களுக்குக் கிடைக்கும் பெரும்பேறு இதுதானு? காதியானிக் கொள்கையின் விபரீதப் போக்கை அன்பர்கள் கவனிப்பார்களாக.

அறிவே அல்லாஹ்வாம்! அறிவே முஹம்மதாம்! அறிவே இஸ்லாமாம்!

நண்பர் தாவூத்சா சாகிப் மேற்படி "முஸ்லிம்களின் சொர்க்கம்'' என்னும் கட்டுரையை முடிக்கும்போதும் மேற்கண்டவாறு எழுதி இருக்கிருர். அல்லாஹ் எத்தன்மை யுடையவன் என்பதும் அவன் மனித அறிவுக்கு அடங்கியவனு என்பதும், மனிதர்களாகப் பிறந்தவர்களில் படித்தவன் பாமரன்முதலிய யாவருக்கும் சர்வ சாதாரணமாகத் தெரிந்த விஷயமாகும். இங்கிலையில், நம் தாவூத்சா அறிவே அல்லாஹ் என்று வரையறுத்துக் கூறியிருக்கிருர். இத்தகைய மௌட்டீகமுள்ள இவர்போன்ற சிலர் இஸ்லாத்தைச் சீர்திருத்துவதாகப் பிதற்றித் திரிவதுதான் இக்காலே ஆச்சரியமாக இருக்கிறது. அல்லாஹ் என்னும் பதத்தின் பொருளே அறிவுக்கு எட்டாதவன், மறை பொருளானவன் என்றிருப்ப, இந்தப் 'பகுத்தறிவுக்'காரரின் கூற்றுப்படி அறிவுதான் அல்லாஹ்வாம்! இவ்வாறு உரைப்பவரை இஸ்லாம் மதம் என்னவென்று கூறுகிறதென்பதை இதைக் கண்ணுறும் உலமாக்கள் அறிவிக்கும்படி அவர்களைத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனி உலகத்தைச் சீர்திருத்தி மக்களுக்கு நேரான வழியைக் காட்டவந்த நபிகள்நாயகமவர்கள் மானிட வர்க்கத்தினரில் ஒருவர் என்பதும், அறபி தேசத்திலே மக்காநகரிலே குறைஷிக் குலத்திலே ஹாஷிம் கிளையிலே ஹஜ்றத் ஆமினுவின் வயிற்றில் ஹஜ்றத் அப்துல்லாஹ் என்பவர்களுக்கு புத்திரராகப் பிறந்தார்கள் என்பதும், அல்லாஹ்வின் தூதரானுர்கள் என்பதும், யாவருக்கும் தெரிந்த உண்மையே. அவ்வாறிருக்க அறிவுதான் முஹம்மது என்று எழுதியதை அறிவீனனும் மதிப்பனே?

இது நிற்க, இஸ்லாம் இன்னது என்பதை நபிகள் நாயகமவர்களாலும் திரு குர்ஆனுலும் எடுத்துரைக்கப் பெற்றுளது. முஸ்லிம்களில் பள்ளிப் பிள்ளைக்குக்கூட இஸ்லாம் இன்னதெனத் தெரியும். அத்தகைய இஸ்லாத்தை அறிவு என்று வாதிப்பது எத்துணை அறிவீனம் என்பதை அன்பர்கள் உணர்ந்து கொள்வார்களாக.

இது நிற்க; இவர் கூற்றுப்படி அறிவே அல்லாஹ்வாகவும், அறிவே முஹம்மதாகவும், அறிவே இஸ்லாமாகவும் இருப்பதாக ஏற்படுகிறது. ஆகவே அல்லாஹ் என்பதும், முஹம்மது (ஸல்) என்பதும், இஸ்லாம் என்பதும் ஒன்றுஎன்பது இவர் அபிப்பிராயமாகின்றது. முஸ்லிம்களின் முதற் கலிமாவாகிய லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரஸுலுல்லாஹி என்ற கலிமாவிலேயே அல்லாஹ் வேறு, முஹம்மது (ஸல்) வேறு என்பதை விவரித்திருக்க, இந்தக் கலிமாவைக்கூடச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் தம்மை ஓர் முழு முஸ்லிம் எனக்கூறுவது மக்களை ஏமாற்றும் செயலன்ருே? எனவே தாவூத்சாவின் இந்தக் கூற்றுகளின்படி அவர் அல்லாஹ்வையோ நபிகள் நாயகமவர்களையோ இஸ்லாத்தையோ ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்றும், அவர்களின்மீது அவருக்கு எத்தகைய நம்பிக்கையுமில்லை என்றும் தெரியவருகிறது. இவ்வாறு கருதுபவருக்கு இஸ்லாத்தின் சட்டப்படி என்னவென்றுரைக்கலாம் என்பதை உலமாக்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்'' வெளியீடு மூலமாக அறிவிக்கும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

வஸ்ஸலாம்.

குறிப்பு:—அறிவே கடவுள், அறிவே எல்லாம் என்பது இதர மதவாதிகளின் ஒரு திறத்தார் கொள்கையாகும். சில மேனுட்டா

ரும் அறிவே கடவுள் என்று கூறி, அறிவியக்கம் என்னும் ஒரு மதத்தையும் Rationalism) நிறுவியிருக்கின்றனர். எனவே, அறிவே அல்லாஹ், அறிவே முஹம்மது, அறிவே இஸ்லாம் என்னும் பா. தா. வின் கூற்றுக்கூட பிற மக்களின் கருத்தாகுமேயன்றி சொந்தக் கற்பனையாக மதிக்கப்பெறும் பெருமையை உடையதல்ல.

பெண்கள் சுதந்திரத்தைப்பற்றி ஐரோப்பிய அறிஞர்களின் அபிப்பிராயம்.

இயற்கையானது நாகரீகத்திட்டத்தை இரண்டு பாகமாகப் பிரித்திருக்கின்றது. அகக்கடமை, புறக்கடமை ஆகியவைகளாம் இவைகளில் முதலாவது பெண்களின் பொறுப்பிலும், இரண்டாவது ஆண்களின் பொறுப்பிலும் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், இயற்கையானது ஆணையும் பெண்ணையும் இரண்டு தனிப்பட்ட இனங்களாகப் பிரிக்கவில்லை. மேலும், மனித அவசியங்களைக் கவனித்து இவ்விரு பாலரின் ஐக்கிய சக்தியை (இன்ஸானேகாமிலாக) பூரணமான மனிதனைப் படைத்திருக்கின்றது. ஆண்களிடத்திலும் பல குறைகளிருக்கின்றன. ஆதலால் ஆடவர்கள் மாத்திரம் தனிமையில் பூரண மனிதராக முடியாது. அதேவிதம் பெண்களிடத்திலும் அநேகங் குறைகளிலிருக்கின்றன. ஆதலால் அவர்கள் ஆடவர்களின் கூட்டுறவின்றிப் பரிபூரண மனித வர்க்கமாதல் அரிது. ஆகவே, பெண் சுதந்திரம் எனக்கூறி அதற்காக முயற்சி செய்வோர் பிராணவாயு ஜலவாயு ஆகிய இவ்விருவாயுக்களும் சேர்ந்த ஐக்கிய சக்திதான் தண்ணீர் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டே, அவ்விருவாயுக்களையும் பிரித்துத் தண்ணீரைத் தண்ணீராகவே வைத்திருக்க முயலுபவர்களை ஒப்பர். எனவே, அவ்விரு வாயுக்களையும் வெவ்வேறாகப் பிரித்து அவைகளைத் தனியாக்கித் தண்ணீரையும் முன்போலவே வைத்திருக்க முடியுமாயின், பெண்கள் ஆண்களின் அலுவல்களிலும் சேர்ந்து கொள்வதும் அதனால் நாகரீகத் திட்டத்திலும் எத்தகைய ஆட்டமும் ஏற்படாதிருப்பது முடியும். ஆனால், அவ்விரு வாயுக்களும் பிரிந்து தண்ணீர் தண்ணீராகவே இருப்பது நடவாத காரியம் என்பது அழிபடாத உண்மை. ஜலவாயுவைப் பார்க்கிலும் பிராணவாயுவின் கனம் எவ்விதம் அதிகமாக இருக்கிறதோ அவ்விதமாகவே பெண்களைப் பார்க்கிலும் ஆண்கள் உடல் வலிமையிலும் சிந்தனை சக்தியிலும் மிகுந்தவர்களாக இருக்கின்றனர். ஜலவாயுவின் கனம் அதிகரிப்பதானது தண்ணீரின் இயற்கை நிலைக்கு ஏற்காததாக இருப்பது போலவே, பெண்கள் சுதந்திரமும் நாகரீகத் திட்டத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் இழுக்கானதாகும்.

ரிவியூ ஆப் ரிவ்யூஸ் என்ற பத்திரிகையில் பிரஞ்சு ஆசிரியரின் நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுகையில் ஸ-ஔல்வீமான் என்ற பேராசிரியர் எழுதி இருப்பதாவது:—

"பெண் பெண்ணாக இருக்கவேண்டும். அதில்தான் அவர்களுக்கு நன்மை உள்ளது. இந்த ஒரு தன்மைதான் பெண்களை மேன்மையடையச் செய்யக்கூடியது. இதுதான் இயற்கை விதித்த சட்டம். ஆகவே பெண்கள் எத்துணைப் பெண்மையுடன் நெருங்கி இருக்கிறார்களோ, அவர்களின் மதிப்பும் மரியாதையும் அத்துணை அதிகமாகும். ஆனால் அவர்கள் எத்துணை பெண்மையைவிட்டு விலகி இருக்கின்றனரோ, அத்துணைக்கு அவர்களின் கஷ்டங்களும் அதிகமாகும். மனித இல்லற வாழ்க்கை வெறுப்பானது என்றும், பரிசுத்தத் தன்மையற்றதென்றும் சில தத்துவ சாஸ்திரிகள் கூறி இருக்கின்றார்கள். ஆனால், கடவுள் ஆண்களிடத்திலும் பெண்களிடத்திலும் ஒப்புவித்திருக்கிற கட

மைகளை அவர்கள் சரியாக நிறைவேற்றுமாறு அவர்களுக்கு அளித்திருக்கும் பொறுப்புக்களையும் வசதிகளையும் அவர்கள் அறிந்து கொள்வார்களாயின் மனிதனின் இல்லற வாழ்க்கையானது மனோரம்மியமானதாகவும் நிகரற்ற பரிசுத்தத் தன்மையுள்ளதாகவும் இருக்குமென்று நான் கூறுவேன்.''

பெண் பெண்தான். ஆண் ஆண்தான். ஆதலால் எந்தப் பெண்ணும் தன்னுடைய எல்லையைவிட்டு வெளிவர முடியாது. அவ்வாறிருக்க, ஐரோப்பிய தத்துவ விற்பன்னரான இப்பேராசிரியர் பெண் பெண்ணாக இருக்கவேண்டுமென்றுரைப்பதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியமடையலாம். ஆனால், ஐரோப்பிய அறிஞர்கள் ஐரோப்பியப் பெண்களை பெண்களென ஒப்புக்கொள்ளவில்லையென்பதை நீங்கள் அறிவீர்களாயின், உங்களுக்கு இப்பேராசிரியரின் நல்லுரை வியப்பை விளைக்காது. ஏனெனில் ஐரோப்பியப் பெண்கள் தங்களின் இயற்கைக் கடன்களை மறந்துவிட்டனர். தங்களுக்கு இறைவனால் இயற்கையிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லைக்கப்பால் ஏக வீண்முயற்சி செய்து பார்க்கின்றனர். இதே பேரறிஞர் பிறிதோரிடத்தில் குறிப்பிடுவதாவது:—

"எந்தப் பெண் தன்னுடைய வீட்டைவிட்டு வெளி உலகத்திலுள்ள வேலைகளில் சேர்ந்து கொள்கிறாளோ, அந்தப் பெண் ஒரு தனிப்பட்ட மனிதனின் கடமையை நிறைவேற்றுகின்றாள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவள் பெண்ணல்லள்''.

மேலும், போதகாசிரியர் ஜூயூம் பரிரோ என்டவர் இதே பத்திரிகையில் 1895 ம் வருஷம் எழுதிய கட்டுரையொன்றில் பெண்களின் வருந்தத்தக்கதான இம் முயற்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி என்ற முறையோடு இருப்பதில் பெண்களுக்கு (மேனாட்டுப் பெண்கட்கு) அதிக வெறுப்பேற்பட்டிருக்கின்றது. இறைவன் இவர்களை எந்த நோக்கத்திற்காகப் படைத்தானோ, இன்னும் எந்த வேலைக்காக அவர்களின் அங்கங்களையும் மூளைகளையும் கொடுத்தானோ, அந்தக் கடமைகளை அவர்கள் அடியுடன் மறந்துவிட்டனர். இவர்களின் சமவயதுப் பெண்களுக்கு இயற்கையாகஏற்பட்டிருக்கும் பெண்ணின் உணர்ச்சியும் எண்ணமும் இவர்களிடம் கொஞ்சமேனும் இருப்பதாகக் காண்கிலோம். இவர்களைப் பெண்ணென்று கூறவும் முடியாது; ஆணென்று கூறவும் முடியாது. இவ்விரண்டுமில்லாமல் மூன்றாவது ஓர் இனமென்றே கூறவேண்டும். இவர்களின் உடல் அமைப்பும் கட்டும் ஆண்களுடைய உடற்கட்டிற்கும் அமைப்பிற்கும் மாறாக இருப்பதால் இவர்களை ஆண் இனத்தில் சேர்ப்பதற்கில்லை. ஆனால் இவர்களின் செய்கையும் நடைமுறையும் பெண்களின் கடமைகளுக்கு முற்றிலும் மாறாக இருப்பதால் இவர்களை பெண்ணினத்தில் சேர்ப்பதற்கு மில்லை. ஆகவே, ஐரோப்பிய அறிஞர்கள் கடவுளின் இயற்கைச் சட்டத்திற்கு எதிராக இருக்கின்ற இந்த வாழ்க்கை முறையின் பெருத்த குறையைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கின்றார்கள். பெண்களின் வருந்தத்தக்க இந்நிலைமையானது இதேமாதிரி இன்னும் ஒருகாலம்வரை நீடித்திருக்குமாயின் கடிதில் குடும்பவாழ்க்கையில் பெருத்த மாறுதலடையும் என்று அறிந்து கொள்ள வேண்டியதுதான். அம் மாறுதல் மனிதநாகரீகத்துடையவும் இல்லறவாழ்க்கையுடையவும் அஸ்திவாரத்தை ஆட்டிவைத்து விடும்.''

பெண் சுதந்திரத்திற்காக முபற்சி செய்வோர், பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அளிக்க விரும்புவோர், இறைவன் ஆடவர்களை எவ்விதமாகப் பெண்களுக்கு அடிமையாகவும் ஆளாகவும் பணிவிடைக்காரராகவும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றான் என்பதை உற்று நோக்காதிருப்பதுதான் வியக்கத்தக்கதாய் இருக்கின்றது. பெண்களுக்கு ஊன், உடை உதவுதற்காகவும், அவர்களுக்குச் சுகமாக வாழ்க்கையை உண்டாக்குவதற்காகவும் தன்னை உலகத்தின் அபாயகரமான வேலைகளுக்குள்ளும் உட்படுத்திக் கொள்ளவும், உயிருக்குங் கூட வரக் கூடிய அநேக கஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டு சமுத்திரத்தின் அடிப்பக்கத்திற்கும் மூழ்கிச் சென்று அங்கிருக்கிற முத்துக்களைக் கொண்டுவந்து பெண்களுக்குப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்கவும் இறைவன் ஆடவர்களுக்கு விதித்திருக்கின்றான். உண்மை இவ்விதமிருக்க பெண்களுக்காகப் பரிவுகொண்டு பேச முன்வந்தவர்கள் ஆடவர்களின் பணி

களில் பெண்களையும்சேர்ந்து கொள்ளும்படிச் செய்து அவர்களை தேசிய ராஜீயத் தொல்லைகளுக்கு ஆளாக்கிவிட முயலுகின்றனர். இவ்வாறு அவர்களை அல்லற் படுத்துதல் அநியாய மன்றோ? ஒருபுறம் பெண்களை வீட்டுச்கடமைகளுக்கும், மனித உற்பத்தியைக் காப்பாற்றிவரும் கடமைக்கும் பொறுப்பாளிகளாக்கி விட்டு, மறுபுறம் தேசிய ராஜீய வியவகாரத் தொல்லைகளுக்குள்ளும் தங்கள் ஜீவனோபாயத்திற்குள்ளும் உட்படுத்துவது மிகமிகக் கொடிய அநீதியாகும். ஆடவர்கள் தங்களுக்கு இயற்கையாகவுள்ள பணிகளையுங்கூட அப்பெண்பாலர்களின் தலைமீது போட்டுவிட்டுத் தங்களை விடுவித்துக் கொள்வது பெண்களை அடிமைப் படுத்துவதாகாதா? நன்றாக யோசித்துப் பாருங்கள். பெண்களை அவர்களின் இயற்கைக் கடமையாகிய வீட்டுக் காரியத்தில் சுயேச்சையாகவும் சுதந்திரமாகவும் விட்டுவிடுவதும், அவர்கள் அதை சஞ்சலமின்றியும், துக்கமின்றியும், நிறைவேற்ற ஏற்பாடு செய்து கொடுப்பதும் தான் ஆடவர்களின் நேர்மையான செயலாகும். உலக நாகரிகம் மனித வர்க்கம் பூர்ண பரிபக்குவமாதல் என்பதற்குப் பெண்கள் பூரண சுயேச்சையின் கடைசி எல்லையை அடைந்துவிடுவது தான் எனப் பொருள் கொள்ளுவதாயின், நாகரிகமற்று இருக்கும் நாட்டில் வாழு மக்கள் உலகத்திலேயே நாகரிக முன்னேற்றத்தின் உயர்ந்த பதவியை அடைந்த தேசமெனச் சொல்லிக்கொள்ளும் ஐரோப்பாவைப் பார்க்கினும் அதிக முன்னேற்ற மடைந்த தேசம் என அவைகளைக் கூறிவிடலாம். அத்தேசங்களிலோ ஆடவர்கள் களங்கமற்ற மனத்தினையுடையவர்களாகவும், குடும்ப சம்பந்தமாகவோ வேறுவிதமாகவோ உள்ள எவ்வித வேலையையும் செய்யாமல் இருந்துவருகின்றனர். எல்லா வேலைகளையும் பெண்களே ஆற்றி வருகின்றனர்.

உலக நாகரிகத்தில் ஆடவர்களைப்போல் பெண்களும் பாகம் போட்டுக் கொள்ளாமலிருப்பதற்குக் கடவுளைத்தான் இவர்கள் குற்றவாளிகளாக்க வேண்டும். பெண்களின் பிறவிக்குணம், உச்சிதொட்டு உள்ளங்கால் வரையுள்ள அவர்களின் அங்க அவயவங்கள் ஆகியவைகளெல்லாம் பெண்சுதந்திரம் எனப் பேசும் இந்தப் போலி 'வக்கீல்கள்' கூறும் வேலைகளுக்கு அவர்கள் அருகதையற்றவர்களென்பதை நன்றாய் அறிவுறுத்திக்கொண்டிருக்கின்றன. புதிய விஞ்ஞானப் போக்கிற்கு முக்கிய மூலபுருஷர் என்றும், உணர்ச்சி சம்பந்தமான தத்துவத்திற்கு ஸ்தாபகர் என்றும், ஐரோப்பா கண்டம் முழுவதும் கொண்டாடும் மேற்கண்ட அறிஞர் வீட்டுக்கு வெளியிலுள்ள வாழ்க்கையுடன் பெண்களுக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை என்றும், மனித உற்பத்தியைக் காப்பாற்றுவதும் வீட்டுக் கடமைகளை நிறைவேற்றுவதும் தான் அவர்களின் வேலை என்றும் கதறிக் கதறிக் கூறுகின்றார். இக்கருத்தை அறிஞர் புரோடன், ஆக்ஸட் கௌண்ட் முதலிய பிரபல ஆசிரியர்களும் தங்கள் நூல்களில் நுவன்றுளர். அவைகளை எல்லாம் ஈண்டுரைக்கின் கட்டுரை விரியுமென்றஞ்சி விடுக்கின்றோம்.

ஆண் பெண் என்னும் பால் வேற்றுமை மனித வர்க்கத்தில் மாத்திரமில்லை, உலகத்தில் படைக்கப்பெற்ற எல்லாவற்றிலுமே தோற்றப்படுகின்றது. செய்யும் சக்தி, செய்வதை ஏற்றுக்கொள்ளும் சக்தி ஆகிய இவ்விருவகை ஐக்கிய சக்திகளாலேயே உலக முன்னேற்றம் நிகழ்ந்து வருகிறது. எனவே, பெண்களுக்கு வீட்டு வேலையை விடுத்து வெளி வேலையில் சுதந்தரமளிக்க வேண்டுமெனக் கூறுவது, செய்வதை ஏற்றுக் கொள்ளும் சக்தியிலிருந்து செய்யும் சக்திக்குள்ள வேலையை அவர்களிடம் எதிர்பார்ப்பதாகும். இஃது கடவுள் ஏற்படுத்திய நியதியில் மாறுதல் செய்யவேண்டும் என்னும் மனப் பான்மையைக் காண்பிக்கின்றது. "எவன் அல்லாஹ்வின் நியதிகளை மீறுகின்றானோ, அவன் தனக்குத்தானே தீங்கு இழைத்துக்கொண்டான்" என்ற தெய்வத் திருமறையின் திருமொழி ஈண்டு உணரற்பாலதாம்.

உலக முன்னேற்றத்திற்கு இஸ்லாம் தடையா?

ஹாபிஸ் முஹம்மது ஸயீது சாகிப் வரைவது.

இஸ்லாம் மதமானது மக்கட்கு இவ்வுலகில் உண்மையான முன்னேற்றத்தைக் கற்பிக்கும் தூய்மையில் மிக்கதோர் மதமாகும். நேர்மையான எல்லா முன்னேற்றங்களிலும் தன்னெறிக்கண்ணே செல்லுபவர்கள் முன்னணியில் இருப்பதைக் காண இம்மதம் விரும்புகின்றது. தவிரவும் இவ்வுலகில் முன்னேற்றத்தையுங்கூட இம்மதம் நன்மையான காரியமென நிர்ணயித்திருக்கின்றது. அதாவது இஸ்லாத்தின் சட்ட திட்டங்களுக்கு விரோதமில்லாத வகையில் முன்னேற்றம் என்ற மைதானத்தில் மனிதன் தடையின்றிப் போதற்கு இம்மதம் பூரண சுயேச்சை யளித்திருக்கின்றது.

நம்முடைய அறியாமையும், காலத்தின் மாறுபாடும் நம்மை உண்மையான இஸ்லாத்தை விட்டு இவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்து விட்டன. நாம் இஸ்லாத்தின் போதனைகளையே ஓரளவில் அறியாதவர்களாக இருக்கிறோம். நம்முடைய அறியாமையின் காரணமாகச் சில சமயங்கள் நம்முடைய நாவிலிருந்து "இஸ்லாம் மதமானது மனிதனை முன்னேற்றமடையாமற் றடுக்கின்றது" என்றும் கூட வீண்மொழி உதிக்கின்றது. அல்லது நம்முடைய அறியாமையும், அந்நியர்கள் பால் நமக்குள்ள மோகமும் நம்முடைய இருதயத்தில் இம்மாதிரியான அபிப்பிராயங்களை உண்டு பண்ணிவிட்டன என்று கூடச் சொல்லலாம்.

அல்லாஹுதஆலா விதித்த விதிகளை நிறைவேற்றிய பின், மிகவும் அவசியமான காரியம் ஹலாலான, நியாயமான சம்பாத்தியமாகும் என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்கள். அதாவது நபிகள் நாயகமவர்கள் நமக்கு ஒருபக்கம் இறைவனின் வழியைப் போதிப்பதுடன், மறுபக்கம் உலகத்தில் கௌரவமாக வாழ வேண்டுமென எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள் என மேற்கண்ட ஹதீதிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, இஸ்லாம் மதம் உலக முன்னேற்றத்தைத் தடுக்கின்றதென யாவராயினும் கூற முடியுமா?

"மனிதனுக்கு அவன் முயற்சி செய்ததையன்றி வேறில்லை" என திரு குர்ஆனின் தொனியானது நமது செவிகளில் எட்டியிருக்கிறது. அதாவது 'உலகத்தில் முன்னேற்றம் என்ற மைதானத்தில் நீங்கள் முன் செல்லுங்கள்; உங்களுக்கு உங்கள் முயற்சியின் பலன்கிட்டும்' என வேதவாக்கியம் விளம்புகிறது. ஆனால், நமக்கு இப்பொழுது நம்முடைய உலக முன்னேற்றம் என்ற மைதானமும் இரண்டு பாகமாகிவிட்டது. அதாவது நம்முடைய முயற்சிகள் உலக விஷயத்தைக் கவனிக்கு மிடத்தும் நன்றுய்ப் பழுத்திருக்கின்றது. மத விஷயங்களைக் கவனிக்குமிடத்தும் நல்ல பலனளிக்கின்றமை ஒரு வகை. உலக விஷயங்களில் நாம் சுய நம்பிக்கை யிழந்து மதத்தையும் மறுமையையும் முற்றிலும் மறந்து விடுகின்றோம்; இஃது மற்றொரு வகை. எனவே, உலக விஷயத்தில் நாம் செய்யும் முயற்சிகள் மதத்தின் வரை யறைக்குள் இருக்கும்பொழுது, இஸ்லாம் மதமானது நம்மாலான எல்லா முன்னேற்றத்திற்கும் இடந்தருகின்றது. ஆனால், நமது முயற்சிகள் இகசுகம் ஒன்று பற்றியே இருக்கும்பொழுது நம்மை இஸ்லாம் மதம் மாத்திரம் தடுக்கவில்லை. நாகரீக ஒழுக்கத் தன்மையுங்கூட நம்மைத் தடுக்கின்றது. ஒரு மனிதன் தன்னுடைய வயிற்றுப் பிழைப்பிற்காகத் திருடுகின்றான்; பொய் சொல்லுகின்றான்; மோசம் செய்கின்றான்; தீயகாரியத்தைச் செய்கின்றான்; கொள்ளை கொலை ஆகியவைகளைச் செய்கின்றான்; மற்றவர்களின் பொருளைக் கவர்கின்றான்; லஞ்சம் வாங்குகின்றான்; அநியாயம் செய்கின்றான்; வஞ்சகம் செய்கின்றான் என்று வைத்துக் கொள்வோம்: அப்பொழுது அவன் தவறான

வழியில் இருக்கின்றான் என்பதில் சந்தேகமில்லை. அவன் மத வரையறையை மீறி விட்டான் என்பதிலும் ஐயமில்லை. பணம் சம்பாதிப்பதற்காக அவன் ஹலால் ஹறாம் என்ற பிரசினையையே ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விடுவனேயாயின், இத்தகைய மனிதன் உலகத்திலுங்கூட எவ்விதமான பெருமையையும் பெற்றுக்கொள்ள முடியாது. மதத்திலுங்கூட அவனுக்கு எவ்வித நன்மையும் ஏற்படமுடியாது. மத ஒழுக்கத்திற்கு இவன் வரம்பு கடந்தவனே யாவன்.

வேறொரு மனிதன் நம்பிக்கையாகவும் நாணயமாகவும் தன்னுடைய வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருக்கின்றான்; உண்மை, சத்தியம், தயை ஆகியவைகளை அவன் எப்பொழுதும் கை தவற விடுவதில்லை; மற்றவர்களின் உரிமைகளையும் அவன் எப்பொழுதும் கண்காணித்தே நடக்கின்றான்; அவன் தன்னுடைய சுய முயற்சியின் பேரிலேயே சம்பாதிக்கின்றான்; உலக வியவகாரங்களில் ஈடுபட்டிருக்கும் போதும் அவன் மதக்கடமைகளை மறப்பதே இல்லை என்று வைத்துக் கொள்வோம்: இத்தகைய மனிதன் அடையும் ஒவ்வொரு முன்னேற்றமும் நியாயமானதும் சரியானதுமான முன்னேற்றமாகும். இவ்விதமாக முன்னேறுபவர்கட்கு இஸ்லாம் என்றும் ஊக்க மூட்டி ஆக்க மளித்து வருகின்றது என்பதில் ஐயமுளதோ?

உலக முன்னேற்றத்திற்கு மிகவும் சரியான துறை வாணிபத்துறைதான் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டவிஷயம். மேலும், வாணிபத் துறையானது மிகவும் தூய்மையானது. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களே வாணிபம் செய்திருக்கிறார்கள். நாயக மவர்களைத் தவிர்த்து நம் இஸ்லாமியப் பெரியார்களில் எண்ணிறந்தோர் வாணிபமே சிவியத் தொழிலாய்க் கைக்கொண்டிருந்தனர். நீங்கள் வாணிபத்தின் மூலமாக ஊதியம் பெற விரும்புவீர்களாயின் அதனால் உங்களுக்குப் பாப மில்லை. வியாபாரத்தின்மீது கவனம் செலுத்துவதாயின் அது ஜீவனோபாயத்திற்கு மிகவும் நல்ல முறையாகும். ஹஜ்ஜுடைய காலங்களில் கூட வியாபாரத்திற்குத் தடை கிடையாது.

ஆனால், முஸ்லிம்கள் வியாபாரத் துறையைத் தான் மிகவும் அதிகமாக மறந்து விட்டமை வருந்தத்தக்க விஷயமாகும். எல்லா வியாபாரங்களும் பிற சமூகத்தாரின் கையிலிருக்கின்றன. இருக்கிற இரண்டொரு வியாபாரத்துறையுங் கூட முஸ்லிம்களின் கவனக்குறைவால் பிறர் வசம் அகப்படும் நிலைமையி லிருக்கின்றன.

இஸ்லாம் மதம் நியாயமான முறையில் உலகத்தின் எல்லா முன்னேற்றத்தையும் ஆதரிக்கின்றது. உலக முன்னேற்றம் நியாயமான வியாபாரத்திற்குள் தான் மறைந்திருக்கின்றது. வியாபாரம்தான் முஸ்லிம்களை ஒரு காலத்தில் மிகவும் உயர்ந்த பதவியில் கொண்டுபோய்ச் சேர்த்திருந்தது. வியாபாரத்தின் மூலமாகவே முஸ்லிம்கள் உலகமுழுதும் தங்களின் கொடியைப் பறக்கச் செய்தனர். ஆனால், இன்று வியாபாரத்தை முஸ்லிம்கள் கை நெகிழ விட்டுக்கொண்டிருப்பது எவ்வளவு வருந்தற்குரியதாகும். சகோதரர்களே! முஸ்லிம்கள் வியாபாரத்தை உதைத்துத் தள்ளுகின்றார்கள் என்று நினைக்காதீர்கள். அவர்கள் தங்களின் இம்மை மறுமை ஏற்றங்களையே (வாணிபத்தை உதைத்துத் தள்ளுவதனால்) உதைத்துத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள் எனக் கொள்ளுங்கள்.

முஸ்லிம்காள்! இஸ்லாம் முன்னேற்றத்தின் பாடத்தை உங்களுக்குக் கற்பித்துக் கொண்டிருக்கின்றது. முன்னேறுங்கள்! உங்களிடத்தில் கொஞ்சமேனும் ஊக்கமிருந்தால் அதை ஆதாரமாகக்கொண்டு மறுபடியும் வர்த்தகத் தொழில் மூலமாகவும், நாணயத்தின் மூலமாகவும், சத்தியத்தின் மூலமாகவும் உலக முழுதும் பரவுங்கள். ஐரோப்பாவிலுள்ள வெள்ளையர்கள் வாணிபத்தின் மூலம் உலக முழுதையும் ஆட்சி செய்கின்றனர் என்றால், முஸ்லிம்கள் போன்ற ஊக்கமுள்ள சமூகத்தினர் வர்த்தகத்தின் உதவியால், ஈமான் என்ற தெய்வபக்தியின் உண்மையான உணர்ச்சியினால் உலகத்தை மறுபடியும் கைப்பற்றி முன்னேற்ற மடையமுடியாது என்பதற்கு ஆதாரமும் உளதோ? வாணிபத்தைக் கைவிடவேண்டாம்!

இஸ்லாத்தின் ஏற்றம்

இஸ்லாம் மதம் தனது வெற்றிக்காக துருக்கியர் அப்கானியர்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லே. இஸ்லாத்தின் சுய மேன்மையும் மேலான போதனைகளும், உயரிய கொள்கைகளும் வேறு உதவியின்றியே நாகரீகமடைந்த நாட்டினரின் ஆதரவையும் பாராட்டுதலேயும் பெறுவதற்குப் போதியனவாக இருக்கின்றன. ஐரோப்பிய கிறிஸ்துவப் பாதிரிமார்களில் ஒருவரான மிஸ்டர் ஆண்டிரூஸ் என்பவர் இஸ்லாத்தின் மேன்மைகளேப் புகழ்வதில் இனிய பிரசங்கியாக இருக்கிறார். அவர் கூறுவதாவது:—

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாக வந்து "லாஇலாஹ இல்லல்லாஹு" என திருகலிமாவை எடுத்தோதும் காலத்தில் அறபிகளுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் பிணக்குகளேயும் சச்சரவுகளேயும் செய்து கொண்டிருந்தார்கள். ஒருபக்கத்தில் ரோமன் ஏகாதிபத்தியமும் மறுபக்கத்தில் பாரசீக ஏகாதிபத்தியமும் ஏக தெய்வக் கொள்கையைப் பரப்புவதில் பலமான தடைகளே ஏற்படுத்திக் கொண்டிருந்தன. இவ்விதமாக நடந்த இந்த எதிர்ப்புக்காரியங்களே எல்லாம் நான் கவனிக்கும்போது அறபி நபியானவர் ஜனங்களுக்கு ஒரு புதிய உலகத்தையும் புதிய தேவ அருளேயும் அளித்தார் என்றே உண்மையாக ஒப்புக்கொள்ள வேண்டியதிருக்கிறது."

இவ்விபரத்தைப்பற்றி அவர் விரிவாகக் கூறியிருப்பதாவது:—

எனக்கு எப்பொழுதும் இந்த மகாப் பெரிய உண்மையைப் பற்றிய உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தான் எனக்கு என் ஆசிரியர்கள் காண்பித்திருக்கிறார்கள். அதாவது துருவ நக்ஷத்திரத்தை (PoleStar) உலகம் முழுதும் சுற்றி வருவதைப்போலுள்ள இஸ்லாத்தின் மத்திய பிரதானக் கொள்கையானது ஏக தெய்வக் கொள்கை தான். இந்த அஸ்திவாரமான கொள்கையை ஆதாரமாகக் கொண்டு நடந்த சம்பவங்களேக் கவனிக்கும்போது அறபி அதிபரவர்கள் இந்தக் கொள்கையில் பூரண நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாக பல தரப்பட்ட கொள்கைகள், பலப்பல விக்கிரக ஆராதனே, இணைவைக்கும் கொள்கை ஆகியவைகள் அக்காலத்தில் இருளுக்குள்ளும் அறியாமைக்குள்ளும் ஆழ்ந்து கிடப்ப, அவைகளாலேற்பட்ட எல்லாக் கஷ்ட நஷ்டங்களேயும், இடைஞ்சல்களேயும்ஆபத்துக்களேயும் சகித்து அவைகளே வீறுடன் எதிர்க்க முடிந்தது. இன்னும் அவைகளுக்கிடையில் அந்த நபியவர்கள் ஒருகாலம் வரைப் பாதுகாவலிலிருந்தார்கள் எனினும், அந்த ஏகதெய்வக்கொள்கையானது இஸ்லாத்தின் உயிர் நாடி என்பதும், முதல் அஸ்திவார மென்பதும் இந்தக் கொள்கை கியாமத்து நாள்வரை அவ்விதமே இருந்துவரும் என்பதும் சரித்திரப் பூர்வமாகத் தெரிந்துவிட்டது. நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாக வந்து ஏகதெய்வக் கொள்கையின் திருகலிமாவாகிய "லாஇலாஹ இல்லல்லாஹு" என்ற மந்திரத்தை அறிக்கை இடும்போது அறபி தேசத்தின் அயலகத்து ராச்சியங்களின் நிலைமையை நோக்குங்கால், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லமவர்கள் உலக மக்களுக்கு உண்மையிலேயே ஒரு புதிய உலகத்தையும் புதிய வேத அருளேயும் சமர்ப்பித்தார்கள் என்றே கருதுகிறேன்.

இஸ்லாம் சம்பந்தமாக என் இருதயத்தில் இருக்கிற எல்லா நன்மைகளேயும் தற்போது நான் எடுத்துரைக்க எனக்குச் சாவகாசம் கிடைக்கவில்லே. எனினும், அவைகளில் ஒன்றை மாத்திரம் கூறுகிறேன். அதுவும் இரண்டு மூன்று வார்த்தைகளில் முடித்துக் கொள்வேன். இறைவனேப்பற்றிய ஏக தெய்வக் கொள்கையோடு இஸ்லாமிய சகோதரத்வக் கொள்கை மற்றொரு முக்கிய கொள்கையாகும் அதாவது அல்லாஹு தஆலாவின்மீது ஈமான்கொண்ட ஒவ்வொருவரும் முஸ்லிம்களில் சகோதரனுகி விடுகின்றனர்.

இஸ்லாமிய சகோதரத்துவமானது வம்சத்து, நிறத்துப் பேதங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் அறவே அழித்துவிட்டது. இது விஷயத்தில் இற்றை வரை உலகத்துள்ள எந்த மதமும் இஸ்லாத்துடன் போட்டி போடக்கூடவில்லை. கிறிஸ்துவ மதம்கூட இந்த சகோதர தத்துவத்தைப் போதித்திருக்கிறது. ஆனால், தென் ஆப்பிரிக்காவில் மாத்திரமல்ல, எங்கெங்கு கிறிஸ்துவ அரசாங்கங்களும் மாதா கோவில்களும் 'சர்ச்சு'களும் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் வம்ச வேற்றுமையும், நிற வேற்றுமையும் கிறிஸ்துவர்களின் நரம்புகளில் ஊன்றிப் போயிருக்கின்றன என்பதை நான் உறுதியாய்க் கூறுவேன்; மும்முறையும் உறுதி கூறத்தயாராக இருக்கிறேன். கிறிஸ்துவர்களின் இக்கேவலமான நடத்தையாலும் மனப் பான்மையினாலும் கிறிஸ்துவின் பெயர் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நாளும் மாசுற்று வருகிறது.

ஒரு மனிதன், அவன் எந்த சமூகத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் சரியே, இன்னும் அவன் எந்த வம்சத்தானாக இருப்பினும் சரியே, இன்னும் அவன் எந்த நிறத்தவனாயினும் சரியே, அவன் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டானாயின் உடனே அவன் எல்லா முஸ்லிம்களுக்கும் சகோதரனாகி விடுகின்றான். உண்மையாகவே, அவன் இஸ்லாமிய சகோதரத்துவம் என்னும் வட்டத்திற்குள் பிரவேசித்து விடுகின்றான்.

முஸ்லிம்களின் பெருநாட்களில் நான் அநேகம் முஸ்லிம் நண்பர்களின் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். பெருநாட்கள் அவர்களுக்கு மிகவும் புனிதமான திருநாட்களாகும். நோன்புடைய மாதம் முடிவடைந்தவுடன் ஆண்டுதோறும் திருநாள் கொண்டாடப்படுகிறது. அந்தத் திருநாளில் என்கண்ணுக்குப் புலப்பட்டவைகளின் மிகவும் பெரிய நன்மை யாதெனில், அன்றைய தினத்தின் காலை வேளையில் மிகமிகத் தாழ்மையான வேலைக்காரனுங்கூடத் தன்னுடைய எஜமானனுடன் சமத்துவமாக ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி ஆலிங்கனஞ்செய்து கொள்கிறான். அவர்களுக்குள் எவ்வித வேற்றுமையுமே இருப்பதில்லை. இத்தகைய சமத்துவமான ஆலிங்கனமானது இஸ்லாமிய சகோதரத்துவத்தின் எடுத்துக்காட்டாகும்.

ஆகவே, இஸ்லாம் மதமானது இவ்வவனியில் நிலை நாட்டிய நன்மைகளில் வம்சத்துடையவும் நிறத்துடையவும் சாதியின் ஏற்றத் தாழ்வுடையவும் வேற்றுமைகளை ஒழித்ததோடு, ஏகதெய்வக் கொள்கையைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தியது.

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தாவூத்சா இழைத்த தவறு.

குறிப்பு:—தலைப்பில் கண்ட விஷயத்தைப் பற்றி ஜனாப் M. A. மலிக் சாஹிப் அவர்கள் அரியகட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்கள். அதனை எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரித்தன. அதிலடங்கிய மாப்பெரும் விஷயங்களைக் கண்டு யாவரும் பயனடைந்தனர். அதனை நம்மாசிகையினும் பிரசுரித்துத் தரவேண்டுமென்று பலரும் தெரிவித்துக் கொண்டபடியால் ஈண்டு எடுத்தாள் கின்றனம் ப-ர்.)

நபிகள் நாயகத்தின் மாட்சி;
ஊன்றிப் படியுங்கள்.

மிஸ்டர் தாவூத்சா B. A. தமது "அபூபக்கர் சித்தீக்" என்ற நூலில் 13-வது பக்கம், 22-வது வரி முதல் 33-வது வரி ஈறாக, அடங்கிய வாசகமான:—

"அவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டதை அவர்களுடைய பகைவர்கள் அறிந்து கொண்டு அவ்விருவரையும் பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பினர்கள். ஆனால், ஆண்டவனருளால் அவ்விருவரும் எதிரிகளின் கைவசம் சிக்கிக் கொள்ளாமலே மதினமா நகர் சென்று க்ஷேமமாய் இறங்கி விட்டார்கள்."

இவை இருவாக்கியங்கள். இவைகளில் கண்ட அவ்விருவரும் என்பது, றசூல் நாய

கம் அவர்களையும் அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்களையும் குறிக்கிறது.

இவ்வாக்கியங்களில் கண்ட "ஆண்டவனின் அருள்" அவ்விருவருக்கும் எதிரிகளின் கைவசம் சிக்கிக் கொள்ளாமலிருக்க, இருந்ததென்பது தெளிவாகிறது; மற்றபடியன்று. "அவர்களிருவரும் அந்த ஹிஜ்ரத்தின் போது, எதிரிகளின் கையில் சிக்கிக்கோண்டிருப்பார்களாயின், நிச்சயமாகக் கோல்லப்பட்டே போயிருப்பார்கள். என்னே! ஆண்டகையின் அருள் இருந்தவாறு!"

இவையும் இருவாக்கியங்களே! இவைகளில் கண்ட அவ்விருவரு மென்பதும், மேற்கூறிய றசூல் நாயகம் அவர்களையும், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களையும் குறித்ததே!

இவ்விரு வாக்கியங்களில், இரண்டாவது வாக்கியமாக "என்னே! ஆண்டகையின் அருள் இருந்தவாறு!" என்பதில் கண்ட அருளானது, அவ்விருவரையும், எதிரிகளின் கையில் சிக்கிக் கொள்ளாமலிருக்க, கிடைத்த அருளைக் குறிக்கிறதே தவிர, சிக்கிக் கொண்டால் ஆண்டவனின் அருள் அவ்விருவருக்கும் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது. "சிக்கிக் கொண்டிருப்பார்களாயின் நிச்சயமாகக் கோல்லப்பட்டே (ஏ) போயிருப்பார்கள்" இதில், "நிச்சயமாக" என்பதும், "கோல்லப்பட்டே" என்பதும், ஸ்திரத்தையும் உறுதியையும் காட்டுகின்றன.

"என்னே! ஆண்டகையின் அருள் இருந்தவாறு!" என்பதும் 22 முதல் 32-வது வரையுள்ள வரிகளில் கண்ட அருளும், சிக்கிக் கொள்ளாமலிருக்க கிடைத்தன என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்படுகிறதேயொழிய, சிக்கிக் கொண்டால் ஆண்டவன் அருள் கிடையாதென்பதையும் தப்பமுடியாதென்பதையும் ஸ்பஷ்டமாய்க் காட்டுகின்றன.

பின்னர் சிக்கிக்கொண்டால், நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்கள் என்பது மிஸ்டர் பா. தாவூத் ஷாஹ்வின் சொந்த அபிப்பிராயம். அதனை, அவர் முஸ்லிம் மகா ஜனங்களுக்கும், விசேஷமாய்ப் பாடசாலை மாணவர்களுக்கும் பிரஸ்தாப நூலின் மூலம் போதிக்கிறார்.

மேற்கூறிய வாக்கியங்கள் சாதாரண நடையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. விபரீதப் பொருள் கொடுக்க அவ்வாக்கியங்களில் இடமுமில்லை. புதைந்து கிடக்கும் ஆழ்ந்த ஞானமும் அவைகளில் காணப்படவில்லை. மேலே சொல்லிய விளக்கத்தைத் தவிர எந்த வகையாலும், இதை மாற்றித் திரிக்க இயலாது. முயன்றாலும் அது முடியாத காரியம்.

ஆகையால் றசூல் நாயகமவர்களைப் பொறுத்தமட்டில் "அந்த ஹிஜ்ரத்தின்போது எதிரிகளின் கையில் சிக்கிக்கொண் டிருப்பார்களாயின் நிச்சயமாய்க் கொல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று திருக் குர்ஆன் கலையிலும், நபி திருவாக்கு கலையிலும் நபி சரித்திரக் கலையிலும், பயிற்சி பெற்றுத் தேறிய எந்தக் கல்விமான் இருதயத்திலும் உதியாது; நாவிலும் எழாது; எழுத்துப்பதிவுக்கும் வராது என்பது திண்ணம்.

கல்விமான் என்றும், சீர்திருத்தக்காரன் என்றும், சொல்லி உலகத்துக்கு மத்தியில் எழும்புகிற ஒருவன் மேற்கூறியவாறு சொல்லவோ, எழுதவோ செய்வானாகில் அவன் பிரசாரம் ஞானத்தை ஊட்டாது; கலகத்தையும் அஞ்ஞானத்தையுமே பரப்பும்.

றசூல் அதிபர் அவர்கள் தமது கடமையைச் செய்ய முயன்ற ஆரம்ப தசையில், "குறைஷிகள்" சகிக்கக்கூடாத கஷ்டங்களும், துன்பங்களும் அவர்களுக்கு இழைத்து வந்தார்கள். நபியவர்களைக் காணுந்தோறெல்லாம், வாயில் வந்தபடி தூஷித்தும், நிந்தித்தும் வந்தார்கள். கண்ட இடமெல்லாம் கல்லெறிவதும், மண்வாரி வீசுவதும், பிராங்கிக்கத் தொடங்கினால் கூக்குரலிடுவதும், கட்டி அடிப்பதுமான சொல்லொணாத் துன்பங்களைச்செய்து வந்தார்கள்.

விரல்விட்டு எண்ணத்தக்க சிலரே நபி அவர்களை ஆதரிப்பவராயிருந்தனர். இருந்தாலும் அவர்களும் பற்பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானார்கள். இந்த ஸ்திதியில் நபிஅவர்களுக்கு ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறு புகலிடமில்லை.

இங்கிலையை வெளித் தோற்றக்காரர்கள் கண்ணுற்று இவருடைய இஸ்லாம் மார்க்கம் முதலில் மக்காவில் பிரகாசிப்பதே அரிதாயிருக்க உலகில் சென்று தலைகாட்டுமோஎன்று நினைத்து, நபி அவர்கள் கஷ்டப்படுவதையும்

அவர்களுக்கு ஒதுங்கும் தலம் இல்லாம லிருப்பதையும் கண்ணுற்று, "முஹம்மதை, அவர் நாயகன் கைவிட்டு விட்டான்; அவன் அவரைச் சம்மதிக்கவில்லை" என்று பேச லாயினர்.

இதற்காக, கருணையுள்ள ஆண்டவன், நபி அவர்களுக்கு நபித்துவப் பதவியின் ஆரம் பத்திலேயே ஸ்திரமான வாக்குத் தத்தம் கொடுத்தருளினன். அது வருமாறு:—

"உன் ஆண்டவன் உன்னைக் கைவிடவு மில்லை. அவனுக்கு உன்னிடத்தில் அசம்மதமு மில்லை."

"உனது கடைசி நிலை, ஆரம்ப நிலையைவிட சாலச்சிறந்ததாய் இருக்கும்."

ஆண்டவன் நபி அவர்களுக்கு, ஹிஜ்ரத் துக்குமுன் கொடுத்த மேற்கூறிய வாக்குத் தத்தங்களை ஞானக்கண்ணால் பார்த்து, உனது கடைசி நிலையானது "ஆரம்பத்தைவிட சாலச் சிறந்ததாய் இருக்கும்" என்ற வாக்கை சிந் தனைக்குக் கொண்டுவருகிறவர் எவரும், அந்த ஹிஜ்ரத்தின்போது அவர்களிருவரும் எதிரி களிடம் சிக்கிக் கொள்வார்களாயின் நிச்சய மாய்க் கொல்லப்பட்டே போயிருப்பார்கள் என்று சொல்ல முன்வருவாரா?

ஆண்டவன், நபியவர்களை நோக்கி உனது கடைசி நிலை மிகச் சிறந்ததாய் இருக்கும் என்று சொல்லுகிறான். இதிலிருந்து, நபித்து வப் பதவியானது தனது அதிகார முழுமை யையும் சம்பூரணம் செய்து, கடை நிறைவேற் றிக்கொடுத்தே யல்லாது இவ்வுலகத்தை விட்டு மறைந்து செல்லாது என்பது வெளிப் படவில்லையா?

ஆண்டவனுடைய வாக்கு தத்தத்தில் நம் பிக்கை வைப்பதா? ஒரு மிஸ்டர் பா. தாவூத் ஷாவின் நூதன அபிப்பிராயத்தை வாசித்து அதில் நம்பிக்கைக் கொள்வதா? உண்மை யான ஒரு முஸ்லிம் வாயிலிருந்து ஆதாரமற்ற இத்தகைய வார்த்தைகள் வருமா?

மேற்கண்ட வாக்கியங்கள் கொண்ட அத்தி யாயம், நபி அவர்கள் பிரசாரத்துக்குக் கிளம் பிய ஆரம்ப காலத்தில், திருமக்காவில் ஹிஜ் ரத்துக்கு முன் இறங்கியது.

கருணையுள்ள ஆண்டவன், சர்வ லோகத் துக்கும் வேண்டி ஓர் இறுதியான தூதரை கிளம்பச்செய்து, தனது திருவுளத்தை அவர் மூலம் சன்மானித்தருளி, அந்தத் திருவுள வாக்கு, சம்பூரணமடையவும், சாசுவதமாய் நிலைத்திருக்கவும், சித்தங்கொண்டு, கடைசி நபியாகிய நமது இரட்சகர் முஹம்மத் நபி அவர்களை அனுப்பி இருக்கும்போது அந்த அருள் நாதர்மூலம், ஆண்டவனுடைய திரு வுளமாகிய திருவேதம் சம்பூர்ண மடைந்தா லன்றி ஆண்டவன் அவரை இம்மையிலிருந்து தன்னிடம் அழைத்துக்கொள்ள மாட்டான். அது சம்பூரணமாகும்வரை, அவருடைய ஜீவ னுக்கு, பரமநாயகனாகிய ஆண்டவனே உத்தர வாதி. மேலும் அவனே கண்காணித்து வரு பவன். அவனுடைய பாதுகாப்பையும், அவ னுடைய மகத்தான காவலையும், அவனுடைய பார்வையையும், ஸ்திரமாய் நம்பியே அவர் ஜனங்களுக்கு மத்தியில் எத்தகைய அச்ச மும், கவலையுமற்று அவர் தமது கடமையைத் தைரியமாய்ச் செய்து முடிக்க முன்வந்தார். இதன்படியேதான், அன்னவருக்கு அவர் தமது கடமையில் பிரவேசித்த தேவஊழியத் தின் ஆரம்ப தசையிலேயே,

"உன் ஆண்டவனுடைய கற்பனையின் எதிர் நோக்கில், சகித்துக் கொண்டேயிரு, நீ, நமது கண்களுக்கு முன்னே இருக்கி றாய்."

என்று கடவுள் நமது றசூல் அதிப ருக்கு ஆறுதலையும், திருப்தியையும் கொடு த்து வாக்களித்திருக்கிறான்.

"நீ, நமது கண்களுக்கு முன்னே இருக்கி றாய்" என்று அருளிய ஆண்டவனின் திரு வாக்கை ஊன்றிப்படித்த எந்த நாவும் "அவர்கள் எதிரிகளிடம் சிக்கிக் கொண் டால் நிச்சயமாய்க் கொல்லப் பட்டேபோய் இருப்பார்கள்" என்று உலகத்துக்கு அபிப் பிராயங் கொடுக்க முன்வருமா?

அப்படிச் சொல்லி ஓலமிடும் ஓசையானது வழி கெடுப்போரின் ஒரு சூத்திரத்தையும், அழுக்காறுள்ள ஓர் இருளையும், அருவருப் புள்ள ஓர் அசுசியையும், தூர்க்கந்தங்களை வாரி வீசும் புயல்காற்றுச் சூழ்ந்த ஓர் அந்த காரத்தையும் ஒத்ததாகும்.

மேலும் அது மெய்யாகவே, சற்குண புத் திக்குரிய மாசற்ற பரிசுத்த ஸ்திர நம்பிக்கை யையும், சப்தத்தையும் விட்டு நீங்கி, கபட ஓசைக்குரிய அஞ்ஞானக் குரலையே கிளப் பியதாகும்.

மேலும் றசூல் அ;நிபர், முதல் முதலாய், திரு மக்காவில் பிரசாரத்துக்கு வெளிக் கிளம்பி வந்த போது, மக்காவின் கண்ணுள்ள சிறுவர் முதல் பெரியோர் உள்பட ஒவ்வொருவரும் நபி அவர்களுக்கு மகா கொடிய சத்துருக்களாகவே தலை எடுத்து நின்றனர்; பற்பலவிதமான தொந்தரவு கொடுத்துக் கஷ்டப் படுத்தினர்கள். அவருக்கு விரோதமாய் எத்தனையோ அபவாதங்களைக் கட்டிவிட்டார்கள். அவரைக் கொலை செய்துவிட சதியாலோசனைகள் நடந்தன. பகைவர்கள் ஆயுதங்களைத் தீட்டி ஆயத்தம் செய்து வைத்திருந்தார்கள்; நித்திரையில் நபி அவர்களைச் சிரச்சேதம் செய்துவிடச் சித்தங்கொண்டார்கள். யுத்தகளத்தில் சத்துருக்களால் நபியவர்கள் சூழ்ந்துகொள்ளப்பட்டார்கள். அவர்கள் சாவதானமா யிருக்கும் போது அவர்கள் சிரசுக்கு நேராய் பாரக் கல்லைத் தள்ளிவிட, பகைவர்கள் சூழ்ச்சி செய்தார்கள். பதுங்கி யிருந்து அவர்களைத் தாக்கினர்கள். உணவில் நஞ்சிட்டுக் கொடுத்தார்கள். ஆனல், ஒவ்வொரு சமயத்திலும், "சத்துருக்கள் பலமுள்ளவர்களானல், கண்காணி அதற்கு எத்தனையோ மடங்கு வல்லமையுடையான்" என்பதற் கொப்ப, திருகுர்ஆன் இந்தச் சமயத்தில் விளம்பரப் படுத்திய திருவாக்கு அப்படியே ருஜூப்படுத்திற்று.

அதாவது "உன் உயிருக்கு ஹானி நேரிடாதபடி உன் ஆண்டவன் ஜனங்களைச் சூழ வைத்துக் கொண்டிருக்கிறன்" என்பதே.

உத்தம அறிவாளிகள் நபி அவர்களின் பரிசுத்த வாழ்க்கையை ஆய்ந்தோய்ந்து பார்த்து வருவார்களாயின், இத்தகைய அமளியும், பயங்கரமுமான சந்தர்ப்பங்களில், அதிலும், குறிப்பாய்க்கலகமும், இரத்தஞ் சிந்தலுமே சகஜமாய்க் காணக்கிடக்கும் அராபியா தேசத்தில், நியாயத்துக் குரிய துரைத்தன ஆட்சியே இல்லாத அந்தப் பிரதேசத்தில், நபி அவர்கள் தமது கடமை அனைத்தையும் சரிவரச் செய்து முடித்தமை அவருக்குக் கருணையுள்ள ஆண்டவனல் கிடைத்த ஒரு ஸ்திரமான அற்புதக் காவலேயொழிய வேறல்ல.

மகாகண்ணியந் தங்கிய திருக் குர்ஆனையும், பரிசுத்த நபி திருவாக்குக் கிரந்தங்களையும், அப்படியே நாயகமவர்களின் திவ்விய ஜீவிய சரித்திர நூல்களையும், கசடறத் தெரிந்து கொள்ளுகிற ஒருவன், நபி அவர்களுடைய காரியம் சம்பூரணமடைய அவர்கள் ஜீவனுக்கு ஆண்டவனல் இருவித காவல்கள் ஏற்பட்டிருந்தன வென்று தெரிந்து கொள்வான்.—

(1) சத்துருக்களுக்கு மத்தியில் நபி அவர்கள் இருந்து வர, நபி அவர்களைச் சத்துருக்கள் தெரிந்து கொள்ளாமற் போகும்படி அவர்கள் கண்களுக்கு மத்தியில் திரை போட்டு விடுவது: அதாவது சத்துருக்களுக்குக் கண்ணிருந்தும் பார்வை யற்றுப் போவது.

(2) சத்துருக்களுக்குப் பார்வையில் நபி அவர்கள் தென்பட்டு அவர்களிடம் சிக்கி, கொலை செய்ய எத்தனிக்கப்படும்போது அவர்கள் சக்தி பெறுமல் போவது: கையிருந்தும், முடமாய்ப் போவது.

(தொடரும்)

ஹஜரத் உவைஸ்கர்னீ (ரஹ்)

இப்பெரியார் முராத் என்னும் குலத் தோன்றல். முராத் குலம் முத்ஹஜ் என்னும் குலத்தினேர் பிரிவாகும். இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்க்கைக் காலத்தே இருந்தாரெனினும், இவர்கள் தம் கண்ணிலாத அன்னைக்கு ஊழியம் செய்து வந்தமையால், நபிகள் நாயகமவர்களைச் சந்திக்கும் பேறு உண்டாகவில்லை யென்றும் கூறப்படுகின்றது. எனினும், இவர்கள் தாபிஈன்களில் தலைப்பட்டார் என்பதில் தடையில்லை.

"ஹுல்யத் துல் அவ்லியா" என்னும் நூலின் கண், அதன் ஆசிரியர் ஹாபிஸ் அபூநஹீம்என்பவர் ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

அவர்களின் ரிவாயத்தொன்றை எடுத்தெழுதியிருக்கின்றார். அதில் அல்லாஹ்வின் அவ்லியாக்களைப்பற்றிப் பின்வருமாறு காணப்படுகின்றது:—

"நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னிலையில் முக்கிய சில ஸஹாபிகளின் அணியில் அமர்ந்திருந்தேன். அஞ்ஞான்று நாயகமவர்கள் எங்களை நோக்கி "நாளை உங்களுடன் சொர்க்கவாசி ஒருவர் தொழுவார்'' என்றார்கள். எனவும், அத்தகைய மனிதர் நானாகவே இருக்கலாம் என்ற எண்ணத்துடன், மறுநாள் அதிகாலையிலேயே நான் மஸ்ஜித் சென்று விட்டேன். சென்று எல்லோருடனும் தொழுதேன்; தொழுத பின்னர், எல்லோருடன் மஸ்ஜிதியை விட்டகன்ற போழ்து, கருத்த வண்ணத்தார், ஒட்டுத்துணி உடையார் ஒருவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்பால் முஸாபஹாச் செய்து நாயகமவர்களைப் பார்த்து 'என் பொருட்டுத் தாங்கள் துஆச் செய்தருள்வீர்களாக' என்றார். நாயகமவர்கள் அவருக்கு ஷஹீதாகும் பாக்கியம் கிடைக்கும்படி துஆ செய்தார்கள். அவருடல் கஸ்தூரி மணத்தது. இது கண்டு நான் 'இவர்தானோ இப் பெரியார்?' என்று நாயகமவர்களை உசாவினேன்.

நாயகமவர்கள்: ஆம்; அவர் ஒரு குலத்தினரின் (குலத்துப் பெயரைக் கூறி) அடிமை.

நான்: அவர் அடிமைத் தன்மையைத் தாங்கள் அவரை அடிமை கொண்டாரிடம் பொருள் நல்கி மீட்பித்தருளலாகாதா?

நாயகமவர்கள்: ஆம் அவர் இவ்வுலகில் ஓர் அடிமைதான். ஆனால் இறைவனால் அவர் சொர்க்கலோகத்துப் பாதுஷாக்களில் ஒருவராக நியமிக்கப் பெற்றுள்ளார். அவரை நான் ஏன் மீட்பித்தல் வேண்டும்? அய்! அபூஹுரைரா! சொர்க்கத்திலும் பாதுஷாக்கள் உள்ளனர். அத்தகையர்களுள் ஒருவர் இவர். இறைவன் தூய உள்ளத்தைப் படைத்த, மறைந்து கிடக்கும் இத்தகைய பாதுஷாக்களின் மீதே மிக்க அன்புடையனாயிருக்கின்றான். இவர்கள் கோதி யணியாச் சிகையினர்; தூளி படிந்த முகத்தினர்; நேரிய முறையில் ஈட்டிய பொருள் கொண்டு உண்ட வயிற்றினர்; எஞ்ஞான்றும் பசியால் நலிந்தவர்; உயர்ந்த பதவியில் உள்ளவர்களால் மதிக்கப்படாதவர்; தேடுவாரற்றவர்; உவப்பொடு தம்முடன் பேசுவாரற்றவர்; நோய்வாய்ப்படினும் ஓம்புவாரற்றவர்; மரணத்திற்குப் பின்னும் ஜனாஸாத் தொழுகைக்குச் சனக்கூட்டமற்றவர்.

அது கேட்ட சிலர் 'இத்தகைய பெரியார்களை யாண்டு காண்பது?' என்று நாயகமவர்களைப் பணிந்து கேட்டனர், அவர்களுள் உவைஸ் கர்னீ ஒருவர் என்று நபிகள் பெருமான் விடையிறுத்தார்கள். 'உவைஸ் கர்னீ யென்பவர் யார்?' என்றனர் அவர்கள். நரைத்தலையார்; உட்குழிந்த விழிகளுடையார்; குறுகியும் நீண்டும் வளர்ந்திருந்த சிவப்பு வண்ணமாயிருப்பார்; கீழ்ப்பார்வையுள்ளார்; வலது கரத்தை இடது கரத்தின் மீதமர்த்திக் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பார்; அடிக்கடி தன்னைத்தான் நினைந்தழுவார்; இரண்டிற் கதிகமாய் ஆடைகளைப் புனையார்; இவ்வுலகில் பிறரால் உணரற்கரியர்; எனினும் விண்ணுலகிற் புகழ் சிறந்தவர். அவர் இறைவன்மீது ஆணையிட்டுக் கூறும் மொழிகள் அல்லாஹுதஆலாவால் நிறைவேற்றப்படும். அவரது வலது கட்கத்தில் ஓர் வெள்ளிய மருவுண்டு. நியாயத்தீர்ப்பு நாளில் சொர்க்கம் புக மக்கட்குக் கட்டளையிடப்படும் போழ்து, உவைஸ் பாபிகட்காக ஷபாஅத்துச் செய்யும்படி ஆண்டவனால் ஏவப்படுவார். இவரது ஷபாஅத்தினால் முலர், ரபீஉ குலத்தில் எத்துணை மக்கள் இருக்கின்றனரோ, அத்துணையோரும் மன்னிப்புப் பெற்றுய்வர். உமர்! அலீ! நீங்கள் அவரைச் சந்திப்பீர்களாயின், உங்கட்காக இறைவனிடம் இறைஞ்சும்படி அவரைக் கேட்டுக்கொள்ளுங்கள்' என்றார்கள் நபிகள் நாயகமவர்கள்.

எனவே, இவ்விருவரும் இருபது ஆண்டுக் காலம் உவைஸ் கர்னீ அவர்களைத் தேடிப் புலன் கேட்டு வந்தனர். இறுதியாக உமர் (ரலி) அவர்கள் தம் கலீபா ஆட்சியின் கடைசியாண்டில் ஹஜ்ஜுச் செய்யச் சென்றபோது, யமன் நாட்டினரை அணுகி "உமது முராத் குலத்தில் உவைஸ் என்பவர் யாண்டுளர்?'' என்று வினவினர்கள். அதுகாலை ஒரு முதியார் எழுந்து "அவரை யாமறியோம். எனினும் என் உடன்பிறந்தார்க்கோர் மகனுளன்,

அவன் பெயர் உவைஸ். அவனே எளியவன். அமீருல் மூமினீனை தாங்கள் விரும்பிப் பார்க்கும் பெற்றியாளனல்லன். அவன் இதுகாலை ஒட்டகங்கள் மேய்க்கச் சென்றிருக்கிறான்.'' என்று அறிவித்தார். "ஆயின் அவரை எங்கு சென்று காண்குதல்'' என்று ஹஜ்ரத் உமர் அவர்கள் மீண்டும் கேட்டார்கள்.

உவைஸ் அவர்களை அறபாத் வெளியிற் காணக்கூடும் என்று அறிந்ததும், ஹஜ்ரத் உமர், அலீ (ரலி) இவ்விருவர்களும் ஆங்கு கடிதே ஒட்டகத்தின் மீதேறிச் சென்றனர். அப்போழ்து உவைஸ் ஓர் மரத்தடியில் தொழுது கொண்டிருந்தார். ஒட்டகங்கள் அவரைச் சுற்றி மேய்ந்து கொண்டிருந்தன. அவரைக் கண்டதும் சந்திக்கச் சென்ற இருவரும் சலாம் கூறினார்கள். தொழுகை முடிந்ததும் உவைஸ் அவர்களும் பதிலாகச் சலாமிட்டார்கள்.

ஹஜ்ரத் உமர்: தாங்கள் யார்?

உவைஸ்: நான் ஓர் ஒட்டகம் மேய்ப்பவன். அவ்வொட்டகங்களின் சொந்தக்காரர்கட்கு அடிமை.

ஹ. உமர்: தங்கள் பெயரைக் கேட்கின்றோம்.

உவைஸ்: ஓ! நான் அல்லாஹ்வின் அடிமை.

ஹ. உமர்: தாங்கள் மட்டுமா? இப்படைப்பு முழுதுமே இறைவனுக்கு அடிமை. ஆனால் தங்கட்கு தங்களைப் பெற்றோர்களால் இடப்பெற்ற பெயர் யாது?

உவைஸ்: அதனைத் தாங்கள் அறிவதெதற்கு?

ஹ. உமர்: நபிகள் நாயகமவர்கள் உவைஸ் கர்னீ என்னும் பெயர்வாய்ந்த ஒருவருள்ளாரென்றும், அவர்க்கு இன்ன இலக்கணங்கள் உள்ளனவென்றும் கூறி யிருக்கின்றார்கள். ஆதலின் நாங்கள் தங்கள் பெயரை அறிய அவாக் கொண்டுள்ளோம். நாயகமவர்கள் கூறியவாங்கு, பல அடையாளங்களிருப்பதுடன் தங்கள் வலது கட்கத்தில் வெள்ளிய மரு ஒன்றுளதோ?

உவைஸ் அவர்கள் தமது வலது கரத்தை உயர்த்தவும், உடனே உவைஸ் கர்னீ என்னும் பெரியார் இவரே என்றவர்கள் உணர்ந்தவர்களாய், அம்மருவிற்கு இருவரும் முத்தமீந்து, "தாங்களே சந்தேகமின்றி உவைஸ் கர்னீ'' எனக் கூறி, எங்கட்காகத் தாங்கள் இறைவனிடம் பாப மன்னிப்புக்காகப் பிரார்த்தனை புரியவேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

அப்பொழுது உவைஸ் (றஹ்) கூறியதாவது "நான் இறைவனிடம் பாப மன்னிப்புக் காகப் பிரார்த்தனை செய்யும்போது சிறப்பித்து யாரையும் குறிப்பிடுவதில்லை. மூமினான ஆண் பெண், முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்குமே அவர்கள் கடலிலிருந்தாலும் சரி திடலிலிருந்தாலும் சரி எல்லோருக்குமே பாப மன்னிப்புச் செய்யும்படியாகத் தான் நான் பிரார்த்தனை புரிவது வழக்கம்.'' எனக் கூறிவிட்டு, "அல்லாஹுதஆலா என் நிலைமையை உங்களிருவருக்கும் வெளியாக்கி விட்டான். இப்பொழுது நீங்கள் யார் என்பதை எனக்கு அறிவியுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது ஹஜ்றத் அலீ (ரலி) அவர்கள் அவரை நோக்கி "இவர் அமீறுல் மூமினீன் ஹஜ்றத் உமர் அவர்களாகும். நான் அபூதாலியுடைய மகன் அலியாகும்'' என்றார்கள். உடனே உவைஸ் (றஹ்) எழுந்து நின்றுகொண்டு சலாம் செய்து "அமீறுல் மூமினீன் அவர்களே! அல்லாஹுதஆலா இந்த உம்மத்தின் சார்பாக தங்களுக்கும், தங்கள் சார்பாக அலிக்கும் நற்கூலியை அளிப்பானாக'' எனக்கூறி இறைவனை இறைஞ்சினார்கள். அப்பொழுது ஹஜ்றத் உமர் அவர்கள் அவரை நோக்கித் "தாங்கள் இந்த இடத்திலேயே இருங்கள். நான் மக்காவுக்குச் சென்று தங்கள் செலவுக்காகப் பொருளும் உடுத்த ஆடையும் கொண்டுவருகிறேன்'' என்றார்கள். அதற்கு அவர்கள் "நான் மறுபடியும் தங்களைச் சந்திப்பேனென்று உறுதி கூற முடியாது. இனி என்னை என்றும் சந்திக்கமாட்டீர்கள். எனக்கு ஆடையும் வேண்டாம். பொருளும் வேண்டாம். எனக்குள்ள இரண்டு உடைகளும் எனக்குப்போதுமானவை. நான் பாதரக்ஷைகளும் அணிந்திருக்கின்றேன். ஒட்டகம் மேய்ப்பதால் எனக்கு நான்கு திர்ஹம் கூலி கிடைக்கிறது. அது என் உணவுக்குப் போதுமானது. அமீறுல் மூமினீன் அவர்களே! எனக்கும் தங்களுக்கும் முன்னால் மிகவும் அபாயகரமான கணவாய் இருக்கின்றது அக்கணவாயை மெலிந்த உடலும், சுமையில்லாதவர்களும், கூர்மையான கால்களையும் உடையவர்

களே கடக்க முடியும். ஆதலால், கனமில்லாத சுமையை வைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் தஆலா தங்களுக்கு ரஹ்மத்துச் செய்வாளுக" எனக் கூறி ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

இச்செய்திகளை ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள் கேட்டதும் தமது கைகளை பூமியில் அடித்தார்கள். "ஆவா! உமருடையதாய் அவனை பெறுதிருந்திருக்கலாகாதா? அவள் மலடியாக இருந்திருக்கக்கூடாதா?" என்று புலம்பினார்கள். அதன்பின் உவைஸ், அவர்களை நோக்கி "அமீறுல் மூமினீன் அவர்களே! தாங்கள் மக்காவுக்குச் சென்றால் நான் இந்தப் பக்கம் செல்வேன்" எனக் கேட்டுக்கொண்டார். உடனே, ஹஜ்ரத் உமர் அவர்கள் மக்காவை நோக்கித் திரும்பினார்கள். உவைஸ் (றஹ்) ஒட்டகங்களை ஒட்டிக்கொண்டு அவைகளின் சொந்தக்காரரிடம் சென்று ஒட்டகம் ஒட்டும் தொழிலை விட்டுவிட்டு இறைவனை வணங்குவதில் முற்றும் ஈடுபட்டார்கள்.

இப்னு ஸஅது என்பவரால், அஸீறுப்னு ஜாபிர் கூறியதாகப் பின்வருமாறு வரையப் பெற்றுள்ளது:—

இருக் அரபிலுள்ள கூபா எனும் நகரில் நாங்கள் முஹத்திஸ் ஒருவரிடம் ஹதீதுகளைக் கேட்டுப் படித்துக்கொண்டிருந்தோம். பாடம் முடிந்ததும் எல்லோரும் சென்றுவிடுவார்கள். சிலர் மாத்திரம் தங்கி இருப்பர். மற்றவர்கள் பிறர்பால் செவியுறாத அருமையான பொருள்களைக் கூறுகின்ற ஒருவரும் அவர்களில் இருந்தார். அவர்மீது எனக்கு அதிகப் பிரியம் ஏற்பட்டது. ஒரு முறை நான் அவரைத் தொடர்ச்சியாகப் பல நாட்களாக அக் கூட்டத்தில் காணவில்லை. என் நண்பர்களாகிய மற்றவர்களிடம் அவரைப் பற்றி விசாரித்தேன். அதற்கவர்கள் அவர்பெயர்உவைஸ், அவரைநான் அறிவேன் என்றார்கள். அவரிருக்கும் இடத்தை விசாரித்துக் கொண்டு அவரிடம் சென்று தலை வாசலைத் தட்டினேன். அவர் வீட்டிலிருந்து வந்தார். அவர் பாடத்திற்கு வராத காரணத்தை வினவினேன். அதற்கவர் "தம்மிடம் உடுத்த உடையின்மையால்" எனப் பகர்ந்தார். உடனே நான் என் மேலாடையைக் கொடுத்து அதை அணிந்து கொண்டுவரும்படிக்குக் கூறினேன். 'நான் இதை அணிந்திருப்பதைப் பார்த்தால் என்னை ஏளனம் செய்து இன்னல் விளைப்பர்; ஆதலால் எனக்கு இவ்வுடை வேண்டாம்' என அவர் கூறினர். அவரை நான் வற்புறுத்தி அணிந்துகொள்ளச் செய்தேன். அவர் பாடத்திற்கு வந்தவுடன் அவர்களெல்லோரும் சிரித்து ஏளனம் புரிந்ததோடு, இதை எங்கிருந்து திருடினாய் எனக் கேட்டனர். உடனே அவர் என்னிடம் வந்து 'பார்த்தீர்களா?' எனக் கூறி அதை அவிழ்த்துக் கொடுத்துவிட்டார். நான் அவர்களிடம் சென்று அவர்களைக் கண்டித்தேன்.

இந்தக் காலத்தில் தற்செயலாக கூபாவிலிருந்து ஒரு தூதுவக் கூட்டம் ஹஜ்றத்உமர் அவர்களிடம் சென்றது. அந்தத் தூதுவக் கூட்டத்தில் உவைஸைப் பரிகசிப்பவர்களில் ஒருவரும் இருந்தார். ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள் அந்தத் தூதுவக் கூட்டத்தினரை நோக்கி, 'உங்களில் கரன் ஊர்வாசி யார்?' என உசாவினர்கள். உடனே, அவர் ஹஜ்றத் உமர் (ரலி) அவர்களின் முன் சென்றார். அப்பொழுது ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் "ஒருவர் யமன் தேசத்திலிருந்து உங்களிடம் வருவார். அவருக்கு யமன் நாட்டில் தாயைத் தவிர வேறு யாருமில்லை; அவருடைய பெயர் உவைஸ்; உங்களில் எவராவது அவரைச் சந்தித்தால் அவரை உங்களுக்காகப் பாபமன்னிப்புக் பிரார்த்தனைசெய்யும்படி வேண்டிக்கொள்ளுங்கள்" என நாயகமவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அவரை நான் கண்டு பேசினேன். எனினும் அவர் எங்களைவிட்டு மறைந்துவிட்டார். உங்கள் ஊராகிய கூபாவில் இருப்பதாக எனக்குத் தெரியவருகிறது" எனக் கூறினர்கள். இதைக் கேட்டதும் அவர் இத்தகையவர் எம்மூரில் இலர் என்றார். அப்பொழுது ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள் 'இல்லை' அவர் கூபாவில் இருப்பது உண்மை என்றார்கள். அதற்கவர் "உவைஸ் என்னும் பெயருடையவர் ஒருவர் உளர். தாங்கள் கூறுபவர் அவரே போலும். ஆனல் நாங்கள் அவரை இழித்துரைப்பது வழக்கம்" என்றார் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை நோக்கி 'நீங்கள் கூபாவுக்குச் சென்றால் அவரைப்பார்க்கவேண்டும். ஆனல் நீங்கள் அவரைப் பார்க்கமுடியும் என்ற நம்பிக்கை இல்லை' எனக் கூறினர்கள்.

பின்பு அவர் கூபாவுக்கு வந்ததும் வீட்டுக்குச் செல்லாமல் நேராக உவைவிடம் வந்தார்; வந்து அவர் முன்னிலையில் பணிவாக நின்ருர். இதைப் பார்த்ததும் உவைஸ் 'என்னிடம் இவ்விதமாக நடந்துகொள்வது உம் வழக்கமன்றே' எனக் கூறினர். அதற்கவர் "அமீறுல் முமினீனிடத்தில் தங்களைப்பற்றி இவ்விதமாகக் கேள்விப்பட்டேன். ஆதலால் தாங்கள் எனக்காக இறைவனிடம் பாபமன்னிப்புப் பிரார்த்தனைசெய்யவேண்டும்" எனக் கூறினர். அதற்கவர் "நீர் என்னை ஏளனம் புரிவதை அறவே நீக்கவேண்டும்; ஹஜ்றத் உமர் அவர்களிடம் கேள்வியுற்றதை ஒருவரிடமும் புகலக் கூடாது'' என்ருர். அவரும் அவ்வாறே ஒப்புக்கொண்டார்.

பின்னர், கூபாவில் இவரைப்பற்றிப் புகழ் பரவத் தலைப்பட்டது. ஆகவே, நான் (அஸீறுப்னு ஜாபிர்) உவைவிடம் சென்று 'இஃது என்ன புதுமை; தங்களைப்பற்றிப் புதிய விஷயங்களெல்லாம் நகரத்தில் பரவி வருகின்றனவே' எனக் கூறினேன். அதற்கவர் 'என் சார்பாக இவ்விதம் ஒன்றும் ஏற்படவில்லை. எனினும் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய செயலின் பலன் கிடைத்துவிடும்' எனக் கூறினர். பின்பு நான் அவரைக் காணவில்லை.

இத்தகைய பெரியாரான உவைஸ் இறைவனை வணங்குவதில் முற்றிலும் ஈடுபட்டிருந்ததாகவும், ஸஜ்தாவிலேயே ஓரிரவையும் ருக்கூஉ விலேயே ஓரிரவையும், நிலையிலேயே ஓரிரவையும் அவர் நித்திரையின்றி கழித்து வந்தார் என்பதாகவும் கூறப்படுகின்றது.

இவரைப்பற்றி ஹறமுப்னுஹப்பன் கூறுமாறு:—நான் உவைஸைப் பார்ப்பதற்காகவே கூபா சென்றேன். அவரைத் தேடித் தேடி அலைந்து இறுதியில் யூப்ரட்டீஸ்ஆற்றங் கரையிற் கண்டேன். அதுகாலை அவர் நதியில் தமது துணியைத் தோய்த்துக் கொண்டிருந்தார். நான் அவரின் அங்க இலக்கணங்களைக் கொண்டு இவர்தான் உவைஸ் எனத்தெரிந்து கொண்டேன். உடனே ஸலாம் சொல்லி அவரை முஸாபஹாச் செய்வதற்காகக் கையை நீட்டினேன்; ஆனல் அவர் முஸாபஹாச் செய்ய மறுத்து விட்டார். அவருடைய நிலைமையைப் பார்த்து என் கண்களில் நீர் ததும்பிற்று. ஆகவே, நான் அவரை நோக்கி உங்கள் நிலைமை யாதென விசாரித்தேன். அதற்கவர் 'ஹறமே, உமக்கு என் பெயரை அறிவித்ததுயார்?' எனக்கேட்டார். அதற்கு நான் அல்லாஹ் அறிவித்தான் என்று கூறி, தாங்கள் என்னை இன்னர் என எவ்வாறு தெரிந்து கொண்டீர்கள்? இதற்குமுன் நாம் சந்தித்ததில்லையே' என்றேன். அதற்கவர் 'என் ஆன்மா உம் ஆன்மாவை அறிந்துகொண்டது. என் உயிருக்கும் உம்முயிருக்கும் சம்பாஷணை நிகழ்ந்தது. உடற்கு உயிர் இருப்பதுபோல் உயிருக்கும் உயிருண்டு. மூமினீனவர்களின் உயிர்கள் அல்லாஹு தஆலாவின் துணைகொடு அவைகளுக்கிடையில் எத்துணைத் தூரம், வெளிப்பார்வையில் இருப்பினும் ஒன்றுக்கொன்று தெரிந்து கொண்டிருக்கின்றன'' எனக் கூறினர்.

பின்பு நான் நாயகமவர்களின் ஹதீதுகளில் யாதேனும் ஒன்றை எனக்குக் கூறுமாறு வேண்டினேன். அதற்கவர் எனக்கு நாயகமவர்களை நேரில் பார்க்கும் பேறு கிடைக்கவில்லை. ஆனல் நாயகமவர்களைத் தரிசித்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் மூலமாக நீங்கள் கேள்விப்பட்ட ஹதீதுகளையே நானும் கேள்விப்பட்டுத் தெரிந்து கொண்டிருக்கின்றேன். ஆனல் நான் முஹத்திதல்ல; காஜியுமல்ல; முப்தியுமல்ல; அவ்வாறு ஆதற்கு எனக்கு விருப்பமுமில்லை. எனக்கு என் அலுவல்களே அதிகமாக இருக்கின்றன' எனச் செப்பினர்கள். அதற்கு நான் 'அப்படியானல் திரு குர்ஆனிலிருந்து யாதேனும் உரையைக் கூறியருள்வீராக' என்றேன். எனவும் அவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டு அந்த நதிக்கரை ஓரமாக அழைத்துச் சென்று கொண்ட வண்ணம் கூறியதாவது:—

"இது என்னுடைய றப்பின் சொல். அவனுடைய சொல் சத்தியமானது. இது என்னுடைய றப்பின் வாக்கு. அவனுடைய வாக்குத்தான் உண்மையானது. இதுஎன்னுடைய றப்பின் பேச்சு. அவனுடைய பேச்சுத்தான் மேலானது'' எனக் கூறி, ஒரு ஆயத்தை ஓதினர்கள். அதைக் கூறியதும் அவர்கள் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தார்கள். அவர்கள் மூர்ச்சை யுறுவரோ என்றும் அஞ்சினேன். பின்பு அவர்கள் என்னை நோக்கி "ஓ! ஹற

மே! உம்முடைய தந்தை மாண்டனர். நீயும் ஓர்நாள் மாள்வாய். அதன் பின்னர் நீ சொர்க்கமோ, நரகமோ செல்வாய். ஹஜ்றத் ஆதம் (அலை) அவர்களும் மாண்டனர். ஹவ்வாவும் மாண்டுபோனுர்கள். இப்ராஹீம் கலீலுர் ரஹ்மானும் மாண்டனர். மூஸாவும் மாண்டார். முஹம்மது (சல்) அவர்களும் மாண்டார்கள் (அலைஹி முஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) எல்லோருக்கும் அல்லாஹ்வின் ஈடேற்றமுண்டாகட்டும். முஸ்லிம்களின் கலீபாவாக இருந்த அபூபக்கரும் மாண்டுபோனுர். என்னுடைய சகோதரரும், நண்பரும் துணைவருமான ஹஜ்றத் உமறும் அந்தோ! உயிர் துறந்தார். ஆ! உமர்! ஹா! உமர்! ஆவா! உமர்!!'' என்று கூறினுர்கள்.

எனவும், நான் அவரை நோக்கி "ஹஜ்றத் உமர் மரிக்கவில்லை. அவர் உயிருடனிருக்கின்றுர்'' என்றேன். அதற்கவர் "இல்லை அவர் இறந்துவிட்டார். அல்லாஹுதஆலா அவருடைய மரணத்தை எனக்கு இப்போது அறிவித்திருக்கின்றுன்'' என்று கூறினுர்கள். பின்பு பிரார்த்தனை செய்தார். பின்பு என்னை நோக்கி "ஹறமே! நான் உனக்கு அல்லாஹ்வின் திருவேதத்தைப் பின்பற்றி நடக்கும்படி உபதேசிக்கின்றேன். மரணத்தைநினைவூட்டுகிறேன். அதை ஒரு பொழுதும் மறக்கலாகாது. நீர் திரும்பச்சென்று உமதுசமுகத்தவருக்கும் இதை உபதேசிக்கவேண்டும். உம்முடைய உயிருக்கு ஊறு விளைவதைக் கூட நீர் பாராட்டக்கூடாது. தொழுகையில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதை எப்பொழுதும் விடக்கூடாது. அவ்வாறு செய்வதால் உமது மதபக்தி உம்மை விட்டு நீங்காது. மதபக்தி நீங்கிவிட்டால் நீர் இறந்துபோனபின் நரகத்திற்குப் போகவேண்டியராவீர் என்பதை அறிவீரோ?'' எனக் கூறி அவர் வானத்தை நிமிர்ந்து நோக்கி, "நாயனே! என்னை அகத்தூய்மையோடு நேசிப்பதாக இவர் கருதி இருக்கிறுர். அந்த நேசத்தினுலே என்னைச் சந்திக்கவந்திருக்கிறுர். இவரைச் சொர்க்கத்தில் சேர்ப்பாயாக. அங்கும் இவருக்கு என்னுடைய சந்திப்புண்டாக. இவரைக் குறைந்த செல்வத்தில் திருப்தியுள்ளவராகச் செய். உடல் நலன் தந்தருள். நன்றிமறவாதவராகச் செய்தருள்'' என்று கூறி, மீண்டும் என்னை நோக்கி "ஓ! ஹறமே! அல்லாஹ் உன்னைக் காப்பான். இனி என்னைத் தேடி அலையக்கூடாது. என்னைப்பற்றி புலன் விசாரித்தலுமாகாது. இன்ஷா அல்லாஹ் நான் உனக்காக இறைவனிடம் துஆச் செய்துகொண்டே இருப்பேன்' என்று முடித்து, என் கைகளை விட்டுவிட்டு அகன்று சென்றுர் அதன்பிறகு நான் அவரைக் கண்டதில்லை.

பின்பு ஹஜ்றத் அலி(ரலி) அவர்களின்காலத்தில் ஸிப்பூன் யுத்தத்தில் ஹஜ்றத் அலியின் அணியில் போர் புரிந்ததாகக் கூறப்படுகிறது. ஹஜ்றத் உமர் அவர்களின் காலத்தில் துவக்கமாக ஆதர்பீஜான் போர்முனையிலும் இவர் முஸ்லிம் வீரராக இருந்ததாகவும், அந்தப் போர் முடிந்த பின்னர், இவர் நோயுற்று இடைவழியில் இறந்துபோனதாகவும் கூறப்படுகின்றது.

மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

கருத்து மாறுபடுதல் என்பது பொதுவெனினும், அடிப்படையான உண்மைகளில் மாறுபாடு கொண்டு, இருதரத்தாரும் ஒரு மதத்தினையோ சமயத்தையோ தழுவி நிற்றல் பொருந்தாது. இஸ்லாம் நெறியில் சில சிறிய பொருள்களில் கற்றறிந்த உலமாக்கட்குள்ளும் அபிப்பிராய பேதங்கள் உண்டு என்பதை மறுக்கமுடியாது எனினும் அடிப்படையான பொருள்களில், ஈமானின் மூலாதாரமான விஷயங்களில் இஸ்லாத்துக்கு மிர்சாவின் கூட்டத்தார் வேறுபட்ட நோக்கமுள்ளவர்கள் என்பது உண்மை. மிர்ச

வின் காலத்திற்குப் பின்னர் அவர் கூட்டத்தில் பிளவு ஏற்பட்டது என்றும், இருதரத்தாராய் அவர்கள் ஒருவரோடொருவர் பிணக்குற்றுப் பகைமை கொள்ளலாயினர் என்றும் முன்னர் குறிப்பிட்டுள்ளாம். இவ் விருதரத்தாரும் தமக்குள் கருத்து மாறு நேர்ந்தக்கால், திரு குர்ஆன், நபிகள் நாயகம் அவர்களது ஹதீது இவைகளின் வாயிலாய் உண்மையை அறிந்துகொள்ள ஆற்றலற்றவர்களாய், மிர்சாவின் நூல்களையே புரட்டிப் புரட்டிப் பார்க்கும் குருட்டு முறையைக் கைக்கொள்வாராயினர் இந்நூல்கள் பெரும்பாலும், நம் நெறிக்கு முரண்பாடு கொண்டன என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

நிற்க; தான் ஒரு நபியே என்றார் மிர்சா. "தான் நபி எனக் கூறும் பொய்யர்கள் முப்பது பேர்கள் தோற்றுவர்'' என்று நமது நபிகள் பெருமானால் கூறப்பெற்ற பொய்யா மொழியை உய்த்துணர்வார்க்கு, மிர்சாவின் நபித்துவத்தின் உண்மையும் இனிது புலனாகும். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே, புது முறையைத் தழுவிய அறிவிற் குறைந்த ஒரு சாரார் இறுதிக் காலத்தே தோன்றுவர் என்றும், அவர்களிற் சிலர் தம்மைத் தாமே அறிவுடையவர்கள் என்றும், பலாஸிபிகள் என்றும், ஹுகமாக்கள் என்றும் தற்புகழ்ச்சி செய்துகொண்டு திரிவர் என்றும் மிர்சாவைப் போன்றவர்களைப்பற்றி நமக்கு முன்னறிவிப்பும் தயையோடு கொடுத்திருக்கின்றார்கள். இவைகளை இணைத்து நோக்குழி, மிர்சாவின் நபித்வத்திற்கும், பெரியார் எனும் தத்வத்திற்கும், அவரது 'பெருமை' தங்கிய நூல்கட்கும், அவரையும் அவரது நூல்களையும் பின்பற்றும் சிலகூட்டங்கட்கும் இஸ்லாம் நெறியில் இடமுளதோ என்று கேட்கின்றேன். இதனுடனில்லாது மிர்சாவை ஓர் நபி என்று ஒப்பாதார் இக் காதியானி கூட்டத்தாரால் காபிர்களாக்கப் பெறுகின்றனர். இறுதியாகத் தோன்றிய நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்குப் பின்னர் இஸ்லாம் நெறிவழியும், அவர்கள் தம் நல்மொழிப்படியும் வேறு நபிகளை நாம் ஒப்புக்கொள்ளாமல் இருப்போமாயின் காதியானிகளின் கூற்றுப்படி நாம் காபிர்களாகின்றோம்! ஆனால் இஸ்லாம் நெறிக்கும் நாயகமவர்கள் நல்லுரைகட்கும் மாறாக மிர்சாவை ஓர் நபியெனவும், மஸீஹெனவும் நம்பும் இக்காதியானிகள் காபிர்களல்லர்! அந்தோ! அந்தோ!

காதியானிகளின் இருதரத்தாரும் திருகுர்ஆனில் கூறப்பெற்றுள்ள அற்புதங்களை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஈசா (அலை) அவர்கள் பிற்காலத்தே இவ்வுலகத்தே சுயரூபத்தோடு தோற்றப்படுவார்கள் என்னும் நம் வேத மொழியையும் இவர்கள் மறுக்கின்றனர். ஈசா (அலை) அவர்கள் இனி இவ்வுலகில் தோற்றுவர் என்று ஒப்புக் கொள்ளப்படுமாயின், மிர்சாவும் ஓர் நபியாகத் துலங்க முடியாமற் போம் என்ற கருத்துப் பற்றியே, ஈசா (அலை) அவர்கள் தானே (மிர்சா) என்று சாதிப்பது பற்றியே, இத்தகைய பொய்க் கூற்றும் கட்டுரை செய்யப்பெற்றதென அறிவுடைய மாந்தர்க்கு தோன்றாமற் போகாது என்பது என் துணிபு. இத்தகைய கொள்கைகட்கியைபு கொண்டே, மௌலவி முகமது அலீ தமது திரு குர் ஆன் மொழிபெயர்ப்பில் அற்புதங்களை மறுத்திருக்கின்றார். அற்புதங்களைப்பற்றிக் கூற நேர்ந்தபோழ்தெல்லாம், அவைகளைப் பொய்யென்கின்றார்; பொய்யென மறுத்தற் கியலாதனவற்றைக் கனவென்கின்றார்; நினைவென்கின்றார்; மறைவாக நிகழ்ந்த நுட்பங்கள் என்கின்றார்; இக் கூற்றுக்களை நிலைநிறுத்த அரும்பாடு படுகின்றார் பாபம்!

காதியானிகள் இற்றைவரை முற்றுப் பெறாமலும், சோதனை, பரீட்சை யளவிலேயே இருக்கும் 'சயன்ஸ்' என்னும் விஞ்ஞான இயலை அடிப்படையாகக் கொண்டு முடிந்த பொருளை வரையறை கூறத் துணிந்தமை அடிக்கோல் கொண்டு வானத்தை அளக்க முயல்வதை ஒக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? எனவே, அற்புதங்கட்குக் காரண காரியம் கூற இவர்கள் மேனாட்டு விஞ்ஞான இயலின் துணை தேடித் தட்டழிந்து, விழித்து, ஒன்றும் கூறவியலாராய் உளறி வழிகின்றனர். வேத உண்மையை எந்தத் துலாக்கோல் கொண்டு தூக்கிப் பார்க்கினும், தூக்கிப்பார்க்கும் திறன் அத்துலாக்கோலுக்கு வேண்டுமன்றோ? வேத உண்மையைச் சீர்தூக்கும் துலாக்கோலும் ஒன்றுளதோ? அங்ஙனம் உண்மையான முமினீன்களால் சீர்தூக்கிப் பார்த்தலும்

தகைமை உடையதாமோ? காதியானிகள் விடை யிறுப்பார்களாக.

திரு குர்ஆனையும், திரு நபிகள் அவர்களது ஹதீதுகளையும் முஸ்லிம்கள் முழுமனதுடன் நம்புதல் அவர்கடம் கடனாகும். இதில் எட்டுணையும் பிறழ்ந்து போதலும், வலிந்து பொருள் கொண்டு திரிந்துபடுதலும் கூடா வாம். நம்மில் எழும் ஐயப்பாடுகள் பலவும் திரு குர்ஆனாலும் ஹதீதுகளினாலுமே அறு படுவதால், நமக்கு இவைகளிலும் வரையறை கூறும் நூல்கள் உளவோ? இறைவன் நபிகள் பெருமானையே கடைசி நீதிபதி யென அறுதி யிட்டுக் கூறி யிருக்கின்றானாதலின், நபியவர்களது ஹதீதுகளையும் நாம் முற்றிலும் நம்புவதானது ஆண்டவனது ஆணையைச் சிரமேற் றாங்கிய தாகும். ஆயின், காதியானிகள் பிரிவைச் சார்ந்த மௌலவி முகம்மதுஅலீ தன் சார்பினர்கட் கிணங்கி, ஈசா நபி (அலை) கியாம நாளுக்கோர் அறிகுறியாக இவ்வுலகத்தே தோன்றுவார்கள் என்பதை மறந்து விடுகின்றார். ஈசா நபியானவர்கள் இந்தக் காலத்தே பலாசிபர்களுடைய ஐயப்பாடுகளை அறவே அகற்றி, எல்லா மதத்தினர்களையும், சமயத்தினர்களையும் ஒன்று படுத்துவார் என்னும் மொழியைத், தானே அவ்வீசாவாக நிறைவேற்றி வைக்கத் தோன்றியதாக வெளியிட்டுத் தற்புகழ்ச்சி செய்து கொண்ட மிர்சாவின் செயல் நகைப்பிற் கிடமாயினதே யன்றி வேறல்ல. ஏனெனில் இவ்வுயரிய செயல் மிர்சாவால் செய்ய இயலாமற் போனதுடனன்றி, அவருடைய பதவியில் அமர்ந்திருந்த இரண்டு 'கலிபா'க்களாலும், தாமே வாக்களிக்கப் பெற்ற மஸீஹ் என்று வாதிட்ட வெவ்வேறு பேர்களாலும் ஈடேற்றப்படாமற் போயிற்று. இம்மட்டோ? ஒன்று படுத்தத் தோன்றிய மஸீஹ் (மிர்சா) தம் கூட்டத்திலேயே இரண்டு படுத்திச் சென்றிருக்கின்றார் என்பதை நோக்குழி, மிர்சாவின் நபித்துவத்திற்கு எத்தகைய மதிப்புக் கொடுக்கலாம் என்பது இனிது புலனாம். ஒன்றுபடுத்தத் தோன்றியதாகக் கூறிப் புறப்பட்ட மிர்சாவின் கூட்டத்தார் தம்முள் பிணங்கியமை அரசியல் துறைகளிற்றான், மதத்துறைகளில் அல்ல என்பாரும் உளர். அன்றன்று; அவர்கள் ஈமானின் அடிப்படையான பொருள்களிலேயே வேற்றுமை கொண்டனர். ஒரு சாரார் அவரை ஓர் சீர்திருத்தக்காரர் என்றே கொள்ள வேண்டும் என்றும், பிறிதொரு சாரார் அவர் மஸீஹா யிருப்பதோடு இறைவனின் நபிகளுள் ஒருவர் என்றும் வாதாடுகின்றார்கள். இக்கருத்து முரண்பாடு முளையிலேயே தோன்றிவிட்டமையால், இவ்விரு கூட்டத்தாரும் தங்கள் தங்கள் கூற்றுக்களையே வற்புறுத்தி மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வெளியிட்டு, மாச்சரியம் முற்ற இழிதகைமையான வசை கூறுதலிலும் இறங்கிப் பகைமை கொண்டார்கள். இதனின்றும் ஒற்றுமைப்படுத்த வந்த கூற்று பொய்ப்படுவதோடு, தம் கூட்டத்தினரே தம் நூல்களில் உள்ள கருத்துக்களை இரட்டித்துப் பொருள் கொள்ளுமாறு மிர்சா நூல் வரைந்து விடுத்தார் என்ற உண்மையும் மெய்ப்படுகின்றமை காண்க.

"நானே ஈசா என்று கூறிப்பலர் ஏமாற்றுவர். ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரோடு முரணிப் போர்முனையில் இறங்குவர். ஆங்காங்கு பூகம்பங்களும், பஞ்சமும், கொடிய துன்பங்களும் உண்டாகும். அதுகாலை ஒருவன் உங்களை நோக்கி இவர்தான் ஈசா; அவரே ஈசா! என்றியம்புவனாயின் அவன் கூற்றை ஏற்காதீர்கள். ஏனெனில், போலி ஈசாக்களும், போலி நபிகளும் தோன்றி அற்புதங்களையும் அறிகுறிகளையும் ஏமாற்றமாய்க் காண்பித்து, இயன்றவரை எய்த்துவிடப் பார்ப்பார்கள். ஆதலால் எனது முன்னுரையைக் கைப்பிடித்துக்கொள்ளுங்கள்" என்று மார்க் சுவிசேஷம், 13ம் அத்தியாயத்தில் காணலாம். இதற்கிணங்க கற்றறிந்ததாகக் கூறப்படும் சில முஸ்லிம்களும், எம். ஏ; பி. ஏ; பட்டம் பெற்ற சிலரும், மிர்சாவை ஏற்று அவரைப் பின்பற்றி நடக்கத் தலைப்பட்டமை ஓர் வியப்பல்ல; இஃது எச்சரிக்கையாகக் கூறப்பட்ட ஓர் உண்மையைப் பன்மடங்கு வலியுறுத்துகின்றது. எனவே, எக்காரணத்தானும் உண்மையான முஸ்லிம்கள் இத்தகைய போலி மஸீஹ்கட்கோ, சிறப்பாக மிர்சாவுக்கோ உடம்பாடு கொண்டு செல்லார்கள் என்பது திண்ணம்.

மேலும்: நமது நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பிற்காலத்தில் போலி மஸீஹ்கள் தோன்றுவார்கள் என்பதை உணர்ந்து, ஈசா நபி அவர்களின் தோற்றத்தைக் குறித்து நாம் மயங்கா வண்ணம் தெளிவாக அறிவுறுத்தி யிருக்கின்றார்கள்:—

(1) தேசிய வலிமையுடனும், முற்றிய பெருமையுடனும் அவர் மறுமுறை தோன்றுவார்.

(2) அவர் எல்லாக் கூட்டத்தினரையும் மதத்தினரையும் ஒற்றுமைப்படுத்துவார்.

(3) விண்ணுலகு புகுமட்டும் மணம் நிகழ்த்திக்கொள்ளாதிருந்த நோன்பை, மணம்புரிந்து மக்களைப்பெற்று முடித்துக் கொள்வார்.

(4) அவர் மதினாவில் இறந்து, அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) இவர்களின் கப்ருகட்கணித்தே அடக்கம் புரியப்படுவார்.

(5) அவர் மக்காவில் உள்ள புண்ணிய இல்லத்திற்கு (கஃபாவிற்கு) சென்று ஹஜ்ஜூச் செய்வார், என்று ஐயந்திரிபறப் புகன்றுள்ளார்கள்.

எனவே, மிர்சா எந்தக் கூட்டத்தை, மதத்தை ஒன்றுபடுத்தினர் எனவும், எங்கு அடக்கம் புரியப்பெற்றார் எனவும், அவ்வாறு அடக்கம் புரியப்பெற்ற இடம் அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) இவர்களின் மஜார்கட்கு அருகாமையிற்றானா எனவும், கேள்விகள்பிறக்காவோ? இக்கேள்விகட்கு காதியானிகள் விடையிறுக்க வல்லாரோ?

(தொடரும்)

புதிய உலகத்தின் புதிய மதம்

"ஜனாப் M. சுல்தான் சாஹிப் வரைவது"

பழைய உலகம் என்று கூறப்படும் குணகோளார்த்தத்திலேயே, சிறப்பாக ஆசியா கண்டத்திலேயே தொன்றுதொட்டுப் பெரும் மதங்கள் பல தோன்றின. புதிய உலகம் என்று கூறப்படும் அமெரிக்காவுக்கு எல்லாப் பெருமைகளும் இருந்தும், தம் நாட்டில் ஓர் மதம் நிறுவப்படும் ஓர் பெருமை மட்டும் இதுகாறும் இல்லாமலிருந்தது. எனவே, அவர்கள் ஓர் புதிய மதத்தை நிறுவிக் கொண்டு இக்குறையினையும் அகற்றிக்கொள்ள முனைந்தது குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் நாகரீகம் மனப்போக்கு இவைகட்கேற்பவே இப்புதிய மதத்திற்கு 'மனிதத்தன்மை' எனப் பெயரிட்டிருக்கின்றனர். இதனை நியூயார்க்கு மா நகரவாசியும், அமெரிக்காவின் தலைசிறந்த சொற்பெருக்கு வல்லுநராகியுமுள்ள சார்ல்ஸ் பிரான்சிஸ் பாட்டர் என்பவர் நிலைநாட்டியிருக்கின்றார். இஃதும் ஓர் மதமா? இதற்கு மதம் என்னும் ஓர் பெயரும் வேண்டுமா? இதனை ஒரு மனிதர் ஸ்தாபிக்கவும் முன் வர வேண்டுமா? என்று சங்கிக்கும் நிலைமைக்கு இடந்தரும் இம்மதத்தினது ஸ்தாபகர் தன் மதமே உலக மதங்கள் என்னும் மைதானத்தில் ஓர் முன்னேற்றம் என்றுரைக்கின்றார்.

கடவுள் வழிபாடு முதல் மணச் சடங்குகள் முதலிய நிகழ்ச்சிகளின் கண் ஓதப்படுவன வரையில் இப்புதிய மதத்தார் பல மாறுபாடான முறைகளைக் கைக்கொண்டிருக்கின்றனர். நியூயார்க், சிகாகோ, மீனபோலீஸ், முதலிய நகரங்களில் இம்மதக்காரர்கள் வணங்கப் புதிய கட்டிடங்களும் அமைக்கப்பெற்றுள்ளன. நியூயார்க் நகரத்தில் ஒரு பெரும் வணக்க ஸ்தலம் கட்டப்பெற்ற போழ்து, அடிப்படைக்கல் நிறுவும் விழாவில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு இப்புதிய மதத்தினர் பலர் நீக்கப்பெற்று விட்டனர் என்றும் தெரிகின்றது.

கிறிஸ்துவ மதத்திற்கும் இதற்கும் பல முரண்பாடுகளைக் காணலாம். கடவுளைப் போற்றவும் வேண்டவும் அவசியமில்லை என்பது இப்புதிய மதத்தினரின் கொள்கை. இதற்கு அவர்கள் பல ஆதாரங்கள் கூறுகின்றனர். தலைமையாகக் கடவுளைத் தொழுவதும் வேண்டுவதும் வியாபாரம் போன்றதென்று கூறுகின்றனர். இவர்களின் தலைமையான விதிகள் பத்தாம். அவையாவன:—

பழைய மதம்: தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தான்.

புதிய மதம்: தேவன் வானத்தையும் பூமியையும் படைக்கவில்லை. மனிதன் நாளாவட்டத்தில் பல நிலைகளை அடைந்து தற்போதைய நிலைமைக்குத் தானாக வந்தடைந்திருக்கின்றான்.

பழைய மதம்: நரகம் என்பது பாதகர்களைத் தண்டிக்கும் இடமாகும்.

புதிய மதம்: நேர்மையான வாழ்க்கைக்குரிய சட்டதிட்டங்களைக் கடக்குங்கால் மனிதன் தண்டனை யடைகின்றான்.

பழைய மதம்: சொர்க்கம் என்பது புண்ணியசாலிகள் மறித்த பின்னர் போகுமிடம்.

புதிய மதம்: நல்ல காரியத்தைச் செய்வதால் இயல்பாகவே மனிதனுக்கு ஓர்வித மகிழ்ச்சியும் ஆறுதலும் விளைகின்றது.

பழைய மதம்: மனிதனையும் தேவர்களையும் தன்னை வணங்கவே இறைவன் படித்தான்.

புதிய மதம்: தான் மேம்பாடடைவதே மனித வாழ்க்கையின் நோக்கமாகும். தானும், தன் சமூகமும் முன்னேற்றமுற விழைவதே மனித லட்சியமாம்.

பழைய மதம்: மதம் இயற்கைகுக்ப் புறம்பானது

புதிய மதம்: மதம் இயற்கைக்குப் புறம்பானதல்ல; இயற்கையிலுள்ளதேயாம். இயற்கைக்குப் புறம்பான தென்பதும் அறிவிற்கெட்டாத இயற்கையின் தன்மையேயாகும்.

பழைய மதம்: மனிதன் படைப்பில் பாபம் செய்தவன்.

புதிய மதம்: மனிதன் அநியாயத்திற்கு ஒரு போழ்தும் தலை சாய்க்கக்கூடாது. அவசியமின்றி எந்தக் கஷ்டத்தையும் ஏற்றல் கூடாது. கஷ்ட நிவாரணமே மனிதனின் கடமை.

பழையமதம்: உண்மை என்பது மதத்தில் தான்உண்டு: உண்மையான மதம்எங்கள் மதமே.

புதியமதம்: உண்மை எல்லா மதங்களிலும் உள்ளது. மதங்கட்குப் புறம்பாகவும் உண்மை இருக்கின்றது.

பழையமதம்: மோட்சம், பாபஈடு, வழிபாடு, வேண்டுதல், முதலியன வேண்டுவனவாம்

புதியமதம்: இவை எட்டுணையும் அவசியமில்லை.

பழையமதம்: மோட்சம் வெளியிலிருந்தே கிடைக்கின்றது.

புதிய மதம்: முன்னேற்றம் தனக்குள்ளிருந்தே விளைகின்றது. எந்தமனிதனும், தெய்வமும், வணங்கப்படும் பொருள் எதுவும் மனிதனைக் காப்பாற்ற முடியா.

இப்புதிய மதக்காரர்கள் விவாகத்தொடர்பான காரியங்களை எளிதான முறையில் அமைத்திருக்கின்றனர். தம்பதிகள் தங்கள் விவாக ஒப்பந்தத்தைத் தாமாகவே ஒருவர் முன் ஒருவர் உறுதி செய்துக் சொள்ளலாம். வேறொருவர் இருந்து ஒப்பந்தம் ஓதும் பழக்கம் இவர்கட்கு அவசியமாயும் தோன்றவில்லை. மணப் பெண்ணுக்கு ஒருவரைப் பொறுப்புடையவராக நியமித்துக் கொள்ளுவதில்லை; அதாவது பெண்ணை ஒருவர் கொடுப்பவராகவும், மணமகன் அதனைப் பெறுவதாகவும் உள்ள ஒரு முறையை இவர்கள், பெண்கள் பூரண பொறுப்பும் உடையவர்கள் என்ற நம்பிக்கையின் பேரில், ஒப்புவதில்லை. விவாகரத்து முதலியவைகளை இவர்கள் இருபாலாரும் நினைத்த வாங்கு கைக்கொள்ளலாம். எனினும் இம்மதத்தினர் விவாகரத்தைப் பெரும்பான்மையாக விரும்புவதில்லையாம்; இருவரும் ஒத்து வாழ்வதே உயர்வெனக் கருதுகின்றனர்.

இவர்கள் வணக்கஸ்தலங்கள் உண்மையில் வணக்கஸ்தலங்கள் அல்ல; சபாமண்டபங்களேயாம். கடவுள் வழிபாடு புரிவதற்குப் பதிலாக ஆங்கு சொற்பெருக்குகள் ஆற்றப்படும். கடவுள் வழிபாட்டினால் ஆத்மாக்கள் கோழைகளாய் அழிந்து போகின்றன வென்றும், தெய்வ பயத்தை விட்டு ஒவ்வொருவனும் தனித்தனியே தனக்குத்தானே மதத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதுதான் இவர்களின் தலைமையான கொள்கை.

——— —

யவ்முந்நபி (ஸல்)

நபிகள் நாயகம் அவர்களது பிறந்த நாள் கொண்டாடப்பட வேண்டும்

முஸ்லிம்களின் கடமை

ஓர் முக்கிய விண்ணப்பம்

முஸ்லிம் சகோதரர்காள்!

சில நூற்றுண்டுகளாக இஸ்லாம் மத, அரசியல் வலிமைக்கு பிறரால் இடையூறு விளைக்கப்பெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். ஒரு சாரார் நமது மதத்தையும் பெருமை தங்கிய நமது மதத் தலைவர் அவர்களையும் இழித்துப் புனைந்துரைத்து அவதூறு செய்து வருகின்றனர். இதன் பயனாய் நம் மதத்தின் உயரிய உண்மைகளைப் பிறமதத்தினர் நன்குணரா வண்ணம் அவர்கள் மனத்தில் தவறான கருத்துகளை உட்புகுத்தப் பெற்றுள்ளது. மற்றொரு சாரார் நம் மதத்திற்குள் இருந்துகொண்டே தவறான கொள்கைகளையும் நோக்கங்களையும் கற்பித்துரைத்து மதத்தின் அடிப்படையை அசைக்க முயன்று வருகின்றனர்.

உலகத்தின் உயரிய நிலையில் திகழக்கூடிய ஒரே மதமான நம் இஸ்லாம் மதத்தின் வலிமை மேற் கூறியவாறுள்ள இடையூறுகளால் குன்றி, நமக்குள் நிலவும் ஒருமை குலைக்கப்பெறும் தறுவாயில் உள்ளது.

இதுபோழ்து இவ்வுலகத்தே 900 பாஷைகள் பேசப்படுவதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. இத்தொள்ளாயிரம் பாஷைகளுள் 853 பாஷைகளில் பைபிள் என்னும் கிறிஸ்துவமத நூலானது மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. மொழி பெயர்ப்பதுடனில்லாது, அம்மொழி பெயர்ப்புகளைக் கிறிஸ்துவப் பிரசாரகர்கள் அபரிமிதமாய்ப் பரப்பியும் வருகின்றனர். உதாரணமாக 'பிரிட்டிஷ் அண்டு பாரின் பைபிள் சொசைட்டி' என்னும் பிரிட்டிஷ் கிறிஸ்துவப்பிரசாரக சங்கத்தார் ஒருகூட்டத்தினரே 380,000 000 'பைபிள்' பிரதிகளை மொழி பெயர்த்து, அச்சிட்டு வழங்கியுமிருக்கின்றனர். எனின், இவர்களின் ஊக்கத்தை உற்று நோக்குங்கள். உலக மதமான இஸ்லாத்தைப் பின்பற்றிய நம் முஸ்லிம் மத சகோதரர்கள் இத்தகைய ஊக்கத்தை எடுத்துழைத்திருக்கின்றனரா என்பதை நீங்களே சிந்தியுங்கள்.

நம் மதம் இரண்டு பொருள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒன்று திரு குர்ஆன், மற்றொன்று ஹதீது ஷரீப் முதலாவன. இறைவனே 'உறுதியாக குர்ஆன் சர்வ உலகத்திற்கும் நன்மொழியாகும்' என்றறைந்திருக்கின்றான். இவ்வுலக மதத்தை இதுகாறும் 21 பாஷைகளாற்றான் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கின்றார்கள் எனின் இந்நிலைமைக்கு நாம் என்னென்போம். இவ்விருபத்தொன்றனுள் நம் மதத்தினர் மொழி பெயர்த்தவை (5) ஐந்தே மொழி பெயர்ப்புக்களாகும் எனின், இதனினும் வருந்தத்தக்கதோர் நிலைமை வேறுளதோ? திரு குர்ஆனையே சரிவர எல்லா பாஷைகளிலும் பெயர்த்துப் பரப்பவில்லை எனின் ஹதீதுகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? மேலும் கிறிஸ்துவப் பிரசாரகர்களால் திரு குர்ஆன் மொழி பெயர்க்கப்பெற்று வருமாயின், அவர்கள் கையில் அது எவ்வாறு வெளிவரும் என்பதையும் நாம் யோசிக்க இடமுளது; அதுதான் திரித்துக் கருத்து மாறுபட, மொழி பெயர்க்கப்படும் என்பது முக்காலும் திண்ணம். துவக்க காலத்தே நம் வேதமும் ஹதீதும் ஒளிமிகுந்து கதிர் பரப்பி வந்தன; ஆனால் இன்றைக்கோ அதன் ஒளி சிறிது மழுங்கித் தோன்றுகின்றது என்றே கூற வேண்டியிருக்கின்றது.

சகோதரர்களே! இஸ்லாம் மதம் உலக மதம் என்பதை மீண்டும் உங்கட்கு வலியுறுத்திக் கூறுகின்றேன். நமது நபிகள் பெருமான் குறிப்பிட்ட வகுப்பார்க்கென்றாவது, குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு என்றாவது தோற்றுவிக்கப் பெற்றார்களல்லர். அவர்கள் இவ்வுலக மக்கட்கெல்லாம் குருவாகும். எனவே, நம்

முன்னோர்களைப் போன்று நம் மதத்தை உலகமெங்கணும் பரப்புதல் நமது தலைமை யான கடனன்றோ? இவ்வுலகம் இற்றைக்கு ஓர் தனித்த பிரசங்க மாளிகையைப் போன் றுளது. தூரம், காலம் என்ற வேற்றுமையை தற்காலக் கருவிகள் அறவே ஒழித்துவிட்டன உலகத்தில் முஸ்லிம்கள் நான்கிலொரு பகுதி யினராவர். உலகத்தில் எளிதாய் எங்கணும் சென்று நமது மார்க்க முறைகளைப் பரப்புவ தற்குரிய வசதிகள் மீக்கூர்ந்து கிடக்கும் இந் நாளிலே நாம் இந்நிலைமையிலிருப்பது நமக் குத் தகைமையாமா? இந்நாளிலேயோ நம் மதத்தைப்பற்றிப் பிறர் ஐயப்பாடும், தவ றான எண்ணமும் படைத்திருப்பது? இதனை நீக்குதல் நமது கடமையன்றோ?

நமக்கு நற்காலம் அணுகிவிட்டது. இவ் வுலகத்து முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று பட்டு, ஒரே நோக்கமாக முனைந்து நின்று, இஸ்லாமிய மதத்தைப் பரப்புதல் வேண்டும். இதற்குத் தக்க நாள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவவதரித்த நந்நாளினும் வேறு எந்நாள் உளது? உலகமெங்கணும் இத்திரு நாளன்று நம் மதத்தினர் பிற மதத்தினரை யும் அழைத்துக்கொண்டு ஆங்காங்குகூட்டம் போடவேண்டும். கூடி அன்று, நபிகள் பெரு மானின் வாழ்க்கைச் சரிதையினை சொற் பெருக்குகள் வாயிலாய் வெளிப்படுத்த வேண் டும். அவர்களின் உண்மை நிகழ்ச்சிகளை மொழி பெயர்த்து எல்லா பாஷைகளிலும் பிரசுரித்தல் வேண்டும்.

இவ்வாறு செய்வோமாயின், இதனால் இஸ் லாமிய உலகத்திற்கேயன்றி, மற்றெல்லா மக் களின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் நற் பயன் விளையுமன்றோ? முக்கியமாக இதனால் முஸ்லிம்கட்குள்ளாகவே மத ஆர்வம் மிகும்; முஸ்லிம்கள் தமக்கேற்ற சீர்திருத்தங்களைச் செய்துகோடற்கும் இடந்தரும்; இஸ்லாம் மதத்தினர்க்குள் நெருங்கிய ஒற்றுமை பன் மடங்கு வலிமையடையும். ஈதன்றி இஸ்லாத் தைப்பற்றிப் பிறர் உண்மையான அபிப்பிரா யத்தைக் கொண்டவர்களாய், நம் நெறி நூல் களைப் பயிலவும் துவங்குவர்; அவர்கடம் தவறான அபிப்பிராயங்கள் சிதைவுண்டு போம்; உலோகாயதத்தில் ஆழ்ந்து அல்லற் படும் மனித சமுகம் அதன் தீமையினின்று தப்பிச் சுகம் படைக்கும். சமத்துவம், சகிப் புத்தன்மை, நல்லொழுக்கம், பரசாதனம் இவைகளைப் பெற மனிதர்கள் முனைவார்கள்; தற்போழ்துள்ள மனிதனுக்கு மனிதன் கொண்டுள்ள பகைமை அற்றுப்போம்.

இத்தகைய பிரசாரத்திற்கு எந்நாள் ஏற்ற நாள் என்பது கேள்வி? ஆண்டுதோறும் வெவ் வேறு நாளைக் குறிப்பிட்டுக் கொள்வது விரும் பத் தக்கதன்று. இந்நாள் இவ்வுலக மக்கள் சிறப்பாகக் கருதிவரும் ஓர் நாளாய் இருப் பின் இதனினும் பாராட்டத் தக்கதாய் இருக் கும். இத்தகைய நாள் எதுவாய் இருக்கலாம் எனின், அது ரபீவுல் அவ்வல் மாதம் 12-ம் நாள் என்றே பெரியோர்கள் முடிவு செய் துள்ளனர். இதுவே நபிகள் பெருமான் திரு வவதரித்தப் பெரு நாள்; இதுவே அவர்கள் மெய்ப்போதம் பெற்ற நாள்; இதுவே இஸ் லாம் மதத்திற்கு அடிப்படை நிறுவிய நந் நாள். சுருங்கக் கூறுமிடத்து ரபீவுல் அவ் வல் 12-ம் நாளே முஸ்லிம் சகோதரத்துவம் உதித்த உயர்வுடைய நாள்.

கடந்த ஆண்டிலும் இத்தினத்தை இந்தியா வெங்கணும் கொண்டாடினர் என்பது அறிந் ததே. போதிய அவகாசமின்மையால் சென்ற ஆண்டில் அதனைப் போதிய அளவில் கொண் டாட முடியாமற் போயிற்று. என்றாலும் நிகழ்ந்த வரையில் போற்றத் தக்கதே. 15 தனிப்பட்ட பாஷையில் இந்தியா முழுதிலும் சொற்பெருக்காற்றப்பெற்றது. 3 லட்சம் பிரதிகள் முஸ்லிம்கள், முஸ்லிம்களல்லாதார்க் கிடையே பரப்பப் பெற்றன. இத்தகைய திட்ட வரையான ஓர் நிகழ்ச்சி முஸ்லிம் இந் தியாவில் ஓர் அரிய நிகழ்ச்சியாகும் என்பதை மறுக்கமுடியாது.

இந்தியா மட்டிலுமேன்? இவ்வுலக மெங்க ணும் நம் இயக்கத்தை நாம் பரப்புதற்கு இது வே ஏற்ற தருணம். இப்பொழுது ஆங்கிலத் திலும், அறபியிலும் உள்ள மொழிபெயர்ப் புக்கள் சித்தமாயுள்ளன. எனவே, இவை களைக்கொண்டு உலகமுழுதுமுள்ள முஸ்லிம் பத்திரிகைகள், சங்கங்கள், ஆகிய பலவும் அந்தந்தப் பகுதியில் வழங்கி வரும் பாஷை யில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்க வேண்டும். இரண்டொரு முஸ்லிம்கள் வாழும் சிற்றூர் களில்கூட இத்திருநாளன்று மேற்கூறியவாறு நிகழ்த்துதல் முஸ்லிம்களின் கடமையாம்,

எனவே, இவ்விண்ணப்பம் தக்க பயன் விளைவிக்கும் என்றும், இவ்வுலகத்தின் ஒவ்வொரு சிற்றூரிலும், பேரூரிலும் உள்ள இஸ்லாமிய சகோதரர்களனைவரும் உண்மையான ஊக்கம் எடுத்துக் கொள்வார்களெனவும் எதிர்பார்க்கின்றோம். ரபீவுல் அவ்வல் 12 ம் நாள் விடிந்ததும் ஒவ்வொருவரும் இப்புனித பிரசாரத்தில் இறங்கவேண்டும். அன்று முஸ்லிம் வாலிபர்கள் மேற்கூறப்பட்ட பிரசுரங்களை கையில் ஏந்திக்கொண்டு பள்ளிகள் கல்லூரிகள் பாடசாலைகள் மஸ்ஜிதுகள் மதரஸாக்கள் சத்திரங்கள் கடைத்தெருக்கள் ரயில்வண்டி நிலயங்கள் காரியாலயங்கள் கப்பல் துறைகள் ஆகிய எல்லா இடங்களுக்கும் சென்று இத்திருப்பிரசுரங்களை இலவசமாய் வினியோகிக்கவேண்டும். யாண்டும் நபிகள்பெருமானார் (ஸல்) அவர்கள் கியாதியை ஓங்கச் செய்யவேண்டும்.

இவ்விழா நடைமுறைகள் வெற்றியுடன் முடிவதற்காக உலகில் உள்ள எல்லா முஸ்லிம்களின் ஒத்துழைப்பையும் நாம் இயல்பாக எதிர்பார்க்கின்றோம். இவ்விண்ணப்பத்தைக் கண்ணுறும் வாசகர்கள் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி நமக்குத் தெரிவிப்பார்களாக:—

1. அந்தப் பகுதிகளில் உள்ள பாஷை.
2. ஆங்குள்ள இஸ்லாமிய சங்கங்கள்.
3. ஆங்குள்ள இஸ்லாமியப் பத்திரிகைகள்.
4. ஆங்குள்ள செல்வாக்குடைய மனிதர்கள், உலமாக்களின் பெயர்.

இவைகளை அறபியிலாயினும், ஆங்கிலத்திலாயினும், பாரசீகத்திலாயினும், உர்துவிலாயினும் தெரிவிக்கலாம். நபிகள் பிறந்த நாளன்று ஆற்றுமாறு திட்டப்படுத்தியுள்ள பிரசங்கப் பிரதிகள் கைச்சாத்திட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அப்துல் மஜீத் கர்ஷி.
பட்டி, லாகூர் ஜில்லா,
வட இந்தியா.

இஸ்லாத்தின் பாதுகாப்புச் சங்க அறிக்கை

"தன்னுடைய தகப்பனையும் மகனையும் மற்றும் எல்லா சனங்களையும்விட என்னை (நபி பெருமானவர்களை) அதிகமாக நேசிக்கும்வரை உங்களில் எவனும் ஈமான் கொண்டவனாக மாட்டான்—ஹதீது.

சோதரர்காள்!

சிறப்புற்ற ரபீஉல் அவ்வல் மாதம் சமீபித்துவிட்டது: அம்மாதந்தான் நபிகள் திலகம் (சல்) அவர்கள் அவதரித்த மாதம்; நபிப்பட்டம் அருளப்பட்ட மாதம். அம்மாதத்தை எதிர்பார்த்து முஸ்லிம்களின் ஹிருதயம் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்நாள் நபிகள் நாயகம் (சல்) அவர்களின்மீது சலவாத்துக்கள் ஓதப்படுவதோடு மௌலிது ஷரீபுகளும் சிறப்பாய் ஓதப்படும் திருநாளாகும். நாயகமவர்களின் ஜீவிய சரிதையையும் நற்குணங்களையும் எடுத்தோதப்படும் புண்ணிய மிக்க நந்நாளுமாகும். இத்திருநாளை கொண்டாடவேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்.

அந்நாளைக் கொண்டாட வேண்டிய விபரங்களை காஜி அப்துல் மஜீத் சாஹிப் கர்ஷி அவர்களின் வேண்டுகோள் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க தமிழ் நாட்டிலும் சிலோன், பர்மா, மலாய் நாடு, பினங், சிங்கப்பூர், சைகோன் முதலிய இடங்களிலும் ரபீஉல் அவ்வல் மாதம் 12-ம் தேதியை கொண்டாட்ட தினமாக ஏற்பாடு செய்யும்படி வேண்டுகிறோம். அப்புனித தினத்தன்று ஒவ்வொரு பேரூர் முதல் சிற்றூர்களிலும் மகா நாடுகள் கூட்ட ஏற்பாடு செய்யுங்கள். அம்மகா நாட்டில் கர்ஷி சாஹிப் அவர்களால் இயற்றப்பெற்ற உர்து சீரத்துன்னபியை செந்தமிழில் மொழி பெயர்த்திருப்பதைப் படியுங்கள். மேலும் அன்றைய தினம் அப்புத்தகத்தை அக்கூட்டத்திலும் நகரிலுள்ள நானு பாகங்களிலும் முஸ்லிம்

களுக்கும் முஸ்லிம் அல்லாதாருக்கும் வினியோகஞ் செய்யுங்கள். பொதுவாக ஆல நபி அவர்களின் குணாதிசயங்களும் நங்நடத்தைகளும் போதனைகளும் சகல மானிடர்களின் ஹிருதயங்களில் படியும்படி செய்யுங்கள். ஷை பிரசங்கத்தை செந்தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு இலவசமாய் வினியோகிப்பதற்கு நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் தக்க ஏற்பாடு செய்துவருகிறது. அல்லாஹுதஆலாவின் கிருபையால் கூடிய சீக்கிரம் முடிவடையும். ஆங்காங்குள்ள சங்கங்களும் பொது ஸ்தாபனங்களும் தலைவர்களும் அவரவர்களின் சரியான விலாசத்தையும் அவ்வூரில் வினியோகஞ் செய்யப் படுவதற்கு எத்தனை புஸ்தகங்கள் வேண்டுமென்பதையும் விவரமாய்த் தெரியப்படுத்துங்கள். உர்து இங்கிலீஷ் காப்பி வேண்டுவோர் தங்களுக்கு எத்தனைப் பிரதிகள் தேவைப்படும் என்பதை தெரியப்படுத்தினால் தக்க ஏற்பாடு செய்கிறோம். மற்றும் அன்று நடத்தவேண்டிய மற்ற விபரங்களை அடுத்த ரபீஉல் அவ்வல் மாசிகையில் வெளியிடுவோம்.

இங்ஙனம்,

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்

48, அங்கப்பன் தெருவு, மதராஸ் ஜி. டி.

இயற்கை மதம்.

மௌலவி. **A. K.** அப்துல்ஹமீது சாஹிப் (பாக்கவீ) வரைவது.

எல்லாப்புகழும் அல்லாஹுதஆலாவுக்கே உரித்தாகும். அவன், எண்ணிறந்த வகைகளையும், தொகைகளையுமுடைய சிருட்டிகளைப் படைத்துள்ளான். இவ்வுலகில், தான் சிருஷ்டித்திருக்கும் பொருள்களிளெல்லாம் மனிதனை மேலான சிருஷ்டியாக அமைத்திருப்பதன்றி, மற்ற சிருஷ்டிகளின்மீது ஆதிக்கமும் வகித்து அவைகளை நன்மையான வழிகளில் உபயோகித்து இன்பமடையும்படியாகவும் அருள்புரிந்து இருக்கின்றான்.

ஆகவே, அப்பொருள்களை மனிதன் நியாயமானவழியில் அவைகளுக்குரிய முறைப்படி அவசியத்திற்கு வேண்டிய அளவு உபயோகித்துவந்தால், இம்மையிலும் மறுமையிலும் நன்மையடையக் கூடுமாகவும், அதற்கு மாறாக தவறான முறையில் அவைகளை உபயோகித்துவந்தால், இம்மையிலும் மறுமையிலும் நஷ்டம் அடையவேண்டியதாகவு மிருக்கின்றது. அவ்வாறு மனிதர்கள் நஷ்டமடையாமல் இருக்கும்பொருட்டு அப்பொருள்களின் சிருஷ்டி கர்த்தாவாகிய இறைவனே அவைகளை உபயோகிக்கும் முறைகளையும், கிரமத்தையும், அளவையும் திரு குர்ஆன் என்னும் வேதத்தின் மூலமாக நமக்கறிவித்தும் அருள்புரிந்திருக்கின்றான்.

திரு குர்ஆன் என்னும் வேதத்தின் மூலம் இறைவன் நமக்கறிவித்திருப்பவைகள் யாவும் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் முற்றிலும் பொருத்தமானவைகளாகவும், அனுபவ சாத்தியமானவைகளாகவும், இயற்கையை அடிப்படையாகக் கொண்டவைகளாகவும், எக்காலத்திலும் எத்தேசத்திலு முள்ளவர்கள் எளிதில் அனுசரிக்கக்கூடிய வைகளாகவும், மானிடவர்க்கத்திற் கிடையில் மெய்யான சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டுபண்ணக் கூடியவைகளாகவும், மெய்யான நீதியையும் நியாயத்தையும் மானிடவர்க்கத்திற்குள் நிலை நிறுத்தி, இவ்வுலகத்திலேயே சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டக்கூடியவைகளாகவு மிருக்கின்றன.

இத்தகைய திரு குர்ஆன் என்னும்மேலான அவ்வேதத்தை இறைவன், நபிபெருமான், முஹம்மத் முஸ்தபா(ஸல்) அவர்கள் மூலம் நமக்களித்தருள் புரிந்திருக்கின்றான்.

அவ்வளவு மேலானவேதத்தைப் போதிக்க ஆரம்பித்த நபிபெருமான் அவர்களுக்கு, அக்

காலத்தில், இருள்சூழ்ந்து கிடந்தோர்களால் அளவிலா இடையூறுகள் விளைவிக்கப் பெற்று துன்புறுத்தவும் பெற்றது எனினும், நபிபெருமானவர்கள் அவைகளை ஒருசிறிதும் பொருட்படுத்தாது, அவ்வேதத்தை மானிடவர்க்கத்திற்கு போதித்தே சென்றார்கள். மேலும் அதிற்கூறியவைகளை எவ்வாறு கைக்கொண்டு நடக்கவேண்டுமென்பதையும் தாங்களே அவ்வாறு நடந்து காண்பித்துஞ் சென்றார்கள்.

ஆகவே, அந்நபிபெருமானவர்கள் மீதும் அவர்களறிவித்த பிரகாரம், அவ்வேதத்தைப் பின்பற்றி நடந்த அவர்களுடைய தோழர், கிளைஞர்மீதும், அவ்வாறே அவ்வேதத்தைப் பின்பற்றி நடக்கும் யாவர்மீதும் இறைவனுடைய அருள் எந்நாளும் மேன்மேலும் உண்டாவதாக! ஆமீன் !!

இயற்கை மதமும் அஃது ஏற்பட்ட காலமும்

"றமலான் மாதம் எத்தகைய (மகத்துவம்பொருந்திய) தென்றால், அதிற்றான் திரு குர் ஆன் (என்னும் வேதம்) அருளப்பெற்றது. அஃது மானிடவர்க்கத்திற்கு நேர்வழிகாட்டியாகவும், அந்நேர்வழிக்குத் தெளிவான அத்தாக்ஷியாகவு மிருப்பதுடன், பகுத்தறிவையுமளிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே, உங்களிலெவன் அம்மாதத்தை அடைகின்றானோ அவன் அதில் நோன்பு நோற்கவும்."
(அ 2: வ. 185.)

என்று இறைவன் திரு குர் ஆனின் மகத்துவத்தைப்பற்றி மிகமேலாகப் போற்றிப்புகழ்ந்து கூறி, அஃதருளப்பெற்ற றமலான் மாதத்தை, அம்மாதம் முழுவதும் நோன்புநோற்றே கொண்டாடும்படியாகவும் கட்டளையிடுகின்றான்.

இவ்வுலகத்தில் பெருநாளாகவும், திருநாளாகவும், பற்பலர் வருஷாவருஷங் கொண்டாடிவருகின்ற நாட்களைப்பற்றி அவர்கள் கூறுஞ் சரித்திரங்களைக் கவனித்தால், யாதொருகஷ்டத்திற்சிக்கித் தவித்துக்கொண்டிருந்த அவர்களுடைய மூதாதைகள் அந்நாளில் விடுதலை அடைந்திருப்பார்கள். அல்லது மகத்தானதொரு நன்மையையேனும் அந்நாளில் அவர்கள் அடைந்திருப்பார்கள். ஆதலாற்றான் அவர்களுடைய சந்ததிகள் இந்நாள்வரையில் அந்நாளைப்பெருநாளாகவுங் கொண்டாடி வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

திரு குர்ஆன் என்னும் வேதம் அருளப்பெற்ற றமலான் மாதத்தைக் கொண்டாடும்படி கட்டளையிட்ட இறைவன், அவ்வாறான யாதொரு விஷயத்தையும் அறிவிக்கவில்லை எனினும், திரு குர்ஆனாகிய வேதம் அம்மாதத்திற்றான் அருளப்பெற்றது என்று கூறி, இஃதொரு காரணத்தையே குறிப்பிட்டு, அதற்காக அம்மாதம் முழுதும் அதனை அவ்வாறு கொண்டாடும்படி கட்டளையிடுகின்றான்.

தவிர, அம்மாதத்திலும், இவ்வேதம் அருளப்பெற்றதொரு இரவுக்கு 'லைலத்துல்-கத்ரி என்று பெயரிட்டு "அது ஆயிரம் மாதங்களைவிட மிக்க மேலானது" என்றும் அறிவித்து 97-வது அத்தியாயம் முழுதும் அதன் சிறப்பைப்பற்றியே கூறுகின்றான்.

ஆகவே, திரு குர்ஆன் என்னும் வேதம் போதிக்கும் தத்துவங்களெவை ? அவைகள் எவ்வாறானவை ? அவைகளால் மானிடவர்க்கம் அடைந்துள்ள நன்மைகள் எவை ?

திரு குர்ஆன், லைலத்துல்-கத்ரி என்னும் இரவில் அருளப்பெற்றதென்றால், அதற்காக அவ்விரவு ஆயிரம் மாதங்களைவிட எவ்வாறு மேலானதாகிவிடும்? அதற்காக றமலான் ஒரு மாதம் முழுவதேயுமே கொண்டாட வேண்டிய காரணமென்ன ?

அம்மாதம் முழுதும் நோன்பு நோற்க வேண்டிய அவசியமென்ன ? அவ்வாறு நோன்பு நோற்பதால் மானிடவர்க்கம் அடையும் நன்மைகளெவை ? என்று சிறிது கவனிப்போம்.

திரு குர்ஆன் போதிப்பவைகளின் தன்மைகள்

திரு குர்ஆன் போதிப்பவைகள் யாவும் இருவகைப்படும். ஒன்று:—கொள்கை சம்பந்தப்பட்ட சித்தாந்தங்கள். மற்றொன்று:—நடத்தை சம்பந்தப்பட்ட அனுஷ்டானங்கள்.

திரு குர்ஆன் போதிக்கும் இவ்விருவகைப்பட்டவிஷயங்களும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத சம்பந்த முள்ளவைகளாகவும், இயற்கையை அடிப்படையாகக்கொண்டவைகளாகவும், அனுபவ சாத்தியமானவைகளாகவும், அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் முற்றிலும் பொருத்தமானவைகளாகவும், மனிதனாகப் பிறந்த எவனுக்கும், எவ்வித வித்தியாசமுமின்றி, சமமான உரிமைகளை அளித்து, அவர்

களை, மனித சமுக வளர்ச்சிக்குரிய வழியில் தவறுமல் செலுத்தக்கூடியவைகளாகவுமிருக்கின்றன.

ஏனென்றால், திரு குர்ஆன் போதிப்பவைகள் எவை? அவைகளால், மானிடவர்க்கம் அடைந்துள்ள நன்மைகள் எவை? என்பதைப் பரிசீலனை செய்யுங்கள். அவ்வாறே தெளியப்படுகின்றது.

திரு குர்ஆன் போதிப்பவைகளும் அவைகளால் ஏற்பட்ட நன்மைகளும்

மெய்யான சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் அளித்தல்

ஹிந்துக்களில் 'தீண்டப்படாதார்' என ஒரு வகுப்பாரிருக்கின்றனர். அவர்களின் தொகை ஆறு கோடியாம்:

அந்த ஆறுகோடி மக்களின் நிலைமை இவ்வுலகத்தில் எவ்வாறிருக்கின்றதென்பதை சிறிது கவனிப்போம். இயற்கையாக மனிதர்களுக்குள்ள எவ்வித உரிமையுமே அவர்களுக்குக்கிடையாதெனக்கூறி, மற்றைய ஹிந்துக்கள் அவர்களை மிருகத்திலும் மிக்க கேடான தாழ்ந்த நிலைமையில் ஆழ்த்தி வைத்திருக்கின்றனர்.

இவ்வாறு இவர்களை ஆழ்த்தி வைத்திருக்கும் அந்த ஹிந்துக்கள் "இவ்வாறு கோடி மக்களும் தங்களது ஹிந்து மதத்தையே சார்ந்தவர்கள்" எனவுங் கூறுகின்றனர்.

எனினும், அந்த தீண்டப்படாதார் என்போர், மிக்க தாழ்ந்த நிலைமையிலுள்ளதொரு ஹிந்து அனுபவித்துவரும் உரிமைகளில் சாதாரணமான ஒன்றை அடைய ஆயிரக்கணக்கான வருஷம் முயற்சி செய்தும் இன்றளவும் அடையமுடியாமலிருக்கின்றனர்

ஆகவே, மிருகத்திலும் தாழ்ந்த இந்நிலைமையில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஆழ்ந்து கிடக்கும் அவர்களை, கேவலமான இவ்வடிமைத் தனத்திலிருந்து விடுவித்து, "மற்றைய எம்மனிதர்களுக்கும் எவ்விஷயத்திலும் நீங்கள் சமமானவர்களே; மற்றைய மனிதர்கள் அடைந்திருக்கும் மேலான எப்பதவியையும் நீங்களும் உங்களுடைய முயற்சியைக் கொண்டு அடையலாம், உங்களுக்கும் மற்றைய மனிதர்களுக்கும் எவ்விஷயத்திலும் எவ்வித வித்தியாசமுமில்லை; உங்களுடைய பொருள், மதிப்பு, உயிர் முதலியவைகள் மற்றையவர்களின் பொருள், மதிப்பு உயிர் முதலியவைகளைப் போலவே மதிக்கப்பெறும்;"

"ஒரு அரசனுடைய பொருளுக்கோ, பெருமைக்கோ உயிருக்கோ தீங்கிழைத்தவனுக்கு என்ன தண்டனை விதிக்கப்பெறுமோ, அதே தண்டனைதான் உங்களுடைய பொருளுக்கோ, பெருமைக்கோ, உயிருக்கோ தீங்கிழைத்தவனுக்கும் விதிக்கப்பெறும்;"

"இவ்வாறு உங்களுக்குத் தீங்கிழைத்தவன் ஒரு அரசனாக இருந்தபோதிலும், அதற்குரிய தண்டனையிலிருந்து அவன் தப்பமுடியாது;"

"ஒரு அரசனுக்கேற்பட்ட இடையூறை நிவர்த்திப்பது மற்றைவர்கள்மீது எவ்வாறு கடமையோ, அவ்வாறே உங்களுக்கேற்படும் இடையூறுகளை நிவர்த்திப்பதும் உங்கள் அரசன்மீதும் மற்றையவர்கள்மீதும் கடமையாகும்;"

"தலைவனென்ற ஒரு விஷயத்தைத் தவிர அரசனுக்கும் உங்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை;"

"பிறப்பைக்கொண்டு ஒருவன் மேலென்றே கீழென்றே கூறிவதற்கில்லை: நடத்தையைக் கொண்டே மனிதனின் மேன்மையை நிதானிக்கவேண்டும்;"

"இவ்வுலகிலுள்ள பொருள்களை உபயோகிக்க மற்றெவருக்கும் என்ன உரிமை உண்டோ அதே உரிமை உங்களுக்குமுண்டு;"

"மனிதர்களுக்கு இயற்கையாகவுள்ள இவ்வுரிமைகளில் அரசனென்றே, அடிமையென்றே, ஆணென்றே, பெண்ணென்றே, ஏழையென்றே, பணக்காரனென்றே எவ்வித வித்தியாசமும் பாவிக்கமுடியாது;"

என்றவாறு சட்டத்தை இயற்றி அமலுக்குக் கொண்டுவரும்பக்ஷத்தில், தீண்டப்படாதாரென்னும் இவ்வாறு கோடி மக்களும் அந்நாளை எந்நாளாக மதிப்பார்கள்?

கேவலமான அடிமைத்தனத்தில் இத்தீண்டப்படாதார் ஆழ்ந்துகிடக்கும் ஆயிரக்கணக்கான வருஷங்களைவிட, இச்சட்டம் இயற்றப்பெற்று அமலுக்கு வந்த அந்நாளை மேல் என்றே கொண்டாடுவார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

இவ்வுலகத்தின் பற்பல தேசங்களிலும் பற்பல பாஷைகள் பேசி வாழ்ந்துவரும் ஐம்பது கோடி முஸ்லிம்களில் தீண்டப்படாதாரென யாதொரு வகுப்போ, நபரோ இருக்கின்றனரா?

அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவதற்கு முன்னர், அவர்களுக்குள்ளும் இத் தீண்டப்படாதாரைப் போல் மிக்ககேவலமான நிலைமையில் பலரிருந்தனர். அவர்களை அக்கேவலமான நிலைமையிலிருந்து உயர்த்தி அவர்களும் உலகத்திலுள்ள மற்றைய யாவருக்கும் சமமெனக்கொள்ளும்படியும், பாவிக்கும்படியுஞ் செய்தது திரு 'குர்ஆன்' என்னும் இவ்வேதந்தான்.

ஆகவே, இவ்வளவு மேலான பரிசுத்த வேதத்தை இவ்வுலகத்தில் இறைவன் அருள் செய்த 'லைலத்துல்-கத்ரி' என்னும் அவ் விரவை ஆயிரம் மாதங்களைவிட மேலென்று அவன் கூறியது மிகைபடக் கூறியதாகுமா?

ஆயிரம் மாதங்களென்ன? ஆயிரம் வருடங்களைவிட மேலென்று கூறிடினும், அது மிகைபடக் கூறியதாகாது.

தீண்டப்படாதாரென மிக்க தாழ்ந்த நிலைமையில் ஆழ்த்தப்பெற்று தவித்துக்கொண்டிருக்கும் சகோதரர்களே! அடியில்வரும் விஷயங்களைச் சிறிது சாவதானமாகக் கவனியுங்கள்!

என்றையதினம் நீங்கள் மனிதராகப் பிறந்தீர்களோ, அன்றையதினமே மற்றைய மனிதர்களுக்குள்ள சகல உரிமைகளும் இறைவனால் உங்களுக்கு அளிக்கப்பெற்று விட்டன.

உங்களுடைய இவ்வடிமைத் தனத்திற்குக் காரணம் உங்களுடைய பிறப்பல்ல, உங்களுடைய அறியாமையும், முயற்சியின்மையுமே காரணமாகும்.

உங்களுடைய அடிமைத்தனத்தை நீக்கிக் கொள்ள தற்காலம் நீங்கள் செய்யும் முயற்சிகளும் உங்களுக்குப் பலனளிக்கக் கூடியவைகளல்ல.

ஹிந்து ஆலயங்களுக்குள் சென்றுவிட்டால் நீங்கள் விடுதலை அடைந்துவிடலாமென்று எண்ணிக்கொண்டு அதற்காகப் பெருமுயற்சியும், கிளர்ச்சியும், செய்து வருகின்றீர்கள். அது உங்களாற் சாத்தியமானதா?

அவ்வாலயங்களுக்குள் நீங்கள் சென்றுவிட்டபோதிலும், அதனால் அடைக்கூடிய பயனென்ன?

அவ்வாலயங்களி லிருப்பவைகள் தானென்ன? அங்கிருப்பவைகள் உங்கள் கையாற்செய்த பொம்மைகள்தான்.

அவைகளை நீங்கள் சிருஷ்டித்தீர்களேயன்றி, உங்களை அவைகள் சிருஷ்டிக்கவில்லை.

உங்களுடைய குறைகளில் எதையும், அவைகள் நீக்க வல்லனவல்ல.

ஆலயப்பிரவேசத்தால் நீங்கள் உங்களுக்கு இயற்கையாக உள்ள உரிமைகளில் எதையும் அடைந்துவிட மாட்டீர்கள்.

ஆலயப்பிரவேசத்தால் நீங்கள் மற்றைய ஹிந்துக்களுடன், சமபந்திபோஜனத்தையும் கலப்புவிவாகத்தையும் அடைந்துவிட மாட்டீர்கள்.

(தொடரும்.)

சைமன் கமிஷன் அறிக்கை

இந்தியாவில் சுயராச்சியக் கிளர்ச்சி நெடுநாட்களாக ஏற்பட்டதின் பயனாக, மாண்டேகு ஸெம்சுபோர்டு திட்டம் என்னும் ஒரு ஆட்சிமுறைத் திட்டம் நிறுவப்பெற்றது. இதைத்தான் நாம் இதுவரை இரட்டையாட்சி யென்று கூறி வந்ததாகும். இதனால் சில இலாக்காக்களை மட்டும் இந்திய மந்திரிகளின் கையில் ஒப்புவித்து, அவ்வாறு ஒப்புவிக்கப் பெற்ற இலாக்காக்களை 10 வருடங்கள் சென்றதும் எந்த அளவில் நிறைவேற்றப் பெற்றது என்று ஒரு கமிஷனால் பரீட்சித்துப் பார்த்துப், பின்னர், மீண்டும் ஆட்சி முறையில் தக்க மாறுதல்களை சுயாட்சிப் போக்கில் இயற்றி அமைப்பது என்று முடிவிடப் பெற்றிருந்ததையும் அன்பர்கள் அறிவார்கள். எனவே இரட்டையாட்சி முறை நிகழ்ந்து வந்தது. சுயராச்சியக் கூக்குரல் மிகவும், 10 ஆண்டு பூர்த்தி பெறுவதற்குள்ளாகவே பிரிட்டானியாவில் தலைசிறந்த ஒரு வழக்கறிஞரான சர் ஜான் சைமன் என்பவரின் தலைமை

யின் கீழ் ஓர் கமிஷனை நியமித்து, அவர்களைக் கொண்டு இந்தியாவின் நிலைமையை ஆய்ந்தறிந்து தக்க ஆட்சிமுறைத் திட்டங்களைச் சிபார்சு புரியுமாறு பாராளுமன்றத்தார் நியமித்தனர். இதன் பேரில் சைமன் கமிஷனர்கள் ஏழு வெள்ளையர்கள், அந்தந்த மாகாண சட்டசபைக் கமிட்டியார்களின் துணைகொண்டும், தனியாகவும், இந்தியா எங்கணும் சுற்றி விசாரித்து, இங்கிலாந்து திரும்பிச் சென்று சென்றமாதம் 10ம்தேதியின்கண் ஓர்பகுதியாகவும், 24ம் தேதியின்கண் ஓர் பகுதியாகவும் தங்கள் சிபார்சுகளை அறிக்கையிட்டுள்ளனர். இரண்டாம் பகுதியில் தாங்கள் சிபார்சு புரியும் திட்டங்களுக்கு முதற்பகுதியில் ஆதாரம் காண்பிக்கப்பெற்றுள்ளது. எனவே, சிபார்சுகளடங்கிய இரண்டாம் பகுதியின்கண் கூறியிருப்பதை சுருக்கி எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது:—

முஸ்லிம்களைப்பற்றிக் கூறுவதாவது

முஸ்லிம்கள் ஒரு வகுப்பார் என்னும் முறையில் அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையே கேட்கின்றனர். எனவே, முஸ்லிம்களின் சம்மதமின்றி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்தல் கூடாது. அப்படி ஒழிப்பதானது நியாய விரோதமானதும் தவிர, அவர்கட்குத் தீங்கையும் விளைவிக்கும். இதுபற்றித்தான் நேரு அறிக்கைக்கு முஸ்லிம்களின் மாறுபட்ட அபிப்பிராயம் ஏற்பட்டது.

மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையின் கர்த்தாக்கட்கு லட்சுமணபுரி ஒப்பந்தம் அநுகூலமாக இருந்தது. ஆனல் இப்பொழுது அவ்வொப்பந்தத்திற்கு ஒருவித வலிமையுமில்லை. எனவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ சம்பந்தமாக அது சம்பந்தப்பட்ட வகுப்பினர்க்குள்ளாகவே முடிவு காணப்படவேண்டும். ஆதலால், இப்போது லட்சுமணபுரி ஒப்பந்தம் போன்ற யாதொரு ஒப்பந்தமும் அனுஷ்டானத்தில் இல்லாதபடியால், அவ்வாறு ஒப்பந்தம் நேரிடும் வரையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே தீரவேண்டும். கூட்டுத்தொகுதி முறையில் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதால் மட்டும் முஸ்லிம்கள் நலன் பெறுவார்கள் என்று கூற முடியாது.

மற்ற சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த வாக்காளர் தங்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்துள்ள இடத்தில் அவர்களுக்குள்ளேயே சிலரை நியமித்து பின்னர் கூட்டுத் தொகுதி வாக்காளர்மூலம் மேற்படி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யவேண்டும்.

எல்லைப்புற மாகாணம்

எல்லைப்புற மாகாண சம்பந்தமாக தற்போது எல்லைபுற பிரதம கமிஷனருக்குள்ள அதிகாரத்தை ஊர்ஜிதப்படுத்தி, ப்ரே அறிக்கையை இந்த அறிக்கை ஆதரிக்கிறது. எல்லைப்புற வாசிகளின் உரிமைகளைக் குறித்து அவ்வறிக்கையில் கூறியிருப்பதாவது:—"தற்போதைய நிலமைகளின் உண்மையை மாற்ற முடியாது. ஒருவனுக்குச் சுருட்டுப் பிடிக்க உரிமையுண்டெனில், வெடிமருந்துச் சாலையிலிருந்து சுருட்டுப் பிடிக்கும்படி அனுமதிப்பது கூடவே கூடாது." சட்டசபைக்கு பிரதம கமிஷனர் தலைவராயிருப்பார். அதில் 40 அங்கத்தினர்கள் அங்கம் வகிப்பார்கள். இதில் பாதி பேர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள். மற்றப் பாதிபேர்கள் நியமிக்கப்படவேண்டும். நகர சபையாரும் ஜில்லா போர்டாரும் மாஜி ராணுவ வீரர்களும் தான் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குரியார்கள். இந்துக்கள் சீக்கியர்கள் முதலியோர் சிறுபான்மையோர் என்னும் முறையில் நியமனம் பெறுவர். சட்டம், சமாதானம், நிலவரி ஆகியவை சட்ட சபையின் வரம்பிற்குட்பட்டவையன்று. இம் மாகாணத்தின் சார்பாக 3 முஸ்லிம்களும் 1 இந்துவும் ஐக்கிய சட்டசபையில் அங்கம் வகிப்பார்கள். நிர்வாகத்திற்குட்பட்ட எல்லைக்கும் நிர்வாகத்திற்குப் புறம்பான எல்லைக்கும் உள்ள பொருள் சம்பந்தமானக் கணக்கெடுத்து மாகாணப் பொருள்நிலை குறைவா யிருக்குமானல், அதற்கு இந்திய சர்க்கார் கஜானவிலிருந்து ஈடு செய்யவேண்டும். இதனலே மாகாண சட்டசபைக்கு வரி விதிக்கவும், சர்க்கார் செலவுகளை அனுமதிக்கவும், சர்க்கார் கொள்கைகளை உருப்படுத்துவதில் தம் செல்வாக்கைஉபயோகிக்கவும் உரிமையுண்டு.

ஓட்டுரிமையை அதிகரித்தல்.

பிரதிநிதித்துவ ஆட்சி முறைத் திட்டத்திற்கு இப்பொழுதுள்ள ஓட்டுரிமை முறை போதாததாக இருக்கிறது. அது சம்பந்த

மாக இந்தியாவில் பலவித அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. அதை அபிவிருத்தி செய்ய விரும்புகிறவர்கள் பெரும்பாலும் சிறு பான்மையோர் பிரச்சினையைக் கவனிக்கிறார்களே யன்றி உண்மையில் அபிவிருத்தி வேண்டுமா என்பதைக் குறித்து அவர்களுக்கு உறுதியான அபிப்பிராயமில்லை. அதே போன்று அதில் அபிவிருத்தி வேண்டாமென்கிறவர்கள் அதிக உரிமைகளை அனுபவிக்கும் வகுப்பின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். முடிவில் நேரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மேஜர் ஓட்டுரிமையே முடிவானதாகும். ஆனால் அதை இப்பொழுது அனுஷ்டிக்க முடியாது.

ஆகவே இப்பொழுது ஒரு புதிய ஓட்டுரிமை கமிட்டி ஒன்று, அதிக அனுபவமும் நடுநிலைமையுமுள்ள ஒரு சேர்மேன் தலைமையில் நியமிக்கவேண்டும். அக்கமிட்டி மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 10 மடங்கு ஜனத்தொகை ஓட்டுரிமை பெறும் வழியைக் குறித்து ஒரு திட்டத்தை ஏற்படுத்தவேண்டும். இதனால் இப்பொழுதுள்ளவர்களை விட இன்னும் மும்மடங்கு பேர்கள் ஓட்டுரிமையுடையவர்களாகி விடுவார்கள். மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 20 பேருள்ள தேர்தல்தொகுதி ஏற்பட்டுவிடும். அவ்வித திட்டத்தை வகுக்கும்போது கமிட்டியார் நகரங்கள், கிராமாந்தர தொகுதிகளின் நிலைமையைக் கவனித்து வெவ்வேறு வகுப்பினருக்கு சரியான பிரதிநிதித்துவம் ஏற்படக் கூடிய வழியில் அச்சட்டதை அமைக்க முயற்சிக்க வேண்டும். எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு விசேஷ உரிமை அளிக்கவேண்டும். இது சம்பந்தமாக வங்காளத்தை எடுத்துக்கொண்டால் அங்கு சட்டசபையின் கிராமாந்தர ஓட்டர்களில் முஸ்லிம்கள் 100-க்கு 48 பேர்களிருக்கின்றனர். ஆனால் யூனியன் போர்டு ஓட்டர்கள் சம்பந்தமாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் உரிமையைக் குறைத்திருப்பதால் அங்கு முஸ்லிம் வாக்காளர்கள் 100-க்கு 57. 3-ஆக இருக்கின்றனர். அதுவும் அவர்கள் ஜனத்தொகை வீதாசாரப்படி. பெண்கள் ஓட்டுரிமை சம்பந்தமாக அவர்களுக்கு இப்பொழுதுள்ள உரிமையுடன் இன்னும் இரண்டு உரிமைகளை சேர்த்துக்கொள்ளலாம். (1) ஓட்டுக்கு சொத்துரிமையுள்ள புருஷனின் 25 வயதுக்கு மேற்பட்ட மனைவிக்கு ஓட்டுரிமை அளிக்க வேண்டும்.

(2) அவ்வித சொத்துரிமையுடன் கூடிய கணவன் இறந்துபோய் அவன் மனைவி 25 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அவ்விதவைச்கும் ஓட்டுரிமை அளிக்கவேண்டும்.

மாகாணசட்டசபைகளுக்கு சுய ஆட்சி அதிகாரத்தை பார்லிமெண்டார் புதிய சீர்திருத்தச் சட்டப்படி வழங்கினார்களேயானால், அதே காலத்தில் அந்த சட்டசபைகள் நாளடைவில் அதிகமான ஓட்டர்கள் ஆதரவில் திகழும்படியான நிலைமைக்குக்கொண்டுவரும் வழிகளை ஏற்படுத்தவேண்டும். அப்பொழுது தான் ஒரு சில கூட்டத்தார் ஆதிக்கத்தில் மாற்றப்பட்ட இலாகாவின் அதிகாரம் தங்காது இருக்க வழி ஏற்படும். ஆகையால் இன்னும் 15 வருஷங்களுக்குப் பின் இரண்டாவதாக ஓர் ஓட்டுரிமைக்கமிட்டி நியமித்து 100-க்கு 20-வீதமுள்ள ஜனத்தொகையின் ஓட்டுரிமையின் அபிவிருத்தியைக் குறித்து ஆராயவேண்டும். அதற்குள்ளாக 100-க்கு 20-வீதம் ஓட்டுரிமை ஏற்படாவிடில் அதை அதிகரிக்க அக்கமிட்டி நிச்சயிக்க வேண்டும்.

ஐக்கிய சபை

மற்றும் இந்தியா சட்டசபையை ஐக்கிய சட்ட சபையென்று அழைக்கப்பட வேண்டும் என்றும், அதன் அங்கத்தினர்கள் (250 முதல் 270 பேர்கள்வரையில்) மாகாண சட்ட சபைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், இந்தச் சபையில் அரசப் பிரதிநிதியின் நிர்வாக அங்கத்தினர்கட்கும் ஸ்தானங்கள் கொடுக்க வேண்டும் என்றும், மேற்கொண்டும் 12 உத்தியோகஸ்தர்களை அரசப்பிரதிநிதி நியமிக்கவேண்டும் என்றும், இதில் நியமனமாகும் அங்கத்தினர்களை தாழ்த்தப்பட்டவர்கட்குள் 100 க்கு 2 வீதமும், முஸ்லிம்கட்குள் 100க்கு 28 வீதமும் கிறிஸ்தவர்கட்குள் 100 க்கு 1,2 வீதமும், ஆங்கிலோ இந்தியர்கட்குள் 100 க்கு 1 க்குக் குறைந்த வீதமும், ஐரோப்பியர்க்குள் 100-க்கு 10 வீதமும் நியமிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மந்திரி சபை

அந்தந்த மாகாண மந்திரிகளை அந்தந்தக் கவர்னர் தெரிந்தெடுப்பார். மாகாண சட்ட சபையோரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்

கத்தினர்கள் மந்திரிகளாக இருக்கவேண்டு மென்பது அவசியமில்லை. மந்திரிகள் சம் பளத்தைச் சட்டசபைகள் குறைத்துவிட அதிகாரமில்லை. வேண்டுமாயின் சர்க்காராகப் பார்த்துக் கூட்டியும்குறைக்கவும்செய்யலாம்.

கவர்னருக்கு சர்வாதிகாரம்

மாகாணக் கவர்னர்கள் இவ்வறிக்கையின் மூலமாய் சர்வாதிகாரங்களும் பெறுகின் றனர்:—

சர்க்கார் மந்திரி சபைக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. அது இப்போழ் துள்ள நிலைமையில் பாதகமானதேயாகும். கவர்னர்கள் எல்லா விஷயங்களிலும் மந்திரி சபையோடும் கூட, சொந்த பொறுப்பின் பேரிலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள் ளுத லவசியமாக இருக்கின்றது.

மந்திரி சபையில் கவர்னர்களே தலைமை வகிப்பார்கள். மந்திரி சபைக்கு ஒரு சிவில் உத்தியோகஸ்தரே காரியதரிசியாகஇருத்தல் வேண்டும். சர்க்கார் கொள்கைகளைப்பற்றிய பெரிய விஷயங்கள் ஓட்டுகளினால் பாதிக்கப் படக் கூடாது.

இறுதியாகப் பர்மாவைத் தனி மாகாண மாகப் பிரித்துவிட வேண்டும் என்றும், போலீஸ் இராணுவம் இவைகளில் இந்திய மயமாக்குதல்இப்போது பொருந்தாச்செயல் என்றும் குறிக்கப்படுகின்றது.

மாகாண சட்ட சபைகள்

மாகாண சட்ட சபைகள் 5 ஆண்டு நிகழ்ச் சிகளாக நீடிக்கப்படும். பெரிய மாகாணங் களின் அங்கத்தினர் தொகை 200 லிருந்து 250 க்கு அதிகப்படுத்தப்படும். சட்ட சபை மசோதாக்களைக் கவர்னர்முன்னதாக அங்கீ காரம் செய்யவேண்டும். நிறைவேற்றப்படும் தீர்மானங்களை அரசப்பிரதிநிதியும் அங்கீ கரிக்க வேண்டும். பிரதி 10 ஆண்டுகள் தோறும் அந்தந்த மாகாணங்கள் அங்கத் தினர் தொகை, தொகுதிகள் பிரிவினை, தேர் தல்முறையில் மாறுதல் குறிப்புட்ட வகுப் பின் பிரதிநிதித்துவ முறையில் மாறுதல் இவைகளைச் செய்து கொள்வதற்கு உரிமை யளிக்கப்படும்.

அரசப்பிரதிநிதி சபையும் என்றும்போல் இருந்துவரும்.

முஸ்லிம் உலகச் செய்திகள்

பாலஸ்தீனம்:—பாலஸ்தீனத்தை யூதர் களின் குடியேற்ற நாடாகச் செய்துவருதல் பற்றி பிரிட்டிஷ் உதவி குடியேற்ற நாட்டு மந்திரி டிரம்மண்ட் ஷீல்சு கூறியது:—

குடியேற்ற முறையைத் தற்காலிகமாகத் தடைபுரிந்து வைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் அறுதியாகவே குடி யேற்றம் கைவிடப்பெறாது என்பது திண் ணம். ஜர்மன் போரின் பயனாய் அதிகார நிமித்தம் ஒப்புவிக்கப் பெற்ற நாடுகளை ஆளும் முறையில் பிரிட்டிஷார் தம் பொறுப் பை நன்குணர்ந்திருக்கின்றனர். எனவே, இக் கொள்கைகளினின்றும் இங்கிலாந்து பிற ழாது. வியாபாரத்திற்கு தங்கள் போக்கில் இடையூறு நேராமல் நடந்து கொள்ளுவ தைப் பற்றியே பிரிட்டிஷார் கண்ணோக்க முடன் இருத்தல் வேண்டும். ஆயினும் அதி கார ஒப்பந்தப்படி, பிரிட்டிஷார் பாலஸ்தீனை யூதர்களின் தாய் நாடாகச் செய்தல் ஓர் கடமையாகும், பிற மதத்தினரின் உரிமை களைப் பாதுகாப்பதும் எமது இரண்டாவது கடமையாகும். இவ்விரண்டு கடமைகளையும் ஈடேற்றுவதில் சமரசம் முறியும் என்று கூறப்படுகிறது. என்றாலும் சமரசப் படுத்து தல் கூடும் என்பதே எமது துணிபு. அதா வது யூதரல்லாதவர்கட்கு இடையூறின்றிப் பாலஸ்தீனை யூதர்களின் தாய் நாடாகச் செய்ய முடியுமென்று கருதுகின்றேன். யூதர் களால் பாலஸ்தீன் விசேட நலன்களையும் முன்னேற்றங்களையும் பெற்றுள்ளது என் பதை 'ஷா' கமிஷன் எடுத்துரைத்துளது. எல்லா விதமான நவீன ஏற்பாடுகளிலும் சங்

கடம் ஏற்படுவது இயல்பு எனினும், யூதர்களும் அறபியர்களும் சமரசமாய் இறுதியில் வாழ்வார்கள் என்று நம்புகின்றோம்

ஜெருசலத்தில் பத்திரிகைத் தடை

ஜெருசலம் நகரத்தில் நடைபெறும் 'டோவர் ஹோம்' என்னும் யூதப் பத்திரிகையினையும், 'அல் ஜாமியா' 'அல் அராபியா' என்னும் முஸ்லிம் பத்திரிகைகளையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பிரசுரத்தடை புரிந்துவிட்டனர். காரணம் கூற மறுக்கப்படுகின்றது.

துருக்கியில் கல்வி வளர்ச்சி முறை

துருக்கிஸ்தானத்தில் கல்வியை அகன்று பரப்பி வருமாறு காஜி முஸ்தபா கமால் பாஷா அவர்கள் மிகுந்த ஊக்கம் காண்பித்து வருகின்றார். இதன் பயனாக, இதுகாலை துருக்கியில் ஒய்வு நேரங்களில் 5 லட்சம் பேர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இன்னும் 10 ஆண்டுக் காலத்தில் இப்போழ்துள்ள தீவிரப்போக்கின்படி, துருக்கியில் எழுதப் படிக்கத் தெரியாதார் ஒருவருமே இருக்கமுடியாது என்று நிச்சயிக்க இடமுள்ளது. இளமையில் கல்வியைப் பயிலாதிருந்தவர்கள் அனைவரும் ஒய்வு நேரங்களில் சிரத்தையுடன் இராப் பள்ளிக்கூடங்கள் சென்று பயின்று வருகின்றனர். வயதில் முதிர்ந்தவர்கட்குக்கூட கல்வி பயிற்றுமாறு திட்டம் புரியப் பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.

அப்கன் ஆட்சி முறை

காபல் நகர சபையில் சனநாயக ஆட்சி முறைப்படி தேர்தல் நிகழ்ந்ததாகவும், இதனைக் கொண்டு அப்கனிஸ்தானம் முற்றிலுமே சனநாயக ஆட்சி முறையை அமைக்க அமீர் நாதிர்கானவர்கள் ஆலோசித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

காபூலில் நிகழ்ந்த இத்தேர்தலில், ஷீஆ வகுப்பினர்க்கும், ஹிந்து வகுப்பினர்க்கும் அவரவர்களின் சனத்தொகை வீதப்படி பிரதிநிதித்துவம் அளிக்கப்பெற்றமை குறிப்பிடத் தக்கதாய் உள்ளது.

வேலூரில் முஹர்ரம் கலகம்

முஹர்ரம் 10ம் நாளன்று கூண்டு எடுத்துச் சென்ற போழ்து, வேலூர் தர்மராஜா கோவிலுக்கருகாமையில் நின்றுக்கொண்டிருந்த இந்துக்கள் கூண்டின் மீது கல்லெறிந்து, முஸ்லிம்களைத் தாக்க முயன்றதாகவும், இதன் பேரில் முஸ்லிம்களும் தற்காப்பு நிமித்தம் இந்துக்களோடு சண்டையிட நேர்ந்தது என்றும் தெரிகிறது. அன்றுமுதல் தொடர்ச்சியாக இந்துக்கள் முஸ்லிம்களின் வீடுகளில் புகுந்து தாக்கியும், வழிமறித்து அடித்தும் வந்ததாயும் செய்தி எட்டியது. 3-ம் நாளன்று கலக்டரவர்களால் 144-வது பிரிவுப்படி தடை உத்திரவு போடப்பெற்றது. நிலைமை இப்போழ்து அமைதியாக உள்ளதாம்.

டக்கா கலகம்

டக்காவில் நிகழ்ந்த இந்து—முஸ்லிம் கலகத்தைப்பற்றி விசாரணை புரியுமாறு அரசாங்கத்தாரால் ஓர் கமிஷன் நியமனம் புரியப் பெற்றுள்ளது.

எகிப்து

எத்தகைய அரசியல் கட்சியினையும் சார்பு கொள்ளாது நடுவுநிலைமை கொண்ட அங்கத்தினர்களடங்கிய மந்திரிச் சபை ஒன்று எகிப்தில் அமைக்கப் பெற்றுள்ளது. இதில் இஸ்மாயில் சித்திக் பாஷா தலைமை மந்திரியாக நியமிக்கப் பெற்றுள்ளார். ஹாபிஸ் அஜிஸி பாஷா வெளிநாட்டிலாகா மந்திரியாக நியமிக்கப்பெற்றார்.

அனுதாபம்.

கம்பம் இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தின் பிரசிடெண்டும் உத்தம பாளையம் கவுதிய்யா மத்ரஸாவின் நாஜிருமாகிய ஜனாப் செ. கருத்த ருவுத்தர் என்ற முகம்மது மீரா ருவுத்தர் அவர்களின் தமையனாரான ஜனாப் செ. நத்தர் உசேன் மீரா ருவுத்தர் அவர்கள் தாருல் பனாவைவிட்டு தாருல் பக்கா அளவில் சேர்ந்தார்கள். என்னும் துக்ககரமான செய்தியைக் கேட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம். மர்ஹூம் அவர்கள் மதரசாவுக்காக அநேகச் சொத்துக்கள் வக்பு செய்திருக்கின்றார்கள். அவைகள் அப்பகுதிகளில் இஸ்லாம் மதத்தை தழுவும் நவ் முஸ்லிம்களுக்கு மிக பிரயோசனத்தை அழிக்குமென்றும் அதனால் மர்ஹூம் அவர்கள் நற்பயனடைவார்களென்றும் எதிர் பார்க்கிறோம்.

அல்லாஹ் தஆலா மவுத்தாவுக்கு மக்பிரத்தைக் கொடுத்து அவர்களின் பந்து மித்திரர்களுக்கு அழகான (சப்ரை) பொருமையைக் கொடுப்பானாகவும். ப-ர்)

நிருபசாரம்

மதுரை முஸ்லிம்களும் பஞ்சாவிழாவும்:— இவ்வூரில் பலவருஷங்களாய் பஞ்சாவைபவம் நடைபெறுவது யாவருமறிந்ததே. இவ்வநாச்சார ஷிர்க்கான காரியத்தை ஒழித்துவிடுவதற்காக பலசமயங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது. அதனால் இஃது ஒரு கெட்ட காரியமென்று யாவருமறிந்து கொண்டாலும் அதனை அடியோடு ஒழித்துவிட ஒருவரும் முன்வராத்தது வருந்தத்தக்கதே.

அதற்கேற்ப இவ்வருடமும் மதுரை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" கமிட்டியின் தூண்டுதலால் முஸ்லிம் தொண்டர் படை ஒன்று அமைக்கப்பெற்று அவர்களால் அர்த்த புஷ்டியுள்ள பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பலபாகங்களிலிருந்தும் முஸ்லிம் யுவர்கள் அப்படையில் அங்கத்தினர்களாக அமைந்துள்ளனர். அவர்கள் முஹர்ரம் 10-ம் தினத்தன்று ஊர்வலமாக நகரத்தின் முக்கிய பாகங்களுக்குச் சென்று பஞ்சா வைபவத்தின் கெடுதிகளைப் பற்றியும் அதை நிறுத்திவிடவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சொற் பெருக்காற்றினார்கள். அதன்பயனாய் பஞ்சாவைபவத்தில் ஈடுபடுவது பாபமான காரியமாகுமென்ற உணர்ச்சி பொது ஜனங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாலண்டியர்களின் நன்முயற்சியால் இக்கொடிய காரியங்கள் இனி ஒழிக்கப்பட்டுப் போய்விடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. அல்லாஹுதஆலா அவர்கள் இம்முயற்சிக்கு நற்பயனை அளிப்பானாகவும்.

சிலோன் மாத்தளை:— இவ்வூரின்கண் கடந்த பல ஆண்டுகளாக அநாச்சாரமானதும் ஷிர்க்கை உண்டாக்கக் கூடியதுமான பஞ்சா விழா நடைபெற்றுக்கொண்டு வந்தது. அதை ஒழித்துவிட வேண்டுமென்று மார்க்க பக்தியுள்ள நமது சகோதரர்களில் பலர் முயற்சி செய்து வந்தனர். இவ்வருஷம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" கிளைசபையின் முக்கியஸ்தர்களும் ஸவாதுல் அஃலம் முஸ்லிம் லீக்கின் காரியதரிசிகள் K. M. சயீத் A. C. ஜயினுத்தின் முதலியவர்களின் நற்முயற்சியால் அவ்வநாச்சாரமானவும் பித்அத்தானவுமான அக்கொடிய ஷிர்க்கை அகற்றிவிடவேண்டுமென்று முயற்சிசெய்யப்பட்டது. அவ்விழாவைநடத்தவேண்டுமென்போர் லைசென்சுக்காககெவர்ன்மெண்டாரிடம் மனுச்செய்துகொண்டார்கள். அதற்கு லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றும் அதை நிறுத்திவிடவேண்டுமென்றும் பெரும் பான்மையோர் எதிர்மனுக் கொடுத்தனர். அதிகாரிகள் ஜும்ஆப்பள்ளியில் முகாம்செய்து அப்பள்ளி கத்தீப் முதலிய முக்கியஸ்தர்களையும் மற்றும் பொது ஜனங்களையும் விசாரித்து அதுமார்க்கத்திற்கு கூடாத விஷயமென்று பெரும் பான்மையோர் சொல்லிக் கொண்டதனால், லைசென்சு கொடுப்பதை நிறுத்தி அவ்வைபவத்தை நடத்தக் கூடாதென்று உத்திரவு பிறப்பித்தனர். நீண்டநாளாக நடைபெற்றுவந்த அநாச்சாரமான, பித்அத்தான காரியம் ஆண்டவன் கிருபையால் இவ்வூரை விட்டு ஒழிக்கப்பட்டுப் போயிற்று.

ஹாஜிகளின் வருகை:— இவ்வருஷம் முபாரக்கான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மக்கா முஅல்லமா சென்றிருந்த வேலூர் மத்ரஸயேபாக்கியாத் ஸாலிஹாத் அரபிக் கலாசாலையின் வைஸ்பிரன்சிபாலாகிய மௌலானா மௌலவி ஹாஜி முஹம்மது அப்துல் ஜப்பார் ஹஜ்ரத் கில்லா அவர்களும் அவர்களது சகாக்களும் 26-6-30 திங்கட்கிழமை காலை பம்பாய் மெயிலில் சென்னை வந்து சேர்ந்தார்கள். அவர்களை வரவேற்க வேலூர் அரபிக் கலாசாலையின் ஆசிரியர்களும் மற்றும் முக்கியஸ்தர்களும் ஹிபாஜத்துல் இஸ்லாம் ஸைபுல் இஸ்லாம் காரியலாயம் முதலிய இடங்களிலிருந்து பெருந்திரளாகச் சென்று அன்னாருக்குப் பூமாலை சூட்டி மிக்க வைபவத்துடன் வரவேற்று, தம்புசெட்டி தெருவிலுள்ள மௌலவி. S. A. முஹம்மது அலீசாஹிப் அவர்களின் ஜாகைக்கு அழைத்து வந்தார்கள். மௌலானா அவர்களுடன் புதுவை வாசிகளாகிய ஜனாப் ஹாஜி G. T. முஹம்மது சயீத்சாஹிப், ஜனாப் ஹாஜி முஹம்மது ஹனீப்சாஹிப், கூத்தானல்லூர் ஜனாப் ஹாஜீ வா. சி. முஹம்மது ஹுசேன்

ருவுத்தர் முதலியோரும், மதுக்கூர் ஜனுப் ஹாஜி. நெ. பக்கீர்மைதீன்ருவுத்தர் முதலியோரும் வந்துசேர்ந்தார்கள்.

தாருல் இஸ்லாம் பஹிஷ்காரம்:—நான் சென்ற ஒருவருஷமாக இஸ்லாம் மதத்திற்கு முரணுகப் பிரசாரம் புரிந்துவரும் "தாருல் இஸ்லாம்" பத்திரிகையை தருவித்துப்பார்த்து வருவதால் நான்பட்ட அவமானத்தைஎழுதப் பெரிதும் வெட்கமடைகின்றேன். அதில்வரும் மார்க்க முரண்பட்ட விஷயங்களை அறிந்து கொள்ள எனக்கு முடியவில்லை. இப்பொழுது அப்பத்திரிகை பார்த்துவருவதால் எனது சொந்த பந்துக்களுடையவும் உலமாக்களினுடையவும் கோபத்துக்கு நான் ஆளாவதை நினைக்க நினைக்க என்மனம் நாணமடைகின்றது. என்னே! என் புத்தியின் பிற்போக்கு! ஆகையால் இதுமுதற்கொண்டு தா. இ. வை கையில் எடுப்பதில்லையென உறுதி செய்துவிட்டு எனது பந்துக்களின்மூலம் உலமாக்களிடமும் நான்செய்த தவறுக்கு மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன். ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரும், மற்றும் உலமாக்களும் தா. இ வுக்கு நல்லபிப்பிராயங் கொடுக்கும்வரை அப்பத்திரிகையைத் தருவிப்பதில்லை என்று முடிவுசெய்துகொண்டு இனிமுதற்கொண்டு என்பேருக்கு தா. இவை கண்டிப்பாய் அனுப்பவேண்டாம் நிறுத்தி விடவேண்டுமென்று தா. இ. ஆசியருக்கு நிருபம்வரைந்துள்ளேன். இக்கடிதத்தை தங்கள் மாசிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கனம்

த. சே. பா. முகம்மதுஜமாலுத்தீன்:
(ஜமீன்) ஆத்தூர்.

விஞ்ஞான விகசிதங்கள்

காலக் கணித கருவி

செர்ரி ப்ளாஸம் ஷூட் பாலிஷ் கம்பெனியார் செஸ்விக் என்னும் இடத்தில் மணிக்கூண்டு கட்டியுள்ளனர். இதன் உயரம் 60 அடி. இதன் மூன்று புறங்களிலும் கடிகாரங்கள் உள்ளன. இவற்றுடன் சீதோஷ்ண மளக்கும் கருவி ஒன்றும், காற்றின் கனம் அளக்கும் கருவி ஒன்றும் இவ்வுயரத்திற்கு 60 அடி நிறுவப்பெற்றுள்ளன. சீதோஷ்ண மளக்கும் கருவியின் (Thermometer) அகலம் 7 அடியாயின், டாக்டர்கள் நோயாளிகளின் சீதோஷ்ண மளக்கும் இதே கருவிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின், இம் மணிக்கூண்டின் கண்ணுள்ள கருவியின் பெருமை வியக்கத் தக்கதாயிருக்கும். காற்றின் கனமளக்கும் கருவி (Barometer) யின் அகலமும் 9 அடியாம்! இக்கருவிகளில்காணப்படும் காற்று, சீதோஷ்ண நிலைக்குறிப்புகளை, வெகு தூரத்திலிருந்தே அறிந்துகொள்ளக் கூடுமாம்.

உலகம் டேலிபோன் ஸ்தாபனம்

இப்பொழுது இந்தியாவின் தலை நகரங்களில் டெலிபோன் கருவிகளால் அவ்வவ் ஊர்கட் குள்ளாகவே பேச்சு நடைபெறுகின்றது. ஆனல் மேனுட்டில் உலகமெங்கணும் பேசும் படியான டெலிபோன் கருவிகளை அமைத்துள்ளனர். இவற்றின் வாயிலாய் இங்கிலாந்து அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் தென்னமெரிக்கா முதலிய பகுதிகட்கு சிறிதும் தடையின்றி பேசக்கூடும். இவற்றின் மத்திய ஸ்தாபனம் லண்டனில் உள்ளது. லண்டனிலிருந்து இதற்குக் கூலி சவரன்கள்:—ஆஸ்திரேலியா 6; கனடா 9; அமெரிக்கா 6; தென்னமெரிக்கா 6, 9; மெக்ஸிகோ 12, என்று விதிக்கப் பெற்றுள்ளது.

தூக்கமற்ற மனிதன்

பெர்சிவல் பாய்ட் என்பார் உரக்க மின்றித் தவித்து, இதற்குத் தக்க மருந்தொன்றும் அகப்படாமல் இறுதியில் மூளைக்கும் கண்கட்கும் ஓயாத வேலையைக் கொடுத்தால்

தூங்கிவிடக்கூடும் என்று தனக்குள் உதிக்க, இங்கிலாந்தில் 1538-ம் ஆண்டு முதல் 1837-ம் ஆண்டு வரையில் நிகழ்ந்த விவாகங்களை, தேதி, காலம், சம்பந்த, நிகழ்ச்சிகளைக் குறித்து அட்டவணை போட்டு வருகின்றார். இதுகாறும் இவர், 400,000 விவாகங்கட்கு அட்டவணை போட்டுவிட்டார். இவ்வட்டவணை 13 புத்தகங்களாக அச்சிடப் பெற்றுள்ளன. மேற்குறித்த காலத்தில் நிகழ்ந்த எந்த விவாகமாயினும் அதன் சரித்திரத்தை இந்தப் புத்தகங்களின் மூலமாய் 5 நிமிடங்களில் எளிதாய்த் தெரிந்துகொள்ளக் கூடுமாம். தன் வேலை முடிய இன்னும் 100 ஆண்டுகள் செல்லும் என்று பாய்ட் தெரிவிக்கின்றார். இப்பொழுது இவர் நன்றாகத் தூங்குகின்றாராம்!

முட்டையிடும் கிழக் கோழி

யார்க்ஷைர் என்னும் ஜில்லாவிலே உள்ள ஸ்கிப்டன் என்னும் ஊரில் 17 வயது சென்ற ஒரு கிழக்கோழி இன்னும் முட்டைகளிட்டு வருகின்றது. இக்கோழி ஒரு சந்தைக் கடையில் வாத்து முட்டைகட்கு அடைகாப்பதற்கு 11 ஆண்டுகட்கு முன் வாங்கப்பெற்றது. அன்று முதல் இன்று வரை இது ஒயாமல் முட்டையிட்டு வருகின்றது.

உடையாக் கண்ணாடிகள்

ஜன்னல்கள், மோட்டார் இரதங்கள் இவைகட்கு உபயோகிக்கப்படும் கண்ணாடிகள் சிற்சில சமயங்களில் உடைந்து போகின்றன. கண்ணாடித் துண்டுகளால் அருகாமையில் உள்ளார்க்கு ஆபத்தும் நேர்ந்து விடுகின்றது. எனவே, இப்பொழுது மோட்டார் இரதங்கட்கு உடையாக் கண்ணாடிகளை அமைக்கக் கருதி, அதற்குரிய கண்ணாடிகளையும் செய்து வருகின்றனர். இந்தக் கண்ணாடிகளை ஒரு கல்லெடுத்துத் தாக்கினாலும் அவை விரிந்து போகுமேயன்றி, உடைந்துத் தெரிக்காவாம். இவற்றை மேனாட்டினர் விசேட இயந்திரங்களைக் கொண்டு செய்கின்றனர். இரண்டு கண்ணாடிகட்கிடையில் 'செல்லுலாய்ட்' என்னும் பால்சத்தைக் கொடுத்து இவை மூன்றும் ஒரே கண்ணாடிபோல் பொருந்தும்படி ஒட்ட வைத்து இறுக்கி, ஈரம்புகாமல் சந்துவாய் மூடி உடையாக் கண்ணாடிகள் செய்கின்றனர். செய்தல் வெகு அருமையாம்; எனவே இதன் விலையும் உயர்ந்ததாக இருக்கின்றது இக்கண்ணாடிகளை இனி மோட்டரர் இரதங்கள், ரயில் வண்டிகள் வீட்டுச் சன்னல்கள் இவைகட்கு அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது.

ஆசிரியர் குறிப்புகள்

ஸைமன் கமிஷன்:—சைமன் கமிஷன் ரிபோர்ட்டின் சாரம்சத்தை இப்பத்திரிகையின் பிரிதோர் அங்கத்தில் பிரசுரித்துள்ளோம். அதில் சில விஷயங்கள் முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு ஏற்றதாகக் காணப்படினும் முஸ்லிம்கள் மறுத்துக் கண்டனஞ் செய்யக்கூடிய அம்ஸங்கள்பல காணக்கிடைக்கின்றன. இந்நிலைமையில் ஹிந்து மகா சபையார் இவ்வறிக்கை முஸ்லிம்களுக்கு முற்றிலும் சார்புடையதாகக் காணப்படுவதாகக் கூச்சலிட்டு அதைக் கண்டனஞ் செய்ய முன் வந்திருப்பது விந்தையே.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், வாக்காளர் தனித்தொகுதி அவசியமென்பதை கமிஷன் பாராட்டி யிருப்பதோடு, காங்கிரஸ் வாதிகள் இந்தியாவில் ஹிந்து முஸ்லிம் வகுப்புச் சண்டைகள் நிகழ்ந்து வருவதற்கு வாக்காளர் தனித்தொகுதியும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும் முக்கிய காரணங்களென்றும், இவைகளை ஒழிக்காதவரை வகுப்புச் சச்சரவு இந்தியாவில் ஒழியாதென்றும், வெகு காலமாக லண்டன் வரை கூச்சல் போட்டுப் பிரசாரம் செய்து வந்திருப்பதை கமிஷன் மறுத்திருக்கின்றது. மேல்கண்ட விஷயங்களே முஸ்லிம்களின் கோரிக்கைக்கு ஒருவாறு சாதகமானவை யென்று கூறலாம். ஆனால் எல்லைப்புற மாகாணத்திற்கு சீர்திருத்தம் வழங்க வேண்டுமென்று கமிஷன் சிபா

ரிஷ் செய்திருப்பதில் விதித்திருக்கும் நிபந்தனைகள் முற்றிலும் பாதகமானதால் அவ்வித சீர்திருத்தம் பயனற்றதென்பதும் மலையிலக்காம்.

முஸ்லிம்கள் எல்லைப்புற மாகாணத்திற்கு மற்ற மாகாணங்களுக்கு வழங்கப்படும் சீர்திருத்தங்களில் எத்தகைய குறைவும் நிபந்தனையுமில்லாதவைகளையே எதிர்பார்க்கின்றனர். எனவே, கமிஷன் சிபாரிஷ் செய்திருக்கிற நிபந்தனைகளுக் குட்பட்ட சீர்திருத்தத்தை ஒப்புக்கொள்ள நாம் தயாராக இருக்கவில்லை. சிந்து மாகாணப் பிரிவினை விஷயத்திலும் கமிஷன் கூறியிருக்கும் கூற்றுக்களை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலும் பர்மா பிரிவினையை கமிஷன் அழுத்தமாக சிபாரிஷ் செய்திருக்கிறது. இஃது பொதுவாக இந்தியர்களுக்கும், சிறப்பாக முஸ்லிம்களுக்கும் மிகமிக பாதகமானதென்பதை நேயர்கள் அறியாமலில்லை. எனவே கமிஷன் சிபாரிஷானது வெளித்தோற்றத்திலும் வியாசப் போக்கிலும் முஸ்லிம்களுக்கு சாதகமானதைப் போல் காணப்படினும், அது முற்றும் முஸ்லிம்களுக்கு சாதகமானதென்றும் அங்கீகரிக்கத் தக்கதென்றும் நாம் கூற முடியாது.

இவ்விஷயமாக ஆலோசிப்பதற்காக ஒவ்வொரு மாகாணங்களிலும் முஸ்லிம் தலைவர்களின் மகா நாடுகள் கூட்டி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக முயற்சிகள் நடைபெற்று வருவதை நேயர்கள் அறிவர். அம்மகா நாடுகளின் முடிவை நேயர்கள் எதிர் பார்ப்பார்களாக.

சிக்ரேட் பெட்டியிலும் நாயக மவர்களின் படமாம்:—லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் டொபாக்கோ கம்பெனியார் தமது சிகரெட் பெட்டியில் நமது நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பெயரால் ஒரு உருவப்படமொன்றை வரைந்து வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வாபாசப் படத்தைப் பார்க்கும் எந்த முஸ்லிமுக்கும் மனம் கொதிக்காமலிராது என்பது திண்ணம்.

இது இஸ்லாம் மதத்தையும் அம்மதத்தின் ஸ்தாபகரான நபிகள் நாயகம் அவர்களையும் இழிவுபடுத்தக் கூடியதாக யிருப்பதோடு, இஸ்லாம் மார்க்கத்தில் எவ்வித ஆதாரமுமில்லாததாகவும் இருப்பதால், இதை கண்டனஞ் செய்து ஒழிப்பது ஒவ்வொரு முஸ்லிம் சங்கங்கள் மீதும், நபர்களின் மீதும் பத்திராசிரியர்கள் மீதும் பொறுப்புளது என்பதை நேயர்கள் உணர்ந்து தங்கள் கடமையைச் செய்ய முனைந்து முன்வர வேண்டுமென்று அவர்களை நாம் வேண்டுகின்றோம். இவ்விஷயமாக நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தினர் 27-6-30 ல் ஜும்ம ஆவுக்குப் பின் முத்தியால் பேட்டை ஜாமிஆ மஸ்ஜிதில் ஒரு மகாநாடு கூட்டி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி அதற்குரிய நடவடிக்கைகளை சங்கம் எடுத்துக்கொள்ள முன் வந்திருக்கின்றது.

தீர்மானங்களாவன

"லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் டொபாக்கோ கம்பெனியார் நமது நாயகம் (சல்) அவர்கள் பெயரால் சித்தரித்திருக்கும் ஆபாஸப்படமானது இஸ்லாம் மார்க்கத்திற்கு விரோதமானதும் நபிகள் நாயகம் அவர்களின் மகிமைக்கும் கண்ணியத்திற்கும் பங்கத்தை விளைவிக்கக் கூடியதும், முஸ்லிம்களின் மனதை புண்படுத்தி ஆத்திரத்தையும் மனக்கொதிப்பையும் உண்டு பண்ணக்கூடியதாக யிருக்கிறபடியால், இதை வன்மையாகக் கண்டிப்பதுடன் ஷை கம்பெனியார் இதை உடனே நீக்கிவிட வேண்டுமென்றும், இதை நீக்கி விடும்படி கவர்ன்மெண்டார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இம்மகா சபை தீர்மானிக்கின்றது.

2. இதே படத்தை "தாருல் இஸ்லாம்" பத்திரிகையில் பிரசுரித்திருப்பதையும் இச்சபை வெகு அழுத்தமாகக் கண்டிக்கின்றது.

3. லண்டனில் நடைபெறும் சர்வ கக்ஷி மகா நாட்டிற்கு நம் சென்னை மாகாணத்திலிருந்து முஸ்லிம் பொது ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை அனுப்ப வேண்டுமென்று இம்மகா நாடு இந்திய அரசாங்கத்தார் அவர்களை கேட்டுக் கொள்ளுகின்றது.

மேற்கண்ட 1-வது தீர்மானத்தை ல... டன் வெஸ்டு மினிஸ்டர் டொபாக்கோ ... பெனிக்கும் அதன் சிங்கப்பூர், மதராஸ் ஏ... ண்டுகளுக்கும் அரசாங்கத்திற்கும் அ... துத் தக்க ஏற்பாடு செய்யும்படியாக

மூன்றாவது தீர்மானத்தை மேன்மை தங்கிய அரசப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் தந்தி மூலம் அறிவிக்கும்படியும் சங்கத்தின் காரியதரிசி அவர்களுக்கு இச்சபை அதிகாரங்கொடுக்கின்றது.

சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி உடனே டொபாக்கோ கம்பெனியார் ஷை படத்தை அடியோடு நீக்கி முஸ்லிம்களின் மனக்கொதிப்பை ஆறுதல் செய்து பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமென்பதை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஷை கம்பெனியில் பற்றுவரவு செய்யும் முஸ்லிம் வியாபாரிகளும் அக்கம்பெனிக்கு எச்சரிக்கை செய்து அதை உடனே நீக்கி விடும்படி செய்வார்களென நம்புகின்றோம்.

பஞ்சா வைபவங்கள்:—இத்தீய செயல் நம் தேசத்தில் பல பாகங்களிலும் நடைபெற்றுவருகின்றது. அதனை ஒழிக்க வேண்டுமென்னும் அவசியத்தைப்பற்றி நாம் பன்முறையும் எழுதி வந்திருக்கின்றோம். இதற்கிணங்கி ஒவ்வொரு இடங்களிலும் இக்கொடும் பாவத்தை அகற்றுவதற்கு முயற்சித்தும் வருகின்றனர். மதுரை முஸ்லிம்கள் இது சம்பந்தமாய் நடந்துகொண்ட விதத்தை பிறிதோரிடத்தில் பிரசுரித்துள்ளோம். அவ் இஸ்லாமிய தொண்டர் படையின் மூலமாய் இவ்வனாச்சாரம் அறவே ஒழிக்கப்பட்டு போம் என எதிர்பார்க்கின்றோம். இம்முறை பாராட்டத் தக்க முறை என்பது வெள்ளிடை மலை. இவ்வாறே ஆங்காங்குள்ள முஸ்லிம் யுவர்கள் இம்முறையைப் பின்பற்றி நடப்பார்களாயின் தேசத்திலுள்ள சகல "பித் அத்து"களும் கெட்ட காரியங்களும் ஒழிக்கப்பட்டுப்போய் விடுமென்பதில் ஐயமுளதோ? இந்நவீன முறையை உற்பத்தி செய்த மதுரை முஸ்லிம்களுக்கு அல்லாஹ் தஆலா நற்கிருபை செய்வதோடு அவர்கள் ஈடுபட்ட காரியத்தில் அவர்களின் முயற்சியை பயன்படச் செய்வானாகவும் ஈதன்றி மாத்தளை முஸ்லிம்களோ இக்கெட்ட காரியத்தைத் தடுக்க அரசாங்கத் …ர் வாயிலாக நடவடிக்கை எடுத்துக் …ண்டனர். அவர்களின் கோரிக்கையும் …வடைந்து விட்டதை நாமும் பாராட்டு …றோம்.

வேலூர் மாநகரில் இவ்வனாசார காரியத்தில் முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்ததால் ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே விபரீதமான கலகம் நிகழ்ந்ததென்பதை யாவருமறிவர். இனியாகிலும் முஸ்லிம்கள் இக்கெட்ட காரியத்தை ஒழித்து கலகங்களுக்கும் இடமளிக்காமலிருப்பார்களென்று எதிர் பார்க்கின்றோம்.

அலிபாதுஷா நாடக வழக்கு:—சென்ற வருஷம் நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் சென்னையில் மேல் குறிப்பிட்ட நாடக சம்மந்தமாய் K. சீனிவாசப் பிள்ளை கம்பெனியார் மீது நடவடிக்கை நடத்தியது நேயர்கள் அறிந்தவையே ஷை கம்பெனியார் அந்நாடகத்தில் முஸ்லிம்களுக்கு ஆக்ஷேபகரமாயுள்ள நபிமார்களின் வேஷம் தரித்தல் தொழுகை முதலிய சடங்குகளை பரிகசித்து நடித்தல் கோஷாமுறையைஇழிவு படுத்திக் காண்பித்தல் முதலியவைகளை இனிசெய்வதில்லை என்று கெவர்ன்மெண்டாரிடம் எழுதிவைத்து அக்காரியங்களை நடிக்காமல் நிறுத்திவிட்டார்களென்பதும் யாவருமறிந்ததே. இதுபோலவே சிலோன் மாத்தளையிலும் ஸ்டார் சினிமா மண்டபத்தில் மதுரை ஒரிஜினல் "ஸ்ரீ மீனலோசனி சற்குணசபா" நாடகக் கம்பெனியார் அலிபாதுஷா நாடகத்தை நடிக்க ஆரம்பித்தனர். இதை அறிந்த நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் மாத்தளை கிளை சபையார் சென்னையில் நடந்தவிஷயங்களை அவர்களுக்கு எடுத்துக் காண்பித்து எச்சரிக்கை செய்து அந்நாடகத்தில் முஸ்லிம்களால் ஆக்ஷேபிக்கத் தக்க விஷயங்களை நீக்கிவிட முயற்சிசெய்ததின் பயனாய் அதை அங்கீகரித்து கம்பெனியாரும் முஸ்லிம்களின் ஆக்ஷேபனைக் குறியவைகளை நீக்கிவிட்டதாகத் தெரிந்து நாம் சந்தோஷமடைகிறோம் இவ்விதமாகவே ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள சங்கங்களும் இவ்வாறு அனாச்சாரமான காரியங்களை ஒழிக்க முன்வந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாயின் அவ்வாபாசமான காரியங்கள் வெகு சுலுவாக அகற்றப்பட்டுப்போம் என்பதில் ஐயமில்லை. இவ்வரும் பெரும்காரியத்தில் முன்னின்றுழைத்தகாரியதரிசி ஜனாப் கா. மு. கி. செய்யிது அலவி முதலிய நண்பர்களை நாம் மிகவும் பாராட்டுகின்றோம்.

———